விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 பங்குனி 25 ஞாயிற்றுக்கிழமை (08.04.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 110

தர்மபுரம் 5-ம் யூனிட் காட்டுப் பகுதியில்

## கசிப்பு உற்பத்தி நிலையம் பொலிஸாரால் முற்றுகை

(மல்லாவி)

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள 5-ம் யூனிட் காட்டுப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை பொலிசார் சுற்றி வளைத்து 200 லீற்றர் கசிப்புக் கோடாவுடன் 20 லீற்றர் கசிப்பையும் மற்றும் கசிப்புக் காய்ச்சுவதற்கு பயன்படுத்திய உபகரணங்களைக் கைப்பற்றியுள்ளதுடன் சம்பவ இடத்தில் வைத்து சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்த பின்னர் கசிப்பு உற்பத்தி நிலையத்தை நிர்மூலமாக்கி உள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி 15

கூட்டமைப்பால்தான் பிரதமர் பதவி பாதுகாக்கப்பட்டது

## ரணிலுக்கு ஆதரவு வழங்கும்போது எந்த ஒப்பந்தமும் செய்யவில்லை

சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பிரதமருக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்தமையினால்தான் பிரதமரின் பதவி பாதுகாக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ள கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் ஊடகப்பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன், பிரதமர் ரணிலுக்கு ஆதரவு வழங்கும் போது எந்த கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தமும் செய்யப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

யாழில் உள்ள அவரது வாசஸ்தலத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். 15

2கிலோ கஞ்சாவுடன்

## மாதகல் பகுதியில் ஒருவர் கைது

(கரணவாய்)

மாதகல் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து இரண்டு கிலோ கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டதுடன் சந்தேக நபர் ஒருவரும் 15

## வடக்கு ஆளுநராக கூரேயே நீடிப்பார்

ஜனாதிபதி தெரிவித்ததாக தகவல் கசிவு

(கொழும்பு)

வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே அந்தப் பதவியில் தொடர்ந்து நீடிப்பார் என அறிய முடிகிறது. மேல் மாகாண 15

## யாழில் இருந்து தோணி மூலம்

இந்தியா சென்றவர் கைது

(சென்னை)

யாழ்ப்பாணத்தில் இருந்து தோணிமூலம் இராமேஸ்வரம் சென்ற துருக்கி நாட்டைச் சேர்ந்த நபர் ஒருவர் கைது செய்ய 15

மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும்

# சட்டவிரோதமான சிங்கள குடியேற்றம் நிறுத்தப்படும்

ஜனாதிபதி உறுதியளித்ததாக கூட்டமைப்பு தெரிவிப்பு

**(யாழ்ப்பாணம்) மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற சட்டவிரோத சிங்கள குடியேற்றங்களை நிறுத்துவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் உறுதியளித்துள்ளதாக கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையில்லா பிரேரணையின் முன்னதாக ஜனாதிபதியுடனான சந்திப்பில் மகாவலி திட்டத்தின் ஊடாக நடைபெறுகின்ற சிங்கள குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா 15

கண்டி. பன்வில பகுதியில்

## கங்கையில் நீராடச் சென்ற ஐவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

(கண்டி)

கண்டி, பன்வில பகுதியிலுள்ள ஹுலு கங்கையில் நீராடச் சென்ற ஐவர், நேற்று சனிக்கிழமை மாலை, நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் மூன்று பெண்கள் உள்ளடங்குவதாக பன்வில பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் சம்பவத்தில் உயிரிழந்த நால்வரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ள நிலையில் ஒருவரின் சடலம் இன்னும் கண்டறியப்படவில்லையென பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

காணாமல் போயுள்ளவரின் சடலத்தை கண்டறியும் 15

நம்பிக்கையில்லா பிரேரணையை தோற்கடிக்க

## கோடிக்கணக்கான பணத்தை பிரதமர் ரணில் கொடுத்தார்!

தகவலை கசியவிட்ட அமைச்சர் தயாசிறி



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கு கோடிக்கணக்கில் பணம் கொடுக்கப்பட்டதாக விளையாட்டுத் 15

## தமிழக மீனவர்கள் 19 பேர் விடுதலை

(மன்னார்)

தடுத்து வைக்கப்பட்டிருந்த 19 தமிழக மீனவர்களை விடுவிக்குமாறு மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த மீனவர்கள் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை மன்னார் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக் கடற்படை 16

## கல்வியை தொடர் பெற்றோர் வற்புறுத்தியமையினால் மாணவன் உயிர்மாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பாடசாலையில் கல்வியை தொடர பெற்றோர் வற்புறுத்திய காரணத்தினால் அதற்கு மறுப்பு தெரிவித்து மாணவன் ஒருவன், கடிதம் எழுதி வைத்துவிட்டு தனது உயிரை மாய்த்த சம்பவம் ஒன்று யாழில் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி வட்டக்கச்சி கட்சன் வீதியைச் சேர்ந்த தியாகேஸ்வரன் நிலாபவன் (வயது16) என்ற 15

ஐ.தே.கவின் பதவி நிலைகளை ஆராய

## கட்சியின் செயற்குழுவினால் தலைமைக்குழு நியமிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பதவி நிலைகளை மறுசீரமைப்பு தொடர்பில் அவசி ஆராய கட்சியின் செயற்குழுவால் தலைமைத்துவ குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பதவி நிலைகளை மறுசீரமைப்பது தொடர்பில் அந்தக் கட்சியின் செயற்குழு நேற்று கூடி ஆராய்ந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அலரிமாளிகையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது கட்சியின் தலைமைப் பதவியை மாற்ற செயற்குழு உறுப்பினர்களில் பெரும்பாலானோர் விரும்பவில்லை. 15

## பிரதமரை காப்பாற்ற சக்தி வாய்ந்த இருநாடுகள் நேரடித் தொடர்பு

இராஜதந்திர வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கூட்டு எதிரணியால் முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டதன் பின்னணியில் இரு சக்தி வாய்ந்த நாடுகள் நேரடியாகவே தொடர்புபட்டிருந்தன என்று, இராஜதந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்தில் 46 மேலதிக வாக்குகளால் தோற்கடிக் 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வாடகைக்கு

யா/நீராவியடி பிறவுண் வீதி அருகாமையில் வீடு வாடகைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு:-**
**0716274916**

(3549)

## வீடு வாடகைக்கு

2 or 3 பேர் கொண்ட சிறிய குடும்பம் or தொழில் புரியும், பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் 2 பெண்களுக்கு 2 அறை இணைந்த குளியலறையுடன் கூடிய வீடு இல.13/2,சேர் பொன்.இராமநாதன் வீதியில் (சரஸ்வதி திருமண மண்டபத்திற்கு அருகில்) வாடகைக்கு உண்டு. பார்வையிடும் நேரம் 08.04.2018 இன்று காலை 9 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை.

**தொடர்புக்கு:-**
**0777294322**

(2976)

## சணல் ஆடு விற்பனைக்கு

சணல் ஆடு ஆண் 1 வருடம். விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு:-**
**0766967301**

(3566)

## காணி விற்பனை

திருநெல்வேலி சந்திக்கும் கல்வியங்காட்டு சந்திக்கும் இடைப்பட்ட இராமசாமி பரிகாரி சந்தியில் இருந்து 10 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: **076 569 7586, 077 029 2546**
மாலை 3.00 - 5.00 மணிவரை தொடர்பு கொள்ளவும்

(3569)

## விற்பனைக்கு

யா/நீராவியடியில் வீடும் காணியும் விற்பனைக்குண்டு.

**தொடர்புகளுக்கு:-**
**0716274916**

(3549)

## அறை வாடகைக்கு உண்டு

யாழ்.வைத்தியசாலைக்கும் அடைக்கலமாதா கோயிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் 04 பேர் தங்கக்கூடிய அறையுடன் சேர்ந்த ATTACHED BATH ROOM AND TOILET வசதியுள்ள அறைகள் வாடகைக்கு உண்டு. அரச ஊழியர்கள், மாணவிகள் தங்ககூடியவை .

**0774725429,0764541212**

(3567)

மோட்டார் சைக்கிள் லைசன்ஸ் உள்ளவர்களுக்கு 50,000/- முதல் 63,000/- சம்பளத்துடன்

## கட்டார் வேலைவாய்ப்பு

(கட்டார் லைசன்ஸ் பெறும் ஏற்பாட்டுடன்)

**டுபாய் குவைத்** — Hotel Waiter, Steward, Cooks, Commis, Sales Associates (Female) A/C Technician மின் உபகரண பழுதுபார்ப்போர்

**மாலைதீவு** — மேசன், பிளம்பர், காப்பென்ரர், மின் இணைப்பாளர், கட்டிட பணி உதவியாளர்

விபரங்களுக்கு **0777 324 004**

(A-2150)

வடக்கு மாகாண ஏக முகவர் SIKARAM ACADEMY Business • Hospitality • Media FAST TRACK to CAREERS
221 – 1/1, மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம் தொ.பே.: 021 - 221 9 221

இலங்கையின் முதல்தர வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் Emerald Isle Manpower & Travel Services The Sri Lankan Recruitment Specialists
407-2/1, Galle Road Mt.Lavinia

வடக்கு ஹொட்டேல் பயிற்சி வரலாற்றில் சாதனை! அமெரிக்க Mc Donalds இல் மாதம் 50,000/- க்கு மேல் சம்பாதிக்கும் சிகரம் மாணவர்

## இப்போது! 122 நாடுகளில் இயங்கும் அமெரிக்க Marriot Hotel வேலைவாய்ப்பு



நீங்களும் O/L உடன் விரும்பிய நாடு சென்று 50,000/- முதல் பல இலட்சங்கள் வரை **சம்பாதிக்க...**

10ம் அணி **BUSINESS & Hotel Management** Entry Level with FREE ENGLISH COURSE **4** MONTHS DURATION

- கொழும்பில் பகுதிநேர வேலையுடன் ஹொட்டேல் டிப்ளோமா (NVQ) — சுவிஸ், அவுஸ்ரேலியா, நியூசிலாந்து, கனடா விசா
- சிங்கப்பூரில் வேலைவாய்ப்புடன் ஹொட்டேல் டிப்ளோமா OR டுபாய், கட்டார், குவைத், சவுதி ஹொட்டேல் வேலைவாய்ப்பு

OR உல்லாசப் பயணக் கப்பல் வேலைவாய்ப்பு

பயிற்சி / முன்னனுபவம் உள்ளவர்களுக்கு உடனடி வெளிநாட்டு வேலைவாய்ப்பு

பதிவுகளுக்கு **077 36 16 798**

கற்கைநெறி ஆரம்பம் ஏப்ரல் 16 திங்கள்

9வது ஆண்டில் 9th Year SIKARAM ACADEMY Business • Hospitality • English FAST TRACK to CAREERS Sri Lankan Entrepreneur of the Year 2017

221-1/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 021 221 9 221 www.sikaram.lk

(A-2150)

பதவி நீக்குமாறு சு.க உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

தமது பதவிகளில் இருந்து தம்மை நீக்குமாறு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து இந்த கோரிக்கையை முன் வைத்துள்ளனர்.

கடிதம் ஒன்றின் மூலம் ஜனாதிபதியிடம் இந்த கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தயாசிறி ஜயசேகர கூறியுள்ளார். (ம)

நாற்புறமும் தோட்டக் காணிகள் சூழ்ந்த இரம்மியமான சூழலில் குடும்பமாகவோ, குழுவாகவோ தங்கக்கூடிய யாழின் ஒரே தொடர்மாடி வீட்டுத் தொகுதி

## நாள் கிழமை மாத வாடகைக்கு



தளபாடங்களுடன் 2/3 அறை, வரவேற்பறை, சாப்பாட்டறை, குசினியுடன் கூடிய வீடுகள்...
கேபிள் தொலைக்காட்சி, குளிர்சாதனப் பெட்டி, குழந்தைகள் பூங்கா, நீச்சல் தடாகம், கருத்தரங்க/கொண்டாட்ட மண்டபம், மொட்டை மாடி, A/C, WiFi , Telephone,intercom
Managed By: SIKARAM ACADEMY, School of Hospitality

அழையுங்கள்: **076 864 0726 | 021 450 3861**

(A-2150)

கொட்டைக்காடு ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு, யாழ்ப்பாணம்
www.shakthiholidayhome.com

## வாகன சாரதி

கொழும்பு வெள்ளவத்தையில் இயங்கும் சேவை நிறுவனத்திற்கு யாழ்-கொழும்புக்கு கனரக வாகனம் செலுத்தக் கூடிய வாகன சாரதி தேவை.

குறிப்பு:உணவு மற்றும் தங்குமிட வசதி உண்டு.

**தொடர்புகளுக்கு:-**
**0763760022, 0766908963**

(A-2159)

## புதுவருட கொண்டாட்டம்

இலவசம்! இலவசம்!! இலவசம்!!!

மதியம்/இரவு உணவுகள் இரண்டினை கொள்வனவு செய்து ஒன்றினை முற்றிலும் இலவசமாக பெற்று புதுவருடத்தை யாழ்பாடியுடன் கொண்டாடிடுங்கள். நிபந்தனைக்கு உட்பட்டது.

**யாழ்பாடியில்**

49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
0212226868, 0777360353, 0759875800

## அலுவலக வேலைவாய்ப்பு

யாழ்.நகரில் இயங்கும் சேவை நிறுவனம் ஒன்றில் கீழ் காணும் பதவி வெற்றிடங்கள் உண்டு.

- Branch Executive-ஆண்
- Billing Staff-பெண்

தகைமைகள்

01.A/L சித்தி
02.கணனி அறிவு தேவை
03.ஆங்கில அறிவு விரும்பத்தக்கது.

குறிப்பு:-யாழ்.மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-0763760022, 0766906963

(A-2159)

## MATHS GROUP CLASSES

(Through English and Tamil Medium)

தரம் 6 தொடக்கம் 11 வரையான மாணவர்களிற்கான கணித குழு வகுப்புக்கள்(ஆங்கில தமிழ் மொழி மூலமான) வீடு வந்து திறம்பட பிரபல தேசிய பாடசாலை ஆசிரியரினால் கற்பிக்கப்படும்.

**தொடர்பு:-0774540529**

(யாழ்ப்பாணம்-மல்லாகம் எல்லைக்குட்பட்டவர்கள்)

Note:- கடந்த 2017 G.C.E O/Lல் 16 மாணவர்களில் (Maths English medium) 11 மாணவர்கள் A சித்தி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(3568)

## காணி விற்பனைக்கு

நாவற்குழியில் அமைந்துள்ள 1 ஏக்கர் 3 றூட் 9 பேர்ச் விஸ்தீரணமுள்ள காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு:-**
**0772013190**

(3570)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு **021 221 7603, 021 567 1532**



# VACANCY

ARE YOU THE **RIGHT** PROFESSIONAL **WE ARE SEEKING?**

## For Coordinator (Female)

Scheduling daily time tables and examinations, Handling telephone and face - to- face enquiries, Developing and maintaining effective relationships among the students and the staff.

- Should have passed A/L
- Excellent knowledge in English (spoken & written)
- Computer skills in Ms Word & Excel

**Other Vacancies**

- Marketing Representative
- Kids' Teachers
- Cleaning Staff (Lady)

Please submit your resume with a recent photograph and cover letter by e-mail : **jaffnabwea@gmail.com**

*Apply before 29th of April*

British Way English Academy

HR Division
BRITISH WAY ENGLISH ACADEMY
No 15, Kannathiddy Road, Jaffna
0767659415, 021 300 5555

(A-2158)

# நிலக்கண்ணிவெடி அகற்றல் குறித்த சிறந்த நடவடிக்கையை தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ள வேண்டும்



(கொழும்பு)

நிலக்கண்ணிவெடி அகற்றல் குறித்த சிறந்த நடவடிக்கையை தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என ஆளணி எதிர் கண்ணி வெடிகளை தடை செய்வதற்கான சாசனத்தின் விஷேட தூதுவரான இளவரசர் மிரெட் அல் ஹுசைன் இலங்கைக்கு அறிவுரை கூறியுள்ளார்.

தமது டுவிட்டர் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவொன்றில் அவர் இந்த விடயத்தைக் தெரிவித்தார்.

கடந்த மாதம் அவர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த போது, முகமாலை பகுதிக்கு மேற்கொண்ட பயணம்தொடர்பாக வெளியிடப்பட்டிருந்த பதிவொன்றை மேற்கோள் காட்டி அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். (இ-7)

# ஐக்கிய தேசியக் கட்சியில் மாற்றம் அலரிமாளிகையில் விசேட கூட்டம்

(கொழும்பு)


ஐக்கிய தேசியக் கட்சியில் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள் தொடர்பிலான அறிக்கை அக்கட்சியின் தலைவரும், பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவிடம் நேற்று கையளிக்கப்பட்டது.

அலரிமாளிகையில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தின்போதே, இந்த அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி மாதம் இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பெற்றுக்கொண்ட பெறுபேற்றினையடுத்து, கட்சிக்குள் வெகுவிரைவிலேயே மறுசீரமைப்புக்களை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தல்கள் அதிகரித்து வந்தன.

இதனால், இவ்விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக கட்சியின் உயர்பீடத்தினால் குழுவொன்றும் அமைக்கப்பட்டது.

இந்நிலையில், நேற்று கூடிய கட்சியின் செயற்குழுக் கூட்டத்தின்போது அறிக்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டதுடன், இன்று மீண்டும் கூடவுள்ள செயற்குழுக் கூட்டத்தில் கட்சியின் புதிய நியமனங்கள் தொடர்பில் அறிவிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.



இதற்காக ஏற்கனவே, கட்சியின் முக்கிய பதவிகளிலிருந்தோர் இராஜினாமா செய்துள்ளனர் என்பதோடு, இளைய தலைமைகளுக்கு வாய்ப்பளிக்கும் வகையிலேயே இந்த புதிய நியமனங்கள் அமையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)

# பிரதி சபாநாயகர் இராஜினாமா!

(கொழும்பு)

பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால பதவியை இராஜினாமா செய்வதாக தனக்கு அறிவித்துள்ளதாக சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.



தான் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதால், பிரதி சபாநாயகர் பதவியில் இருந்து விலகுவதாக திலங்க சுமதிபால கூறியதாக சபாநாயகர் நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

அதேவேளை பதவி விலகும் கடிதத்தை ஒரு மாதத்திற்கு முன்னர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பி இருந்ததாக அவர் தெரிவித்தார்.

பிரதி சபாநாயகர் தனது பணிகளை முன்னெடுக்க இடமளிக்கப் போவதில்லை என ஐ.தே.க. எம்.பி.க்கள் நாடாளுமன்றத்தில் தெரிவித்ததையடுத்தே சபாநாயகர் இதனைக் கூறியுள்ளார். (இ-7)

# போர் வெற்றியைக் கொண்டாடும் இராணுவ அணிவகுப்பு இனி இலங்கையில் நடத்தப்படாது

## ஜெனிவாவில் அரசு அறிக்கை

(கொழும்பு)



விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் வெற்றியை கொண்டாடும் வகையில் இராணுவ அணி வகுப்பை நடத்த போவதில்லை எனவும் வெற்றி பெற்ற தினத்தை நினைவுகூரும் தினமாக பெயரிட்டுள்ளதாகவும் இலங்கை அரசாங்கம் ஜெனிவா மனித உரிமை பேரவையில் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

இது குறித்து கொழும்பு சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. அந்தச் செய்தியில், இலங்கை அரசாங்கம் இப்படியான அறிக்கையை முதன்முதலில் ஜெனிவா மனித உரிமை பேரவையில் சமர்ப்பித்துள்ளது. சகவாழ்வு செயற்பாடுகளின் கீழ் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ற தலைப் பின் கீழ் இந்த விடயங்கள் தெரிவிக்கப் பட்டுள்ளன. இலங்கை அரசாங்கத்தின் அறிக்கை மனித உரிமை பேரவையில் அங்கம் வகிக்கும் தூதுவர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# பொய்யான தகவலை பரப்பிய ரகித ராஜபக்ஷவுக்கு எதிராக விசாரணை தேவை-பைசால்

(கொழும்பு)



முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக அவதூறு பரப்பிய ரகித ராஜபக்ஷவின் பேஸ்புக் கணக்கை விசாரணைக்குட்படுத்தி உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென, சுகாதாரப் பிரதியமைச்சர் பைசால் காசிம் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்ப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பணம் பெற்றுக் கொண்டதாக கூறப்பட்ட வதந்திகளுக்கு பதிலளிக்கும் வகையிலேயே நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இவ்வாறு தெரிவித்தார்.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை எதிர்த்து வாக்களிப்பதற்காக முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 7 பேரும் தலா 750 மில்லியன் ரூபாய் பெற்றுக்கொண்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷவின் மகன் ரகித ராஜபக்ஷ தனது பேஸ்புக்கில் குறிப்பிட்டிருந்தார்.

இது நாடாளுமன்ற சிறப்புரிமையை மீறும் செயல் என்பதுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியில் பாதிப்பை ஏற்படுத்த திட்டமிட்டு செய்யப்பட்ட செயற்பாடாகும்.

அத்துடன் முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை பாதிக்கும் வகையாக இவை அமைந்துள்ளது.

மேலும் சில அரசியல் கட்சிகள் மக்கள் வரிப்பணத்திலிருந்து கொடுப்பனவுகளையும் சுகபோக வாழ்க்கைக்காக அரச திணைக்களங்களிலிருந்து சொகுசு வாகனங்களையும் சில இணையத்தள முகவர்களுக்கு வழங்குகின்றனர்.

இவர்கள் பொய்யான செய்திகளை உண்மையாக்கி குழப்பத்தை ஏற்படுத்துகின்றனர்.

ஆகையால் தவறான இணையத்தளங்கள் மற்றும அவதூறு சொல்லுகின்ற தனி நபர்களுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென, சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார். (இ-7)

# பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த முக்கிய நபர்கள் நான்கு பேர் கைது

பிரபல பாதாள உலகக்குழுத் தலைவன் அங்கொட லொக்கா மற்றும் மாகந்துரே மதுஷின் சகாக்கள் என அறியப்படும் நான்கு சந்தேக நபர்கள் பொலிஸாரால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து சட்டவிரோத துப்பாக்கி கள் மற்றும் கஞ்சா என்பனவும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# சிரியாவில் வான்வழி தாக்குதலில் 5 குழந்தைகள் உட்பட 27 பேர் பலி!

(டமாஸ்கஸ்)

சிரியாவில் நடத்தப்பட்ட வான்வழி தாக்குதலில் ஐந்து குழந்தைகள் உட்பட 27 பொது மக்கள் உயிரிழந்துள்ளனர் என சிரியா மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல்ஆசாத்துக்கு எதிராக ஆயுதம்தாங்கி போரில் ஈடுபட்டு வரும், கிளர்ச்சிக்குழுக்கள், இராணுவத்தின் ஒரு பிரிவு ஆகியவற்றை ஒடுக்கும் பணியில் ஜனாதிபதி ஆதரவு படையினர் கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் ஈடுபட்டு வருகின்றனர். 6 ஆண்டுகளாக நடந்து வரும் உள்நாட்டுச் சண்டையில் இலட்சக்கணக்கான மக்கள் இதுவரை பலியாகியுள்ளனர்.



இந்நிலையில், சிரியாவின் கிழக்கு காட்டா பகுதியில் உள்ள டவ்மா நகரில் நேற்று முன் தினம் இரவு கிளர்ச்சியாளர்களை குறிவைத்து வான்வழி தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலில் ஐந்து குழந்தைகள் உட்பட 27 பொது மக்கள் பரிதாபமாக உயிரிழந்தனர் என சிரியா மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது. (இ-10)

# பிராவோ அதிரடி; சென்னை வெற்றி

மும்பை அணிக்கு எதிரான முதலாவது ஐ.பி.எல்., லீக் போட்டியில் டுவைன் பிராவோ அரைசதம் கடந்து கைகொடுக்க, சென்னை ஒரு விக்கெட்டால் திரில் வெற்றி பெற்றது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.,) தொடரின் 11ஆவது சீசன் நடக்கிறது. மும்பை, வான்கடே மைதானத்தில் நடந்த முதல் லீக் போட்டியில் 'நடப்பு சம்பியன்' மும்பை, சென்னை அணியில் இம்ரான் தாகிர், மார்க் வூட், டுவைன் பிராவோ, வோட்சன் என 4 வெளிநாட்டு வீரர்கள் இடம் பிடித்தனர். மும்பை அணியில் 20 வயது இளம் வீரர் மயங்க் மார்கண்டே அறிமுகமானார். நாணயச்சுழற்சியில் வென்ற சென்னை களத்தடுப்பை தேர்வு செய்தது.

இதனடிப்படையில் துடுப்பெடுத்தாடிய மும்பை அணிக்கு எவின் லீவிஸ் (0) ஏமாற்றினார். அணித் தலைவர் ரோகித் சர்மா (15) நிலைக்கவில்லை. பொறுப்பாக ஆடிய சூர்ய குமார் யாதவ் (43), இஷான் கிஷான் (40) நம்பிக்கை அளித்தனர். கடைசி நேரத்தில் ஹர்திக் பாண்ட்யா (22*), குர்னால் பாண்ட்யா (41*) கைகொடுக்க, மும்பை 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்கள் எடுத்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சென்னையின் முக்கிய வீரர்கள் சொதப்பலான ஆட்டத்தை வெளிப்படுத்தியபோதிலும், அபாரமாக ஆடிய டுவைன் பிராவோ, 30 பந்துகளில் 7 சிக்சர், 3 பவுண்டரி உட்பட 68 ஓட்டங்கள் எடுத்து கைகொடுக்க, சென்னை 19.5 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை (169 ஓட்.) அடைந்தது.


**தேவை**

தமிழ் மருந்துக் கடைக்கு பெண் உதவியாளர், உணவகத்துக்கு பெண் சமையல் உதவியாளர் தேவை.
(தங்குமிடவசதி உண்டு)
(3564)

தொடர்புகளுக்கு
**077 764 2009**



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி புகழ்ச்செல்வி சந்திரமோகன்



திருமதி ரேகா கமல்ராஜ்



திருமதி சிவலோஜினி இராகுலன்



திருமதி சசிகலா விக்கினேஸ்வரன்

கல்விமாணிப் பட்டம் பெற்றீர்கள் களிப்படைந்தீர்கள் வாழ்க
எல்லையில்லாக் கல்வி மேலும் பெற்று ஏற்றம் பெற வாழ்த்துகிறோம் வாழ்க

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,**
**கிளி/கனகாம்பிகைக்குளம் அ.த.க. பாடசாலை, கிளிநொச்சி.**

(C-2167)





நயினாதீவு

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம்

### வர்ண வேலைகளுக்கான கூறுவிலை கோரல்

மேற்படி ஆலயத்தின் பிள்ளையார் தேர், முருகன் தேர், மஞ்சம் ஆகியவற்றுக்கு வர்ணப்பூச்சு வேலை செய்வதற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றது. இக்கூறுவிலை விண்ணப்பங்கள் எதிர்வரும் 15.04.2018ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்பதாக "வர்ண வேலைகளுக்கான கூறுவிலை" என்ற தலைப்பிட்டு செயலாளர், அறங்காவலர் சபை, **நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,** நயினாதீவு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

அல்லது ஆலயப் பணிமனையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள அஞ்சல் பெட்டியில் நேரடியாக சேர்க்கலாம். நல்ல தரமான பெயின்ற் வகைகள் பாவிக்கப்பட வேண்டும் என்பதுடன், கூறுவிலைகள் பெயின்றுக்கும் கூலிக்குமாக அமைய வேண்டும்.

**வேலைத்திட்டங்களை நேரில் வருகை தந்து பார்வையிட்டுக் கொள்ளலாம்.**
**விண்ணப்ப முடிவுத் திகதி 15.04.2018 மாலை 5.00 மணி**

அன்னையின் பணியில்
நா.யோகநாதன்
செயலாளர், அறங்காவலர் சபை
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு.

(C-2165)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

க.பொ.த (சா/த) பரீட்சையில் (2017) சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற எனது அன்பான மாணவச் செல்வங்களான

- **ப. அபிராம் - 9A (யா/இந்துக் கல்லூரி)**
- **கி.கஜலக்ஷி - 9A (யா/வேம்படி மகளிர் கல்லூரி)**
- **ற.நிதூஷிகா - 8AC (யா/வேம்படி மகளிர் கல்லூரி)**
- **நி.நிவேதன் - 9A (யா/இந்துக் கல்லூரி)**

ஆகியோரை பாராட்டி வாழ்த்துவதோடு இவர்கள் மேன்மேலும் கல்வியில் சிறந்த பெறுபேறுகளைப் பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:
(C-2163) **ஷண் பாடசாலை சேவை, வலம்புரி T.C நவாலி.**


# மரண அறிவித்தல்கள்



## கந்தசாமி இரத்தினசோதி
### (இளைப்பாறிய ஆசிரியர்)

*சாவகச்சேரியைச் சேர்ந்த கந்தசாமி இரத்தினசோதி நேற்று (07.04.2018) சனிக்கிழமையன்று இறைபதம் எய்திவிட்டார்.*

*அன்னாரது பூதவுடல் இன்று (08.04.2018) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.30 மணி வரை அவரது மகனின் இல்லத்தில் வைக்கப்பட்டு பின்னர் இறுதிக் கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.*

(3571)

595/12,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:- மகன்
இரத்தினசோதி ஸ்ரீகரன்
சிரேஷ்ட விரிவுரையாளர் இரசாயனவியல்துறை
யாழ்.பல்கலைக்கழகம். 076 943 4065

## திருமதி
## தவமணிதேவி தர்மலிங்கம்



*வட்டுவாகலை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி தவமணிதேவி தர்மலிங்கம் நேற்று (07.04.2018) காலமாகி விட்டார்.*

*அன்னார் தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மகளும் சுகந்தினி, சுவேந்தினி (லண்டன்), சுபாஸ்கரன் (லண்டன்) சுபாசினி (லண்டன்), சுதாஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.04.2018) பி.ப 2.00 மணிக்கு வட்டுவாகலில் உள்ள அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வட்டுவாகல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

(C-2164)

வட்டுவாகல்

தகவல்:- அன்னலிங்கம் - சண்முகலிங்கம் (மருமகன்)
(கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர்)

# ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி வெடிபொருட்களுடன் கைது!

(கொழும்பு)

மீகொட, கொடகம பிரதேசத்தில் துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் தோட்டாக்களுடன் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசேட அதிரடிப்படையின் திட்டமிட்ட குற்றச் செயல்களை தடுக்கும் பிரிவின் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து நடத்தப்பட்ட தேடுதலில் இந்த சந்தேக நபர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கைது செய்யப்படும் போது அவரிடம் இருந்து 810 பொயின்ட் 22 தோட்டாக்கள், 9 மில்லி மீற்றர் தோட்டாக்கள் 330, ரி.56 ரக தோட்டாக்கள் 9, கைத்துப்பாக்கிக்கான மெகசீன் என்பவற்றை அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கொடகம, மீகொட பிரதேசத்தைச் சேர்ந்த இராணுவத்தில் இருந்து ஓய்வுபெற்ற அதிகாரியான 42 வயதான நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் ஹோமாகம நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் (இ-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு:
021 221 7603,
021 567 1532

குத்தகைக்கு

யாழ்ப்பாணத்தில் இசுசு 250 வகை 14 1/2 பெட்டி நீளமுடைய கன்டர் வாகனம் குத்தகைக்கு கொடுக்கப்படும்.
(3558)

தொடர்புகளுக்கு:- 077 818 5017

# பிள்ளையார் கோவில் உண்டியல் உடைப்பு



(கரணவாய்)

துன்னாலை புளியங்கியான் பிள்ளையார் ஆலயத்தின் உண்டியல் உடைக்கப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை 06.04.2018 இரவு இச் சம்பவம் நடைபெற்றிருக்கலாம் என கூறப்படுகிறது.

ஆலயத்திற்குள் நுழைந்த திருடர்கள் அலவாங்கின் உதவியுடன் உண்டியலை உடைத்து அதிலிருந்த பணத்தை திருடியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவம் தொடர்பில் நேற்றுக் காலை நெல்லியடிப் பொலிஸில் முறையிட்டுள்ளது. (இ-60)

## கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்(வ-து) மெகாகோப்சிற்றி, கிளிநொச்சி.

புதிதாக எமது கிளிநொச்சி மெகாகோப் சிற்றியில் அமைக்கப்பட்ட கடலுணவு மற்றும் இறைச்சி விற்பனை 07.04.2018ஆம் திகதி சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

**இங்கே,**

- கடலுணவு வகைகள்
- இறைச்சி
- ஊர் முட்டை
- சேதன முறையில் உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறி வகைகள்
- நஞ்சற்ற பழங்கள்

என்பனவற்றை பெற்றுக்கொள்ள முடியும். அரச மற்றும் தனியார் நிறுவன ஊழியர்கள், பொதுமக்கள் எந்நேரமும் கடலுணவை மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**உங்கள் குழந்தைகளுக்கு நஞ்சற்ற உணவுகளை வழங்க நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்....**

(க-2160)

மெகாகோப் சிற்றி,
கனகபுரம், கிளிநொச்சி.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 | 20 |
| - | - |
| 11 | 03 |
| - | - |
| 1950 | 2017 |

திதி: 08.04.2018

பங்குனி மாத
தேய்பிறை அட்டமி

### சின்னத்துரை கேசவலிங்கம்

இறந்தும் இறவாமல் எம் இதயங்களில்
தெய்வ சுடரொளியாய் வீற்றிருக்கும்
எங்கள் அப்பாவே உங்கள் அன்பு வழி நின்று
நல்லறம் பேணி இவ்வுலகில் வாழ
உங்கள் ஆசீர்வாதம் வேண்டி நிற்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(3556)

கொக்குவில் மேற்கு, கொக்குவில். குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்.திருமதி.

### திலகவதி மாணிக்கவாசகர்

தோற்றம்: 1944.03.23 மறைவு: 2017.04.08



ஆண்டொன்று கழிந்தாலும்
அழியாதம்மா உன் நினைவு
மாண்டு மறைந்திடுமோ மகிமை
தங்கும் நின் பாச ஒளி
நீண்ட தூரம் சென்றாலும் எம்
நெஞ்சத்தில் நீதான் அம்மா!
மீண்டும் எம்மை காண
வருவதெப்போ எம் தாயே!

க.மாணிக்கவாசகர்
மா.பஞ்சாட்சரம்
மா.சிவசுப்பிரமணியம்
மா.தாருகாசினி

## கண்ணீர் அஞ்சலி

யா/சண்டிலிப்பாய் வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலையின் முதல்வர் திரு. கணேசன் கார்த்திகேயன் அவர்களின்
அன்புத் தந்தையார்

### பொன்னம்பலம் கணேசன்



அவர்கள் சிவபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் பகிர்கின்றோம். அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

(3562)

பாடசாலை நலன்புரிக்கழகம்,
யா/சண்டிலிப்பாய் வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலை

## இராசி பலன்

**08.04.2018**

பங்குனி 25, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.12 மணிக்கு
அட்டமி பின்னிரவு 2.08 மணிவரை
பூராடம் மாலை 5.46 மணிவரை
சுபநேரம் 9.07-10.37 மணிவரை
இராகுகாலம் 4.37-6.07 மணிவரை

வளவன்

கிரகநிலை: சூரி, புத; சுக்; ராகு; கேது; சனி, சந், செவ்; குரு

சந்திராஷ்டமம்
இரவு 12.33 மணிக்கு
மகர-சந்

**மீனம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**மேடம்:** ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும், நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும்.

**இடபம்:** உறவினர்களிடம் பேசும் போது கவனம் தேவை, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், குடும்பப் பொறுப்புக்கள் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்:** பழைய சடங்கு சம்பிரதாயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, கல்யாணக் கனவுகள் நனவாகும் நாள், போசன சுகமுண்டு.

**கும்பம்:** ஆடம்பர பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, அந்நிய தேசத் தொடர்புகள் அனுகூலம் தரும், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**கடகம்:** உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வியாபார விருத்தியுண்டு.

**மகரம்:** திட்டமிட்ட காரியங்களில் திருப்பங்கள் ஏற்படலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு:** சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், மனதில் இனம்புரியாத கற்பனைகள் தோன்றி மறையும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** பக்க பலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், மனச் சஞ்சலங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**துலாம்:** புத்திசாதுரியமான செயற்பாடுகளில் புகழ் பெறுவீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், உறவினர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கன்னி:** பெற்றோர் மீது பிரியம் கூடும், எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பயணங்களால் பலனுண்டு.



நல்லூர் வடக்கு ஸ்ரீசந்திரசேகர பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ பெருவிழா நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்ப மானது. தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ள மஹோற்சவ பெருவிழாவில் எதிர்வரும் சித்திரை புத்தாண்டு அன்று தேர்த்திருவிழா இடம்பெறவுள்ளது. மஹோற்சவ காலங்களில் தினமும் மாலை தெய்வீக சொற்பொழிவு ஆலயத்தில் இடம்பெற்றுவருகின்றது. சின்மயா மிஷன் யாழ் வதிவிட ஆச்சாரியார் ஜாக்ரத சைதன்யா சுவாமிகள் "பகவத்கீதையின் மகத்துவம்" எனும் தலைப்பில் விசேட சொற்பொழிவாற்றி வருகின்றார். (படங்கள்: பொ.சோபிகா)

# பணமோசடி தொடர்பில் அதிகளவு முறைப்பாடுகள்

## அவதானமாக இருக்குமாறு பொலிஸார் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவிடம் பணமோசடி தொடர்பில் அதிகளவான முறைப்பாடுகள் கிடைப்பதாக தெரிவித்துள்ள குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளனர். இது குறித்து நேற்று பொலிஸாரிடம் கேட்ட போது,

யாழில் கடந்த காலங்களை விட தற்போது காசோலை மோசடிகள் அதிகரித்துள்ளதாகவும் அது தொடர்பாக மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். யாழ். பொலிஸ் பிரிவுக்கு வரும் அநேகமான முறைப்பாடுகள் காசோலை மோசடி தொடர்பானதாகவுள்ளன.

இவை கடந்த காலங்களை விட தற்போது அதிகரித்துள்ளன. சட்டவிரோதமாக சீட்டு பிடிப்பவர்கள் மற்றும் அதிகரித்த வட்டிக்கு கொடுப்பவர்களுமே இவ்வாறான மோசடிகளில் ஈடுபடுகின்றனர்.

காசோலை மோசடி தொடர்பான முறைப்பாடுகள் பொலிஸ் நிலையத்திற்கு வந்து அவை நீதிமன்றம் செல்லும் போது சில வேளைகளில் நீதிமன்றில் முறைப்பாட்டாளர்களுக்கு எதிராகவும் வழக்குகள் திரும்பியுள்ளன. ஏனெனில் அவர்கள் பொலிஸ் முறைப்பாடு செய்யும் போது வியாபார நோக்குக்காக தான் காசோலை கொடுத்ததாக முறைப்பாட்டை பதிவு செய்வார்கள். பின்னர் நீதிமன்ற விசாரணைகளின் போதே இவர்கள் அதிகரித்த வட்டிக்கு காசோலை மாற்றியதாக தெரியவந்து. அவர்களுக்கு எதிராக வழக்குகள் திரும்பிய சம்பவங்களும் நடந்திருக்கின்றன. எனவே பொதுமக்கள் வட்டிக்கு பணம் கொடுக்கவோ வாங்கவோ வேண்டாம். பணத்தேவைகளுக்கு வங்கிகளை நாடுங்கள் அல்லது அரசாங்கத்திற்கு வரிப்பணம் உரிய முறையில் கட்டி பதிவு செய்தவர்களுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளுங்கள். அதன் மூலமே மோசடிகளை தவிர்த்து கொள்ளலாம்.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் காசோலை மோசடி தினந்தோறும் அதிகரித்து வருகின்றது. இந்த காசோலை மோசடி வர்த்தக நிறுவனங்கள் மற்றும் சில தெரிந்த நபர்களிடையே இடம்பெறுகின்றது. மேலும் நகைகளை வாங்கிவிட்டு நம்பிக்கை மோசடிகளும் நடைபெறுகின்றன.

மீற்றர் வட்டிக்கு பணம் கொடுத்து ஏமாறும் சம்பவங்களும் அடிக்கடி நடைபெறுகின்றன. ஆகவே இது தொடர்பில் கொடுப்பவர்களும் வாங்குபவர்களும் அவதானமாக இருக்க வேண்டும் என பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (இ-4)

# ஈழத்தமிழரின் இன்னல்கள் குறித்து தமிழக சட்டமன்றத்தில் பேசுவேன்

## கருணாஸ் அனந்தியிடம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஈழத்தமிழர்களின் இன்னல்கள் குறித்தும் தற்போதைய நிலை குறித்தும் தமிழ்நாடு சட்டமன்றத்தில் பேசுவதாக சட்ட மன்ற உறுப்பினரும் நடிகருமான கருணாஸ் வட மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரனிடம் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் ஏதிலிகளாக வாழ்ந்து வரும் உயர் கல்வி வாய்ப்பு கிடைக்காத, மறுக்கப்படும் ஈழத்தமிழ் மாணவர்களின் கல்வித் தேவையினை நிறைவு செய்யும் வகையில் கல்லூரி ஒன்றை அமைப்பதற்கு தமிழ்நாடு சட்ட மன்ற உறுப்பினர் கருணாஸ் முயற்சித்து வருகின்றார். அக் கல்லூரிக்கான



அடிக்கல் நாட்டு விழாவில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனைக் கலந்து கொள்ளுமாறு அவரிடம் நேரில் அழைப்பு விடுத்திருந்த கருணாஸ் அமைச்சர் அனந்தி சசிதரனையும் சந்தித்தார். வடமாகாண வெளிவிவகார அமைச்சர் அலுவலகத்தில் நேற்று முன் தினம் மாலை இச்சந்திப்பு இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. (இ-4)




# பொன் விழா மலர், வெளியீடு

(யாழ்ப்பாணம்)

பாலர் கல்விக்கழக நிர்வாகத்தின் கீழுள்ள 9 ஞானக் குழந்தை இல்ல பாலர் பாடசாலைகள் இணைந்து நடத்தும் தேனென இனிக்கும் மழலை மொழியிலான பேச்சுத்திறன் காணும் வைபவமும் பொன் விழா மலர் வெளியீடும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் ராஜா கிறீம் ஹவுஸ் கம்சிகா மண்டபத்தில் காணி விசேட மத்தியஸ்தர் சபை உறுப்பினரும் பாலர் கல்விக்கழகத் தலைவருமான ஏஸ்.பி.காசிநாதன் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச சபை தவிசாளர் த.தியாகமூர்த்தி, சிறப்பு விருந்தினராக காணி விசேட மத்தியஸ்தர் சபை உறுப்பினர், ஓய்வுநிலை கணக்காளர் கே.எம்.இராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ

# வதிரி முன்பள்ளி விளையாட்டு விழா

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் வதிரி முன்பள்ளி விளையாட்டுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் உல்லியனொல்லை ஆலய முன்றலில் பிரதேசசபை செயலாளர் அ. வினோராஜ் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பிரதேச சபை தவிசாளர் தங்கவேலாயுதம் ஐங்கரனும் சிறப்பு விருந்தினராக பிரதேச சபையின் உதவித் தவிசாளர் க.பொன்னையாவும் கலந்து கொள்வர். (இ-60)

# சங்காபிஷேக விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி ஸ்ரீ நாககன்னியம்பாள் ஆலய வருடாந்த பங்குனித் திங்கள் அஷ்டோத்திர சங்காபிஷேக விஞ்ஞாபனம் நாளை திங் கட்கிழமை நண்பகல் . நடைபெறும். (இ

# இரு நூல்கள் அறிமுகம் இன்று

(யாழ்ப்பாணம்)

பெயரிடாத நட்சத்திரங்கள் 27 பெண் போராளிகளில் 70 கவிதைகளைத் தாங்கி வெளிவரும் நூல் மற்றும் பூவுலகை கற்றலும் கேட்டலும் அவுஸ்திரேலிய ஆதி குடிகளின் கவிதைகள் இரு நூல்கள் அறிமுகம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் திருமறைக் கலாமன்றம் கலைத்தூது அழகியல் கல்லூரியில் சு.ஶ்ரீகுமரன் தலைமையில் இடம்பெறும். இந்நூல்களில் கருத்துரைகளை சி.கருணாகரன், ந.குகபரன் நா.தவராஜ், சி.ரமேஷ் ஆகியோர் வழங்குவர்.

இந்நூல்களின் விற்பனை மூலம் கிடைக்கும் பணம் பெண் போராளிகளின் குடும்பத்திற்கு அல்லது பெண் தலைமைத்துவ குடும்பத்திற்கு வழங்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-7)

# கவிதை நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

எஸ்.ரி.திஸ்னுகனின் உளறல்கள் கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 3 மணியளவில் சங்கானை கலாசார மண்டபத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் எஸ்.ரி. அருள்குமரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் கலந்து கொள்வார். வரவேற்புரையினை, இ. றெனேக்சன் நூல் மதிப்பீட்டுரையை அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் எஸ். ரி. குமரன், வாழ்த்துரையினை மானிப்பாய் இந்துக் கல்லூரி ஓய்வுநிலை அதிபர் எஸ்.சிவனேஸ்வரன் ஆகியோர் வழங்கவுள்ளனர் (இ-7)

# சிறுவர் நாடகப் பயிற்சி முகாம்

(யாழ்ப்பாணம்)

செயற்றிறன் அரங்க இயக்கத்தின் ஏற்பாட்டில் சிறுவர் நாடக செயற்பாட்டாளர் தேவநாயகம் தேவானந்தின் சிறுவர் நாடகப் பயிற்சி முகாம் 9,10,11,12 ஆகிய திகதிகளில் பிரிவு I இற்கு காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரையும் பிரிவு II இற்கு பிற்பகல் 2 மணி முதல் மாலை 6 மணி வரையும் யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

இப்பயிற்சியில் பங்குபெறும் சிறுவர்கள் யாழ். பொது நூலகத்தில் மாதாந்தம் மேடையேற்றப்படும் நாடகங்களில் நடிப்பதற்கான வாய்ப்பையும் நல்லூர் நாடகத்திருவிழாவில் நடிக்கும் வாய்ப்பையும் பெறமுடியும் எனவும் பயிற்சி முடிவில் சான்றிதழ்களும் வழங்கப்படும் எனவும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இப்பயிற்சி முகாமில் பங்குகொள்ள விரும்பும் சிறுவர்கள் தமது பெயர், வயது, பாடசாலையின் பெயர், பங்குபற்றும் பிரிவு , இலக்கம் மற்றும் தொடர்புக்கான தொலைபேசி இலக்கம் ஆகிய தகவல்களை 077 311 2692, 075 048 1186 ஆகிய இலக்கங்களுக்கு குறுந்தகவல் அனுப்பி பதிவினை மேற்கொள்ள முடியும் எனவும் பதிவுக் கட்டணமாக 1000 ரூபாயும் பதிவிற்கான இறுதித்திகதி இன்று என்பதனையும் ஏற்பாட்டாளர்கள் மேலும் அறிவித்துள்ளனர்.

இது 8 வயது முதல் 10 வயது வரையான சிறுவர்களுக்கானது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மகளிர் தின நிகழ்வு


(யாழ்ப்பாணம்)

யாழ்.கொட்டடி கிராம அபிவிருத்தி சங்கமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் சர்வதேச மகளிர் தின நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணம் கொட்டடி சீனிவாசகம் வீதியில் அமைந்துள்ள நிலைய கட்டடத்தில் கிராம அபிவிருத்தி சங்கம், சனசமூக நிலையத்தின் தலைவர் நா.தனேந்திரன் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக கொட்டடி நமசிவாய வித்தியாலய பிரதி அதிபர் திருமதி. சிவகடாட்சம் பத்மமலர், சிறப்பு விருந்தினராக கொட்டடி கிராம அலுவலர் யூட் கோபிசாலினி, கௌரவ விருந்தினராக சமூர்த்தி உத்தியோகத்தர் மதுஷன் சாரங்கா ஆகியோர் கலந்து கொள்வர். (இ

# COMPUTER WISE KIDS

Introducting Technology To Young Minds




6 தொடக்கம் 12 வயதிற்குட்பட்ட சிறார்களுக்கான விடுமுறைகால கணனி வகுப்புக்கள் ஆரம்பம்
உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்
விண்ணப்ப முடிவுத்திகதி: 08.04.2018
வகுப்புக்கள் ஆரம்பம்: 09.04.2018 காலை 10மணி முதல்.

Scholorship Available | Low Rate & High Value | Qualified Lecturers

CiTE

Spend your school hoidays usefully by learning ICT.
For more information contact us: 021 221 4099.
Mobile: 0702583250, 0772928853.
CENTRE FOR IT EDUCATION
No: 125, Main Street, Jaffna.

# புதிய இரண்டு வீடுகள் விற்பனைக்கு


மிக மிக அமைதியான சூழலில் சுண்டிக்குளி/யாழ்.கச்சேரி அருகாமையில் அமைந்துள்ள இரண்டு புதிய வீடுகள் விற்பனைக்கு உண்டு.



**1. மேல்வீடு-1 பரப்பு காணியில் அமைந்துள்ளது.**
சுண்டிக்குளி-யாழ்.கச்சேரி அருகாமையில்.
அறைகள்-04,மண்டபம்-02,குளியலறை/மலசலகூடம்-02,சமையலறை-01,சாப்பாட்டறை-01.

**2.VILLA TYPE வீடு.**
**(2 பரப்பு காணியில் அமைந்தது).**
வீட்டு நிலப்பரப்பு-2200 சதுர அடி.
அறைகள்-04
மண்டபம்-02
குளியலறை/மலசலகூடம் -03
மலசலகூடம்-01,சமையலறை-01
(நவீன முறையில் வடிவமைக்கப்பட்டது).
சாப்பாட்டு அறை-01,வாகனத் தரிப்பிடம்.
(அமைதியான சூழல், வைத்தியர்களின் வசிப்பிடமாகவோ அல்லது விருந்தினர் விடுதியாகவோ பாவிக்கக்கூடியது).





விலைகள் பேசித் தீர்மானிக்கலாம்.

**தொடர்புகளுக்கு: 077 111 9535, 077 568 3395**

# சேவை நலன் பாராட்டு



திருமதி.
**திலகவதி செல்வரட்ணம்**
SLTS 2-I
(பகுதித் தலைவர்-ஆரம்பப்பிரிவு,
மனைப்பொருளியல் ஆசிரியர்,
யா/ஏழாலை மகா வித்தியாலயம்)

எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றி இன்று 8/4/2018 இல் ஓய்வுபெறும் அவர்களைப் பாராட்டி மகிழ்வதுடன் மேலும் அவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமையவும் இறைவனை வேண்டி வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்
ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ஏழாலை மகா வித்தியாலயம்

(3559)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: சூரி,செவ் 7 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: A/L/வங்கியாளர்
தொ.இ: B/8415

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 42 செவ் 2 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: Diploma/தனியார் தொழில்
தொ.இ: B/8418

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: BSc, MCA/ தனியார் தொழில்
தொ.இ: B/8419

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 28 செவ் 4 இல்
உயரம்: 160cm
தகைமை/தொழில்: A/L/அரசதொழில்
தொ.இ: B/8422

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மகம்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BSc/ அவுஸ்ரேலியா PR
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/8423

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மூலம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BA
தொ.இ: G/8426

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
உயரம்: 5'
தகைமை/தொழில்: HNDA/ அரசதொழில்
தொ.இ: G/8427

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 58
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BA, MA/ விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/8429

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

2017 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் 9A பெற்ற எமது வித்தியாலய மாணவி செல்வி.சிவதாசன் நிரோஜினி அவர்களையும் மற்றும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற



ஜெ.றெனா-8A C
து.டஜீவன்-7A B S
சு.டினோஜா-5A 3B C
க.நயுத்திரன்-2A 4B 3C
சி.பிரதீபா-3A 3B C S
த.கரணிகா-4B 2C S
ஜெ.கயூரி-4C 3S

மாணவர்களையும் மனதார வாழ்த்துவதுடன் அவர்கள் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக் கொள்ள உழைத்த அதிபர் ஆசிரியர்களையும் உளம் மகிழ வாழ்த்துகின்றோம்.


Congratulations

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ஏழாலை மகா வித்தியாலயம்.

(3560)

# இலங்கையின் கோரிக்கைக்கு அமையவே உதயங்க வீரதுங்க கைது செய்யப்பட்டார்

## அரச சட்டவாதி நீதவானுக்கு அறிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய அரபு அமீரகத்தில், ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கை தூதுவர் உதயங்க வீரதுங்க இலங்கை அரசின் கோரிக்கைக்கு அமைய விடுக்கப்பட்ட சிவப்பு அறிவித்தலின் பிரகாரமே கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அவரை இலங்கைக்கு கொண்டு வர வெளிவிவகார அமைச்சு ஊடாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட அரச சட்டவாதி உதார கருணாதிலக நேற்று முன்தினம் கோட்டை நீதவானுக்கு அறிவித்தார்.

மூன்றாம் நபர் கோரிக்கை ஒன்று இது தொடர்பில் ஐக்கிய அரபு அமீரகத்திடம் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், தற்சமயம் உதயங்க ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபி நகரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய அரபு அமீரகத்தை விட்டு உதயங்கவால் வெளியேற முடியாது என சுட்டிக்காட்டிய சிரேஷ்ட அரச சட்டவாதி உதார கருணாதிலக, அவரிடம் செல்லுபடியான கடவுச்சீட்டொன்று தற்சமயம் இல்லை எனத் தெரிவித்தார்.

ஏனெனில் அவரது கடவுச்சீட்டுக்கள் கோட்டை நீதிமன்றினால் இடைநிறுத் தப்பட்டுள்ளதால் அவரால் ஐக்கிய அரபு அமீரகத்தை விட்டு வெளியேறுவது சாத்தியமில்லை எனவும் அவர் கூறினார்.

2006 ஆம் ஆண்டி மிக் 27 ரக விமானங்களின் கொள்வனவின் போது இடம்பெற்றதாக கூறப்படும் 14 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி மோசடி குறித்த வழக்கு நேற்று முன்தினம் கோட்டை நீதவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் விசாரணைக்கு வந்த போதே சட்டமா அதிபர் சார்பில் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு உதவியாக மன்றில் ஆஜரான சிரேஷ்ட அரச சட்டவாதியிடம் நீதவான் லங்கா ஜயரத்ன, உதயங்க தொடர்பில் வினவிய போது இதனைத் தெரிவித்தார்.

கடந்த மார்ச் 26 ஆம் திகதி டுபாயில் வைத்து உதயங்க வீரதுங்க அந்த நாட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தமிழர் 11 பேர் கடத்தல் விவகாரம் இருவரின் விளக்கமறியலும் நீடிப்பு

(கொழும்பு)

கடந்த 2008, 2009ஆம் ஆண்டுகாலப்பகுதியில்கொழும்பில் மாணவர்கள் ஐவர் உட்பட 11 பேர் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இருவரையும் எதிர்வரும் 11ஆம் திகதிவரை மறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் நீதிமன்ற நீதவான் லங்கா ஜயரத்ன உத்தரவிட்டுள்ளார்.

திருகோணமலை, கன்சைட் முகாமிலிருந்து பொலித்தீன் பையால் சுற்றப்பட்ட சடலங்களை லொறியொன்றில் ஏற்றினர் என்ற சந்தேகத்தின் பேரில் கடற்படையின் முன்னாள் புலனாய்வு அதிகாரி கஸ்தூரிலாகே காமினி, 9ஆவது சந்தேக நபரான மென்டிஸ் ஆகியோரின் விளக்கமறியலே நீடிக்கப்பட்டது.

2008ஆம் ஆண்டு மற்றும் 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் தெஹிவளையில் வைத்து ரஜீவ் நாகநாதன், பிரதீப் விஸ்வநாதன், திலகேஷ்வரம் ராமலிங்கம், மொஹம்மட் நிலான், மொஹம்மட் சாஜித் ஆகிய மாணவர்கள் கடத்தப்பட்டிருந்தனர்.

அதே ஆண்டு, கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த கஸ்தூரி ஆராச்சிலாகே ஜோன் ரீட், மன்னார் அரிப்பு பிரதேசத்தைச் சேர்ந்த அமலன் லியோன், ரொஷான் லியோன், கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த அன்டனி கஸ்தூரி ஆராச்சி, திருகோணமலையைச் சேர்ந்த கனகராஜா ஜெகன், தெஹிவளையைச் சேர்ந்த மொஹம்மட் அலி அன்வர் ஆகியோரும் கொழும்பில் கடத்தப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் கடற்படையின் முன்னாள் பேச்சாளர் டி.கே.பி.தஸநாயக்க உட்பட எழுவருக்கு எதிராக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு கோட்டை நீதவான் நீதிமன்றத்தால் அறுவரும் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

ரியர் அட்மிரல் ஆனந்த குருகேவை இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக இரண்டு தடவைகள் குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு அழைத்தும் அவர் வருகை தரவில்லை என்று கடந்த அமர்வில் சி.ஐ.டியினர் அறிவித்திருந்தமைக் கமைய அவரை ஆஜராகுமாறு நீதிமன்றம் கட்டளை பிறப்பித்திருந்தது.

கடந்த 4ஆம் திகதி அவரிடம் வாக்குமூலம் பெற்றுக் கொண்டதாக நீதிமன்றத்தில் நேற்று அறிவித்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர், கடத்தலுடன் தொடர்புடையவர் என்று சந்தேகிக்கப்படும் கடற்படைக் கொமாண்டர் பிரசாத் ஹெட்டியாராச்சி தொடர்பில் வினவப்பட்டதாகவும் அறிவித்தனர்.

ஹெட்டியாராச்சி உரிய முறையில் விடுமுறை பெற்றுக்கொண்டுள்ளாரா என்று வினவியமைக்கு அதற்கும் தனக்கும் சம்பந்தம் இல்லை எனவும் சி.ஐ.டியினர் அறிவித்தனர். (இ-7)

# O/L பரீட்சையில் 51.12 சதவீத மாணவர்களே ஆங்கிலத்தில் சித்தி

(கொழும்பு)

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின் பகுப்பாய்வைப் பொறுத்தவரையில், 51.12 சதவீத மாணவர்களே ஆங்கிலப் பாடத்தில் சித்தியடைந்துள்ளதாகவும் இது ஏனைய பாடங்களுடன் ஒப்பிடுகையில் அதிக மாணவர்கள் சித்தியடையாத பாடமாகும் என புள்ளிவிபரங்கள் தெரி வித்துள்ளன.

குறித்த பாடத்துக்கு 296,157 மாணவர்கள் தோற்றிய நிலையில் 151,393 மாணவர்களே சித்தியடைந்துள்ளதாகவும், அதில் A சித்தி பெற்றோர் 31,619 பேர் எனவும் B சித்தி பெற்றோர் 19,822 எனவும், C சித்தி பெற்றோர் 39,717 எனவும் S சித்தியை 60,235 மாணவர்களும்பெற்றிருந்ததாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் கடந்த ஆண்டு 47.90 மாணவர்கள் மாத்திரமே சித்தியடைந்த நிலையில் இம்முறை பெறுபேறுகள் சற்று அதிகரித்திருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் விஞ்ஞான பாடத்தில் 73.46 வீதமும் கணித பாடத்தில் 67.24 வீதம் சித்தியடைந்துள்ளதாகவும், இவை கடந்த ஆண்டில் முறையே 66.33 மற்றும் 62.81 ஆகவும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கும் எனக்கும் தொடர்பில்லை- சம்பிக்க

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 உறுப்பினர்களுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கும் தனக்கும் எந்தவித தொடர்பும் இல்லையெனவும், இதில் சம்பந்தப்படப் போவதுமில்லையெனவும் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இது பிரதமரும் ஜனாதிபதியும் இணைந்து தீர்மானம் எடுக்க வேண்டிய விடயம் எனவும் இதில் வீணாக தலையைப் போட்டுக் கொள்ள வேண்டியதில்லையெனவும் அவர் தெரிவித்தார்.



பிரதமர் தலைமையில் நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

# நான் பதவிக்காக செயற்படவில்லை கட்சிக்காகவே செயற்படுகின்றேன்

## பதவி விலகிய ஹாசீம் விளக்கம்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பதவியை நான் இராஜினாமா செய்துவிட்டேன். கட்சியின் மாற்றத்துக்கு வழிவிட்டே பதவியை இராஜினாமாச் செய்தேன் என அமைச்சர் கபீர் ஹாஷீம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்த அவர் இதனைத் தெரிவித்தார்.

இராஜினாமா கடிதம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்றும், கட்சி மறுசீரமைப்புக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கும் வகையிலேயே இந்த முடிவை தான் எடுத்தார் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஐ.தே.கவின் பொதுச் செயலாளராக இருந்த திஸ்ஸ அத்தநாயக்க விலகிய ஒரு மணித்தியாலத்தில் என் மீது நம்பிக்கை வைத்து பொதுச் செயலாளராக என்னைக் கட்சியின் தலைவர் ரணில் அறிவித்திருந்தார்.

அதன்படி இன்றுவரை எனது பணிகளைச் செய்துள்ளேன். ஐ.தே.கவில் மேற்கொள்ளப்படவுள்ள முற்றுமுழுதான மறுசீரமைப்புகளுக்கு ஆதரவளிக்கும் வகையிலேயே நான் பதவியை இராஜினாமா செய்கின்றேன்.

அதற்கான கடிதம் பிரதமரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. நான் பதவிகளுக்காக ஒருபோதும் செயற்பட்டதில்லை. கட்சிக்காகவே செயற்படுகின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 40 | 40 | 40 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 90 | 80 | 100 | 85 |
| பச்சைமிளகாய் | 50 | 40 | 40 | 50 | 80 | 40 |
| தக்காளி | 20 | 40 | 20 | 30 | 40 | 20 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 | 40 | 40 | 35 |
| கோவா | 30 | 30 | 40 | 40 | 60 | 30 |
| கரட் | 80 | 100 | 120 | 100 | 160 | [illegible] |
| பூசணி | 60 | 20 | 40 | 30 | 40 | 40 |
| புடோல் | 60 | 60 | 60 | 50 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 60 | 40 | 50 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 130 | 200 | 140 | 150 | 160 | 140 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 70 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 120 | 160 | 100 | 40 | 100 | 130 |
| வெண்டிக்காய் | 100 | 40 | 60 | 50 | 120 | 60 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 60 | 60 | 80 | 60 |
| பயற்றங்காய் | 70 | 100 | 60 | 30 | 80 | 100 |
| லீக்ஸ் | 140 | 180 | 80 | 180 | 200 | 180 |
| பீற்றூட் | 20 | 30 | 30 | 30 | 60 | 30 |
| கறிமிளகாய் | 50 | 100 | 50 | 60 | 80 | 60 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 250 | 180 | 240 | 300 |
| போஞ்சி | 80 | 160 | 80 | 100 | 120 | 60 |
| கத்தரிதம்புள்ள | 60 | 20 | 40 | — | 50 | 40 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 30 | 30 | 30 | 50 |
| தேசிக்காய் | 200 | 160 | 200 | 150 | 120 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 100 | 75 | 75 | 90 |
| இராசவள்ளி | 180 | 160 | — | 200 | 160 | 180 |
| வெங்காயப்பூ | 100 | — | — | 100 | 100 | — |
| முள்ளங்கி | 30 | — | 40 | 60 | 80 | 60 |
| வெ ாள்ளரிக்காய் | 40 | — | 30 | 40 | 30 | 35 |
| வல்லாரை | 15 | — | 20 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | — | 150 | — | 80 | — |

# வன்முறைச் சம்பவங்களுக்கு எதிராக புதுவருடத்தின் பின்னர் நடவடிக்கை

## சட்டம் ஒழுங்கு அமைச்சர் கூறுகிறார்



(கொழும்பு)

அம்பாறை மற்றும் கண்டி பிரதேசத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் புதுவருடத்தின் பின்னர் முன்னெடுக்கப்படும் என அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் சகவாழ்வு மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஆலோசகர் கீதா சகவார்ரோடு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அமைச்சில் இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டபோதே இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

'அம்பாறை மற்றும் கண்டி பிரதேசத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன. இவை குறித்த சட்ட நடவடிக்கைகள் புதுவருடத்தின் பின்னர் எது வித பாரபட்சமும் இன்றி மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

மேலும் கிராமங்கள்தோறும் கிராமிய மட்டத்தில் சமாதானக் குழுக்கள் அமைக்கப்படவிருக்கின்றன. இதன்மூலம் கிராம மக்களிடையே ஒற்றுமையின்னை ஏற்படுத்தி அவர்களுக்கிடையிலான பிணக்குகளை இலகுவாகத் தீர்த்துக் கொள்வதற்கான வழிகள் ஏற்படுத்தப்படும்.

இன,மத பேதமற்ற முறையில் மேற்கொள்ளப்படும் இக்கிராம மட்டச் செயற்பாடுகள் இனங்களுக்கிடையில் மேலும் புரிந்துணர்வுகளை ஏற்படுத்தும். இதனால் எதிர்காலத்தில் இனங்களுக்கிடையிலான மோதல் நிலைமைகள் தவிர்க்கப்படும்' என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 96 கோடி ரூபாவை இலங்கையில் சேமித்த சீனப்பிரஜைகள் இருவர் விளக்க மறியலில்

(கொழும்பு)

நாட்டின் சட்டத்திட்டங்களை மீறி இலங்கை வங்கியொன்றில் சுமார் 96 கோடி ரூபாவை வைப்புச் செய்திருந்த சீனப்பிரஜைகள் இருவரையும் விளக்க மறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபர்கள் இருவரையும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியப்போதே நீதவான் லங்கா ஜயரத்ன இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

மேலும் குறித்த சம்பவத்தில் சூ.டி.யெங்சாங் மற்றும் வெய் பிங்க்லய் ஆகிய சீனப் பிரஜைகளுக்கே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

குறித்த சந்தேகநபரிடமிருந்து 8 சீனப்பிரஜைகளின் கடவுச்சீட்டுக்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன் இவர்கள்சுற்றுலா விசாவில் நாட்டுக்குள் வந்து வதிவிட விசாவைப் பெற போலி ஆவணங்களை சமர்ப்பித்துள்ளதாக, நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

நாட்டின் குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்திட்டங்களை மீறி தங்கியிருந்து பணம் ஈட்டியமை தொடர்பில் சரியான விளக்கம் அளிக்காமல், இலங்கை வங்கியொன்றில் சுமார் 96 கோடி ரூபாவை வைப்புச் செய்தமை தொடர்பிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 'கட்சித் தீர்மானமே காரணம்'

## ஹிஸ்புல்லா விளக்கம்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எடுத்த தீர்மானத்துக்கு அமையவே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் தான் பங்கேற்கவில்லை என, புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித் தார்.


இது தொடர்பில், அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பிரதமருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவளிப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விரிவாக ஆராய்ந்தது. நல்லாட்சி அரசாங்கத்தின் பங்காளியான சு.க நாட்டின் பொருளாதார, அரசியல் ரீதியான பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு, பிரேரணை மீதான வாக்கெடுப்பில் கலந்துகொள்வதில்லை என்று தீர்மானித்தது.

"கட்சியின் தீர்மானத்துக்கு அமையவே, நாங்கள் குறித்த பிரேரணை மீதான வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. பொருளாதார, அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியில் நாட்டை ஸ்திரமற்ற நிலைக்கு தள்ளுவதற்கு நாங்கள் இடமளிக்கமாட்டோம் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவே இருந்தோம். அந்த வகையிலேயே நாங்கள் வாக்கெடுப்பிலும் பங்கேற்கவில்லை" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஐ.தே.கவிடம் சு.கவை தாரைவார்த்த மைத்திரி

## பிரசன்ன ரணதுங்க காட்டம்



(கொழும்பு)

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைத் தோற்கடிக்க ஜனாதிபதி தலையிட முன்வராமையினால் மீண்டும் ஒருமுறை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தாரை வார்த்துள்ளார் என பாராளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது கட்சியின் அமைச்சர்களையும், பாராளுமன்ற உறுப்பினர்களையும் நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது தனியான ஒரு கருத்துக்கு ஒருமுகப்படுத்த முன்வராமை இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு எனவும் அவர் தெரிவித்தார்.

கூட்டு எதிர்க்கட்சியினர் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வாக்குகளை இதற்கு ஆதரவாக ஜனாதிபதி பெற்றுத் தருவார் என்ற நம்பிக்கையிலேயே ஆகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றாலும், அரசாங்கத்தை கைப்பற்றும் நடவடிக்கையை கூட்டு எதிரணி ஒருபோதும் கைவிடாது எனவும் பிரசன்ன ரணதுங்க எம்.பி. மேலும் தெரிவித்தார். (இ-7)

# அரசிற்குள் மேலும் சிக்கல் அத்தநாயக்க கவலை



(கொழும்பு)

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப்பிரேரணையை வெற்றி கொண்ட போதிலும், அரசாங்கம் மேலதிகமாக பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்குள் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கே எஞ்சியுள்ள காலம் பிரதமருக்கு தேவைப்படும் என்பதனால், நாட்டின் அபிவிருத்தியில் கவனம்செலுத்த அக்கட்சிக்கு முடியாமல் இருக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# கொழும்பு குடிசைகள் அற்ற நகரமாக தரமுயரும்-ரணில்

(கொழும்பு)

எதிர்வரும் பத்தாண்டு காலப் பகுதியில் கொழும்பு மாநகரம் குடிசைகள் அற்ற நகரமாக தரமுயர்த்தப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு, பொரள்ள பிரதேசத்தில் எலைற் ரெஸிடென்ஸிஸ் மாடிக்கட்டட வீடமைப்புத் தொகுதியின் நிர்மாணப் பணிகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டன. இது தொடர்பான வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



'கொழும்பு நகரத்தினை அபிவிருத்தி செய்யும் நோக்கில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களால் எதிர்வரும் பத்தாண்டுகளில் குடிசைகள் அற்ற நகரமாக மாற்றமடையும். குறித்த அபிவிருத்தித் திட்டங்களில் சூழல் பாதிப்பு ஏற்படாத வகையில் விசேட நடவடிக்கைகள் மூலம் குறித்த செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

அபிவிருத்தியினை இலக்காகக் கொண்டு எமது அரசாங்கம் மேற்கொண்டுவரும் செயற்றிட்டங்களால் மக்கள் மேலும் பயனடையும் விதத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் அரச மற்றும் தனியார் துறையில் பணியாற்றுபவருக்காக நிர்மாணிக்கப்படும் இந்த வீடமைப்புத் தொகுதியில் உள்ள வீடுகளைக் கொள்வனவு செய்வதற்காக விசேட கடன்வசதியும்வழங்கப்படவுள்ளது' என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)




கொட்டகலை ஆசிரிய கலாசாலையின் கவின்கலை மன்றம் நடத்திய 'மகுடம் அரங்கம்' என்ற பெயரில் அமைந்த கலைவிழா கடந்த புதன்கிழமை கொட்டகலை ஸ்ரீரிஷிகேஸ் திருமண மண்டபத்தில் கலாசாலை அதிபர் சந்திரலேகா கிங்ஸ்லி தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவரும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதிமுதல்வருமாகிய செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசனும் சிறப்பு விருந்தினராக கொழும்புப் பல்கலைக்கழக கல்விப் பீட விரிவுரையாளர் அ.பௌநந்தியும் கலந்து சிறப்பித்தனர்.

# விளம்பி வருட இராசி பலன்கள்

## 14.04.2018-13.04.2019

# வளர்ச்சி கூடும்!

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



விளம்பி வருட தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்ரன், சூரியனுடன் இணைந்து விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அவர்கள் இருவரையும் அஷ்டம லாபாதிபதியான குரு பகவான், வக்ர இயக்கத்தில் இருந்தபடி பார்க்கிறார். அதே நேரத்தில் குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 2, 10, 12 ஆகிய இடங்களிலும் பதிகின்றது. அந்த மூன்று இடங்களும் புனிதமடைகின்றன. அதன்மூலம் நல்ல வாய்ப்புகள் நாடி வரப்போகிறது. முன்னேற்றத்தைக் குறிக்கும் 3ஆம் இடத்தில் ராகுவும், பிதுர் இராஜ்ஜிய ஸ்தானம் எனப்படும் 9ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். அஷ்டமத்தில் செவ்வாய், சனியின் சேர்க்கை உள்ளது. லாப ஸ்தானத்தில் தன பஞ்சமாதிபதியான புதன் நீசம் பெற்று சந்திரனோடு இணைந்திருக்கிறார்.

வருடப் பிறப்பின்போது இருக்கும் இந்த கிரக அமைப்புகளை, உங்கள் சுயஜாதகத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து அதன்படி செயற்பட்டால் வெற்றி வாய்ப்புகளை வரவழைத்துக் கொள்ள இயலும்.

இந்த ஆண்டு சித்திரை மாதப் பிறப்பு சனிக்கிழமையில் பிறக்கிறது. இராசிநாதன் சுக்ரனுக்கு சனி நட்பு கிரகமாகும். அதுமட்டுமல்ல உங்களுக்கு யோகம் தரும் கிரகமாகவும் சனி விளங்குகிறது. உங்கள் இராசிக்கு 9, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அவருடைய ஆதிக்கநாளில் இந்த ஆண்டு பிறப்பதால், பூர்வ புண்ணியத்தின் பலனாக உங்களுக்கு கிடைக்க வேண்டிய யோகம் அனைத்தும் வந்து சேரப் போகிறது.

நீங்கள் எந்தத் துறையில் ஈடுபட்டிருந்தாலும் அந்தத் துறையில் முன்னேற்றம் காண்பீர்கள். அலுவலகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வும், ஊதிய உயர்வும் இயல்பாகவே நடைபெறும். அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் இருக்கின்றதே என்று கவலைப்பட வேண்டாம். 8இற்கு அதிபதி குரு பகவான் 6இல் மறைந்து 12ஆம் இடத்தைப் பார்ப்பதால் ஆண்டின் தொடக்கத்திலேயே விபரீத ராஜ யோகம் செயல்படப் போகிறது. எனவே திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றிகிடைக்கும். தர்மகர்மாதிபதியாக விளங்கும் சனி பகவான், குருவீட்டில் சஞ்சரிப்பதால் உடல்நலப் பாதிப்புகள் அகலும்.

### குரு பார்வை பலன்!

ஆண்டின் தொடக்கத்திலேயே குரு உங்கள் இராசிக்கு 2, 10. 12 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். எனவே திரண்ட செல்வம் இனித்தேடி வரப்போகிறது.

2ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால், வாக்கு வலிமை கூடும். சொன்னதைச் செய்து முடிப்பீர்கள். கல்யாணக் கனவுகள் நனவாகும். கொடிகட்டிப் பறந்த குடும்பப் பிரச்சினைகள் படிப்படியாக மாறும்.

10ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால் பணியில் இருந்த தொய்வு அகலும். தொழில் வளர்ச்சிக்கு தொல்லை தந்தவர்கள் விலகுவர். கடனில் வாழ்க்கை நடத்தியவர்கள் நிம்மதியடைவர். இனி நிலையான வருமானம் வந்து சேரும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கவில்லையே என்ற கவலை இனிமாறும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் விருப்ப ஓய்வில் வெளிவந்து சுய தொழில் செய்யலாமா? என்று சிந்திப்பீர்கள்.

குருவின் பார்வை 12ஆம் இடத்தில் பதிவதால், அயன சயன ஸ்தானம் புனிதமடைகிறது. எனவே விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்துசேரும். பழகிய நண்பர்கள் உங்களுக்குப் பாதகசாதகங்களை எடுத்துரைப்பர். விரயத்திற்கேற்ற தன லாபம் வந்துகொண்டே இருக்கும்.

### செவ்வாய்-சனி சேர்க்கையும், பார்வையும்!

14.4.2018 முதல் 29.4.2018 வரை தனுசு இராசியில் செவ்வாய், சனி சேர்க்கை ஏற்படுகிறது. அதன் பிறகு 20.3.2019 முதல் 13.4.2019 வரை செவ்வாய் சனியைப் பார்க்கும் அமைப்பு உள்ளது. இக்காலத்தில் கொஞ்சம் விழிப் புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. ஆரோக்கியத் தொல்லை உருவாகலாம். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புக்களால் சில இழப்புகளைச் சந்திக்க நேரிடும். அங்காரக, சனி பிரீதி அல்லல்களைப் போக்கும்.

### விருச்சிகத்தில் குரு!

புரட்டாசி மாதம் 18ஆம் திகதி (4.10.2018) வியாழக்கிழமை அன்று விருச்சிக ராசிக்கு குரு பகவான் பெயர்ச்சியாகிறார். அதன் மூலம் வியக்கும் வாழ்க்கை உங்களுக்கு அமையப் போகிறது. குருப்பெயர்ச்சிக்குப் பின்னால் உங்கள் குறைகள் அனைத்தும் அகலப் போகிறது. ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும். உங்கள் மதிநுட்பத்திற்கு பாராட்டும், பரிசுகளும் வந்து சேரும். சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதோடு 3, 11 ஆகிய இடங்களிலும் பதிகின்றது. குருவைப் பொறுத்தவரை இருக்கும் இடத்தைக் காட்டிலும் பார்க்கும் இடத்திற்கே பலன் அதிகம் என்பார்கள். அந்த அடிப்படையில் அற்புதமான பலன்களும், அகிலம் போற்றும் வாழ்வும் உங்களுக்கு வந்து சேரப்போகிறது.

உங்கள் இராசியைக் குரு பார்ப்பதால் செயல்பாடுகளில் வெற்றி கிடைக்கும். தடைக்கற்கள் எல்லாம் படிக்கற்களாக மாறும். தைரியமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். கடந்த காலத்தில் ஏற்பட்ட கவலைகள் அகலும். கௌரவம், அந்தஸ்து உயரும். இந்த காலத்தில் சுபகாரிய நிகழ்வுகள் நடைபெற வாய்ப்பு உண்டு.

3ஆம் இடத்தில் பதியும் குருவின் பார்வையால், உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு கூடுதலாகக் கிடைக்கும். விலகிச் சென்ற சகோதரர்கள், தானாக வந்து சேருவார்கள். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதியோ, கல்வி நலன் கருதியோ நீங்கள் தீட்டிய திட்டங்கள் நிறைவேறும்.

குருவின் பார்வை இலாப ஸ்தானமான 11ஆம் இடத்தில் பதிவதால் பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பும். உங்களுக்கும், மேலதிகாரிகளுக்கும் இடையில் இருந்து வந்த மனக்கசப்பு மாறும். எதிர்பார்த்த இலாகா மாற்றமும், சலுகைகளும் கிடைக்கும். வேலை தேடுபவர்களுக்கு, படிப்பிற்கேற்ற வேலை கிடைக்கும். பரம்பரை சொத்துகளில் இருந்த வில்லங்கங்கள் விலகும். வாரிசுகளின் வளர்ச்சி பெருமைப் படத்தக்கதாக அமையும்.

### ராகு-கேது பெயர்ச்சி!

13.2.2019இல் மிதுன ராசியில் ராகுவும், தனுசு இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். உங்கள் இராசிக்கு 2ஆம் இடத்தில் ராகு சஞ்சரிப்பதால், நீங்கள் சொல்லும் சொற்கள் வெல்லும் சொற்களாக மாறும். இதுவரை மற்றவர்களை சார்ந்திருந்த நீங்கள், இனி தனித்து இயங்குவீர்கள். 'கரும்பாம்பு இரண்டில் வந்தால், கனதனம் நிறையச் சேரும்' என்பது முன்னோர் வாக்கு. எனவே பணப்புழக்கம் அதிகரிக்கும். பற்றாக்குறை அகலும். மிதமிஞ்சிய பொருளாதாரத்தில் மிதப்பீர்கள்.




அதேநேரத்தில் அஷ்டமத்தில் கேது அடியெடுத்து வைப்பதால் வருமானம் வரும் முன்பாகவே செலவுகள் காத்திருக்கும். செய்யும் தொழிலில் திடீர் பிரச்சினைகள் உருவாகலாம். வாகனங்களால் விரயம் உண்டு. எந்தப் பணியையும் நிதானத்துடன் செய்ய இயலாது. பிறருக்கு வாக்கு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை மூலம் பிரச்சினைகள் வரலாம். வம்பு வழக்குகள் வாசல் தேடி வரும் நேரம் இது. இன்பங்களை மட்டுமே சந்திக்க இக்காலத்தில் ராகு-கேதுக்களுக்குரிய சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை அனுகூல ஸ்தலங்களைத் தேர்ந்தெடுத்துச் செய்வது நல்லது.

### வளர்ச்சிக்குரிய வழிபாடு!

பிரதோஷம் அன்று விரதமிருந்து நந்தியம்பெருமானை வழிபடுவதோடு, யோக எண் அடிப்படையில் 'நந்தீஸ்வராய நமக' என்று எழுதி வாருங்கள். சிறப்பு வழிபாடாக யோக பலம் பெற்ற நாளில் தஞ்சபுரீஸ்வரர் கோவிலுக்குச் சென்று வழிபடுவது நல்லது.

### குரு மற்றும் சனி வக்ர காலங்கள்!

உங்கள் இராசிக்கு அஷ்டமாதி பதியாக குரு பகவான் விளங்குவதால், அவரது வக்ர காலத்தில் நற்பலன்கள் இல்லம் தேடிவரும். தேக்கமடைந்த காரியங்கள் கிடு கிடுவென நடைபெறும். தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்ய புதிய வாய்ப்புகள் வந்துசேரும். சனியின் வக்ர காலத்தில் சஞ்சலங்கள் அதிகரிக்கும்.

உங்கள் இராசிக்கு 9, 10இற்கு அதிபதியாக சனி விளங்குவதால் தொழிலில் மந்தநிலை ஏற்படும். எதிரிகளின் பலம் கூடும். பூர்வீகச் சொத்துத் தகராறு உருவாகும். பஞ்சாயத்துகள் முடிவடையாது. பெற்றோர்களின் உடல்நிலையில் திடீர் தாக்குதல்கள் ஏற்படலாம். விற்ற சொத்துகளாலும் வில்லங்கங்கள் ஏற்படலாம். இக்காலத்தில் 'கருநிறக் காகம் ஏறி.. காசினி தன்னைக் காக்கும்..' என்று தொடங்கும் சனிபகவான் கவசம் பாடி, சனி பகவானை வழிபடுவதோடு திருநள்ளாறு போன்ற ஸ்தலங்களுக்கும் சென்று வழிபட்டு வரலாம்.

### ரிஷப இராசியில் பிறந்த பெண்களுக்கு!

விளம்பி வருடம் ரிஷப இராசியில் பிறந்த பெண்களுக்கு வெற்றிச் செய்திகள் வந்து சேரும். உற்றார், உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். ஆரோக்கியத் தொல்லை ஏற்பட்டாலும் அறுவை சிகிச்சை ஏற்படாதிருக்கவும் அச்சுறுத்தும் நோய் அகலவும் ஆரம்பத்திலேயே மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. புரட்டாசி 18ஆம் திகதிக்கு மேல் கணவன்-மனைவி ஒற்றுமை பலப்படும். கட்டிடம் வாங்க, விற்க எடுத்த முயற்சி வெற்றி பெறும்.

உடன்பிறப்புகளின் ஆதரவும், தாய் வழி ஒத்துழைப்பும் ஓரளவு கிடைக்கலாம். ராகு-கேது பெயர்ச்சியின் விளைவாக பிள்ளைகளின் கல்யாணக் கனவுகள் கைகூடும். தங்கம், வெள்ளி, ஆடை, ஆபரணச் சேர்க்கை அதிகரிக்கும். குலதெய்வ வழிபாடு குடும்ப முன்னேற்றத்திற்கு வித்திடும். பணிபுரியும் பெண்களுக்கு வேலைப்பளு கூடுதலாக இருந்தாலும் திறமைக்கு பாராட்டும், எதிர்பார்த்த சலுகைகளும் கிடைக்கும். வாகனம் வாங்கும் யோகம் உண்டு. திசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளை மேற்கொள்வதோடு, செவ்வாய் தோறும் துர்க்கையை வழிபடுவது நல்லது.

(தொடரும்)

# ஐ.நாவின் உடன்பாட்டை மீறியதாக இலங்கை இராணுவம் மீது குற்றச்சாட்டு

## மனித உரிமை ஆணைக்குழு

(கொழும்பு)

ஐ.நா.அமைதிப் படைக்கான அணிகளை அனுப்புவது தொடர்பான உடன்பாட்டை இராணுவம் மீறியுள்ளது என்று மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அனுமதியைப் பெறாமல், லெபனானுக்கு, இராணுவத்தினரை அனுப்பியதன் மூலம், இந்த மீறல் இடம்பெற்றுள்ளதாக, ஜனாதிபதிக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.



ஐ.நா. அமைதிப்படைக்கு தெரிவு செய்யப்படும் படையினருக்கான அனுமதியை வழங்கும் அதிகாரம் பெற்ற இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின், தலைவர் கலாநிதி தீபிகா உடகம, இது தொடர்பாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடந்த புதன்கிழமை கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அதில், "2017 டிசெம்பர் 21ஆம் திகதியிடப்பட்ட கடிதம் ஒன்றுடன், 204 இலங்கை இராணுவத்தினரின் விண்ணப்பங்கள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கிடைத்திருந்தது.

எனினும்,. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அனுமதிக்கான செயல்முறைகள் முடிய முன்னரே, 49 இலங்கை இராணுவத்தினர் லெபனானுக்கு அனுப்பப்பட்டு விட்டதாக தகவல்கள் வெளியாகின.

இதுபற்றி இராணுவத்திடம் விசாரித்தபோது, லெபனானுக்கு ஒரு தொகுதி படையினர் அனுப்பப்பட்டு விட்டது உறுதியானது.

மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் அனுமதியை பெறாமல், ஐ.நா.அமைதிப்படைக்கு எந்தவொரு படையினரையும் அனுப்ப முடியாது என்று தெரிந்திருந்தும், இலங்கை இராணுவம், ஒரு தொகுதி படையினரை அனுப்பியதை அறிந்து நாம் ஆச்சரியமடைந்தோம்.

லெபனானுக்கு அவசரமாக 49 படையினரை அனுப்ப வேண்டிய தேவை உள்ளதாக எமக்கு தெரிவிக்கப்படவில்லை.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அனுமதியைப் பெறாமல், ஐ.நா. அமைதிப் படைக்கு அணியொன்றை அனுப்பியதன் மூலம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடனான உடன்பாட்டை இராணுவம் மீறியுள்ளது.

ஐ.நா. அமைதிப்படைக்கு ஆட்களை அனுப்பும் நிறுவனங்களான, முப்படைகள், பொலிஸ் என்பன மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் ஒத்துழைக்க வேண்டியது முக்கியமானது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# மட்டக்களப்பு எல்லைப் பகுதியில் 14 இந்து ஆலயங்கள் உடைப்பு

## வியாழேந்திரன் எம்.பி.சுட்டிக்காட்டு

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பகுதிகளில் கடந்த மூன்று வருடத்தில் 14 இந்து ஆலயங்கள் உடைக்கப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.



கடந்த கால யுத்தம் மற்றும் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட ஆலயங்களுக்கு நிதியுதவிகள் வழங்கும் நிகழ்வுநேற்றுக் காலை இடம்பெற்றது.

குறித்த நிகழ்வு இந்து கலாசார, மீள்குடியேற்ற, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு, நாவற்குடா இந்து கலாசார நிலையத்தில் இடம்பெற்றது.

இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 ஆலயங்கள் உடைக்கப்பட்டுள்ளன. கிரான் பிரதேச செயலக பிரிவிலேயே அதிகளவான ஆலயங்கள் உடைக்கப்பட்டன.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பகுதியினை இலக்கு வைத்தே அதிகளவான ஆலயங்கள் உடைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு எல்லைப் பகுதியில் உடைக்கப்பட்டுள்ள ஆலயங்களை புனரமைத்து ஒரு கட்டுக்கோப்புடன் கொண்டு செல்ல வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

இன்று இலங்கையின் அம்பாந்தோட்டை தொடக்கம் பல இடங்களில் இருந்த இந்து ஆலயங்கள் காணாமல்போயுள்ளன.

அதனை பற்றி நாங்கள் பேசுவதில் எந்தவிதப் பயனும் இல்லாவிட்டாலும் எல்லைப் பகுதியில் உள்ள ஆலயங்களைப் பேணிப்பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பு எமக்குள்ளது.

கடந்த ஆட்சிக்காலத்தில் இந்து ஆலயங்களுக்கு உதவிகளைப் பெறுவது எட்டாக் கனியாக இருந்த நிலையில் இன்று சமயத்தினையும் தமிழையும் தனது உயிருக்கு நிகராக நேசிக்கும் அமைச்சர் சுவாமிநாதன் கிடைத்துள்ளமை தமிழ் மக்கள் செய்த பாக்கியமாக கருதுகின்றேன் எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

# பிரதமர் பதவி கிடைக்காத வருத்தத்தில் லண்டன் சென்றார் அமைச்சர் நிமால்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் வெற்றி பெற்றால், போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவிற்கு பிரதமர் பதவி வழங்கப்படும் எனப் பரவலாக பேசப்பட்டது.

இருப்பினும் பிரதமர் பதவி கிடைக்காது என உறுதியான தன் பின்னர் நம்பிக்கையில்லா தீர்மான வாக்கெடுப்பு நடத்தப்பட்ட தினத்திலேயே நிமால் சிறிபால டி சில்வா வெளிநாடு சென்றுள்ளார்.

பிரதமர் ரணிலை பதவி விலகுமாறு சுதந்திரக் கட்சியின் சார்பில் அதிகாரபூர்மாக கோரியதும் நிமால் சிறிபால டி சில்வா என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும், இறுதி நேரத்தில் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் எடுத்த தீர்மானம் காரணமாகமனம்உடைந்து போன நிமால் சிறிபால டி சில்வா, லண்டன் புறப்பட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.



ஒரே பாடசாலை எனக் கூறிக் கொள்ளும் பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால தம்மை கஷ்டத்தில் போட்டு விட்டதாக நிமால் சிறிபால டி சில்வா தமக்கு நெருக்கமானவர்களிடம் நொந்து கொள்வதாகவும் அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமது பாடசாலையைச் சேர்ந்த ஒருவரை பிரதமர் பதவியில் அமர்த்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய உறுப்பினர் ஒருவரும் உதவுவதாக திலங்க சுமதிபால கூறிய போதிலும், இந்த விடயமே குறித்த உறுப்பினருக்கு தெரியாது என்பது பின்னர் தெரியவந்துள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

# தாமரைக் கோபுரத்தைத் திறக்க நான்கு மாதங்கள் தாமதமாகும்



(கொழும்பு)

ஆசியாவின்மிக உயரமான கோபுரமாக நிர்மாணிக்கப்படுகின்ற தாமரைக் கோபுரத்தை திறப்பதற்கு மேலும் நான்கு மாதங்கள் தாமதமாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கோபுரத்தின் ஆய்வு நடவடிக்கைகள் இதுவரையிலும் நிறைவு செய்யப்படாமையினால் தாமதம் ஏற்பட்டுள்ளதாக மொரட்டுவ பல்கலைக் கழகத்தின் கட்டடக்கலை தொடர்பான சிரேஷ்ட பேராசிரியர் சமித மானவடு தெரிவித்துள்ளார்.

தாமரைக் கோபுரத்திற்கு பொருத்த வேண்டிய சில உபகரணங்கள் வழங்குவதற்கு நிறுவனம் தாமதப்படுத்தியமையினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு தொடர்பான அனைத்து விடயங்களும் உறுதி செய்யப்பட்ட பின்னர் தாமரைக் கோபுரம் மக்கள் பார்வைக்காக திறந்து வைக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தக் கோபுரம் உத்தியோகபூர்வமாகத் திறக்கப்பட்ட பின்னர், ஆசியாவின் மிக உயர்ந்த கட்டடத்தை கொண்ட நாடாக இலங்கை மாறும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வதந்திகளுக்கு பதிலளிக்க தேவையில்லை

## உதய கம்மன்பில கூறுகிறார்



(கொழும்பு)

வதந்திகளுக்கு நான் பதிலளிக்கத் தேவையில்லையென பிவிதுரு ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

தனக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்து ஐக்கிய தேசியக் கட்சியை பலப்படுத்தும் நடவடிக்கையில் மும்முரமாக ஈடுபட்டது உதய கம்மன்பில எனவும், இதனால், அவருக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவியொன்றை வழங்கவுள்ளதாக மகிந்த ராஜபக்ஷ எம்.பியிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது உண்மையானதா? என கம்மன்பில எம்.பி.யிடம் ஊடகவியலாளர் ஒருவர் வினவிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எனக்கு அப்படியொரு பேச்சை ரணில் சொல்லவும் இல்லை. மகிந்த சொல்லவும் இல்லை. இது ஒரு வதந்தி மாத்திரமே. எனது 17 வருட அரசியல் வாழ்வில் ஒருபோதும் வதந்திகளுக்கு பதிலளித்ததில்லை. வழங்கப் போவதும் இல்லை எனவும் கம்மன்பில மேலும்தெரிவித்தார். (இ-7)



மல்லாகம் சமுர்த்தி வங்கியின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை குருதி வங்கியில் இரத்ததானம் வழங்கப்பட்டது.

# காணிகளுக்கான ஆவணங்கள் இருந்தும் காணிகளில் நாங்கள் வாழ முடியாத நிலை

## சாந்தி எம்.பி தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

காணிக்கான ஆவணங்கள் இருந்தும் காணிக்குள் நாங்கள் வாழமுடியாத நிலையில் வீதி ஓரங்களில் வாழ்கிறோம் என நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் கடந்தகால போரின் போது சொத்துக்களை இழந்தவர்கள் ஒருதொகுதி பேருக்கு இழப்பீட்டு நிதி வழங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,

எங்களுடைய இழப்புக்களுக்கு ஒரு இழப்பீடு வழங்குகின்ற நாளாக இன்று காணப்படுகின்றது. கடந்த 2009 ஆம் ஆண்டு இதே காலப்பகுதிகளில் முள்ளிவாய்க்கால் பகுதிகளில் நாங்கள் பட்ட அல்லோலகல்லோலங்களை நினைத்து பார்க்கின்றேன். இந்த உதவி பெறுவதற்காக வந்துள்ளவர்கள் எவ்வளவு வலிகளை, சுமைகளை, இழப்புக்களை சுமந்துகொண்டு காத்திருக்கின்றார்கள்.

நாங்கள் அனைத்து அசையும் சொத்துக்களையும் இழந்தவர்கள் மட்டுமல்ல இன்று அசையா சொத்துக்களையும் கைவிட்டு தெருவோரங்களில் ஏங்கிக் கொண்டிருப்பவர்கள் காணிக்கான ஆவணங்கள் இருந்தும் காணிக்குள் நாங்கள் வாழமுடியாத நிலையில் இன்று கேப்பாப்பிலவில் ஒரு ஆண்டிற்கு மேலாக மக்கள் காத்திருக்கின்றார்கள். எங்கள் வலிகள் வேதனைகளை எந்த ஒரு கொடுப்பனவும் ஈடுசெய்யாது. ஆனாலும் இந்த அமைச்சின் அதிகாரிகளிடம் சில கோரிக்கைகளை முன்வைக்கின்றேன்.

இறுதிப் போரின் போது கைவிடப்பட்ட குறிப்பாக வாகனங்களின் ஆவணங்களை மக்கள் இப்பொழுதும் வைத்துள்ளார்கள். இந்த ஆவணங்கள் உள்ள அந்த சொத்துக்களுக்கு ஈடாக கொடுப்பனவுகளை கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டும்.

எனவே இறுதிப்போரின் போது சொத்துக்களை இழந்து ஆவணங்களை வைத்துள்ள மக்களுக்கு காயப்பட்டவர்கள் உறவுகளை இழந்தவர்களுக்கான நட்ட ஈடுகள் இதுவரை கொடுக்கப்படாது இருக்கின்றது. அவற்றை கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்.

பெண் தலைமைத்துவம் தாங்குகின்ற பெண்களுக்கான திட்டம் கடந்த பத்து ஆண்டுகளாக வாழ்வாதார திட்டம் என்பது தனித்தனியே ஒவ்வொருவருக்கும் கொடுக்கின்ற பொழுது அதன் ஊடாக ஒரு நிரந்தர வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே பெண்கள் ஒன்றாக கூடி செய்கின்ற வேலைகளுக்காக உதவித்திட்டம் வழங்க முன்வந்திருப்பது சிறந்த திட்டமாக உள்ளது. அதேவேளையில்கைத்தொழில் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களை சந்தைப்படுத்தக்கூடிய ஒரு வசதி வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது இந்த அமைச்சின் கடமையாக காணப்படுகின்றது.

இதற்கு பதிலளித்த மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் வடக்கின் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கான சந்தை வாய்ப்புக்களுக்காக மாங்குளம் பகுதியில் அமையவுள்ள மத்திய பொருளாதார நிலையம் அமையும் அதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அண்மையில் அந்த இடத்தில் நீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த பொருளாதார மத்திய நிலையம் அமையுமாக இருந்தால் சந்தை வாய்ப்புக்கள் இலகுவாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (2-281)

# புதுக்குடியிருப்பு சந்தையில் கட்டாக்காலி கால்நடைகளால்

## -வியாபாரிகள் பாதிப்பு-



(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பு சந்தை வளாகத்திற்குள் கட்டாக்காலி கால்நடைகளின் நடமாட்டம் அதிகமாகக் காணப்படுகின்றது. பிரதேச சபையினர் கட்டுப்படுத்த தவறியுள்ளதால் வியாபாரிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

புதுக்குடியிருப்பு சந்தை வளாகத்திற்குள் குறிப்பாக மரக்கறி மற்றும் பழக்கடை பகுதிகளுக்குள் நுழையும் கட்டாக்காலி கால்நடைகள் நாள்தோறும் வியாபாரிகளுக்கு நட்டத்தை ஏற்படுத்துகின்றன. புதுக்குடியிருப்பு பிரதேச சபையினரால் கட்டாக்காலி கால்நடைகள் கட்டுப்படுத்தப்படும் என அறிவித்தல் பலகையில் துண்டுப் பிரசுரம் ஒட்டுப்பட்டுள்ள நிலையில் இதுவரை குறித்த கால்நடைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை என வியாபாரிகள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

நாள்தோறும் 20இற்கும் மேற்பட்ட கால்நடைகள் சந்தை வளாகத்திற்குள் காணப்படுகின்றன. இவற்றை கட்டுப்படுத்த வேண்டும் அல்லது கால்நடைகளின் உரிமையாளர்களுக்கு இது தொடர்பில் அறிவிப்பை விடுக்க வேண்டும். மரக்கறி கழிவுகளை உண்பதற்காக வரும் கால்நடைகள் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள மரக்கறி மற்றும் பழங்களை உண்கின்றன. நாள்தோறும் கால்நடைகளை கலைப்பதே எங்கள் வேலையாக இருக்கின்றது என்று வியாபாரிகள் கவலை தெரிவித்துள்ளார்கள். (2-281)

# மணல் பகிரங்க ஏல விற்பனை

(மன்னார்)

மன்னார் மாவட்ட /நீதவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட ஒரு தொகுதி மணல் (155கியூப்) எதிர்வரும்09ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு பிராந்திய ரீதியிலான பகிரங்க ஏலத்தில் இலுப்பைக் கடவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கூராய் கிராம அபிவிருத்திச்சங்க கட்டடத்தில் வைத்து விற்பனை செய்யப்படவுள்ளது.

குறித்த பகிரங்க ஏல விற்பனையில் மணல் கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவுகளை பணமாகவே செலுத்த வேண்டும். காசோலை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஏலத்தில் மணல் கொள்வனவு செய்யவருபவர்கள் தமது தேசிய ஆள் அடையாள அட்டையுடன் சமுகமளிக்கவேண்டும்.

அத்துடன் ஏல விற்பனையில் பெற்றுக்கொள்ளும் மணலுக்கு அங்கு பிரசன்னமாகியிருக்கும் புவிச்சரிதவியல் அளவை சுரங்கம் பணியக அலுவலர்களிடமிருந்து வழி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டும் என பதிவாளர் அறிவித்துள்ளார். (2)

# திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை கண்டித்து மாகாணசபை உறுப்பினர்களின் கவனயீர்ப்பு முல்லையில் திட்டமிட்டபடி நடைபெறும்

## வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் திட்டவட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை கண்டிக்கும் வகையில் வடக்கு மாகாண சபையின் 38 உறுப்பினர்களும் எதிர்வரும் 10ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்திற்கு சென்று நடத்தவுள்ள கவனயீர்ப்பு திட்டமிட்டபடி நடைபெறும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் நடைபெறுகின்ற சிங்கள ஆக்கிரமிப்பு தொடர்பில் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் இணைந்து போராட்டம்ஒன்றை செய்வதென வடக்கு மாகாண சபையின் 120 ஆவது அமர்வில் தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டிருந்தது. இந்த போராட்டமே திட்டமிட்டபடி நடைபெறும்என அறிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழர் நிலத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை தடுப்பதற்கான வழிவகைகள் தொடர்பாக ஆராய்வதற்கான விசேட அமர்வு சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்றிருந்தது.

மேற்படி அமர்வில் மேற்படி சிங்கள குடியேற்றங்களை தடுப்பதற்கான உறுதியான தீர்மானம் எடுக்கவேண்டும். வடமாகாணசபை உறுப்பினர்கள் அனைவரும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு சென்று எதிர்ப்பை காட்டவேண்டும் என மாகாணசபை உறுப்பினர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

இதற்கமைய எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க் கிழமை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் அமைச்சர்கள் அவைத்தலைவர் உள்ளிட்ட 38 மாகாணசபை உறுப்பினர்களும் முல்லைத்தீவுக்கு சென்று எல்லைக் கிராமங்களை பார்வையிடுவதுடன் திட்டமிட்ட குடியேற்றங்களுக்கு எதிரான கவனயீர்ப்பை செய்வதுடன் மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை, கையளிப்பதெனவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேபோல் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை நிறுத்துவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றில் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைப்பதற்கான மாகாணசபை உறுப்பினர்கள் விரைவில் வடமாகாணத்தில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து பேசுவதெனவும் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-4)




# கூட்டத் தீர்மானத்திற்கு அமைவாக சிறுபோகச் செய்கையை மேற்கொள்ள விவசாயிகளுக்கு காணிகள் பகிர்ந்தளிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழான சிறுபோகச்செய்கையை திட்டமிட்டபடி மேற்கொள்ளும் வகையில் விவசாயிகள் தமது பயிர்ச் செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 80 வீதமான குளங்கள் நீரின்றிக் காணப்படுவதுடன், சிறுபோக செய்கை மேற்கொள்ளமுடியாத நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில் இரணைமடுக்குளத்தின் தற்போதுள்ள நீரின் அளவை வைத்து ஆயிரத்து 812 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கையும் அதேபோல 300 ஏக்கர்வரையான நிலப்பரப்பில் சிறுதானியச்செய்கையும் மேற்கொள்வதற்கான கூட்டத் தீர்மானம் மாவட்ட அரச அதிபர் தலைமையில் எடுக்கப்பட்டது.

இதனையடுத்து, இரணைமடுக்குளத்தின் கீழ் சிறுபோகச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் கூட்டத் தீர்மானங்களுக்கு அமைவாக மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் காணிகள் அளவீடு செய்து கமக்கார அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டதையடுத்து குறித்த காணிகள் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் பகிர்ந்தளிக்கப்பட்ட தங்களது வயல் நிலங்களை துப்புரவு செய்தல், பண்படுத்தல் போன்ற செயற்பாடுகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை இரணைமடுக்குளத்தின் கீழ் குறிப்பிட்ட சில பகுதிகளில் சிறுதானிய பயிர்ச்செய்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# ஆக்கத்திறன் போட்டிகளில் பங்கேற்ற அறநெறி பாடசாலை மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிப்பு



(மல்லாவி )

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முல்லைத்தீவு மாவட்ட பிரிவின் ஒழுங்குபடுத்தலுடன் மாவட்ட மட்டம் மற்றும் தேசிய மட்டத்திலும் உள்ள அறநெறி பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட ஆக்கத்திறன் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தரும் இணைப்பாளருமான சி.மோகனராசா தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வு நேற்று சனிக்கிழமை காலை 9.30, மணிக்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்விற்கு முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கோ.தனபாலசுந்தரம், முள்ளியவளை கல்யாணவேலவர் ஆலய பிரதம குரு இரகுநாதக்குருக்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் போட்டிகளில் வெற்றியீட்டிய அறநெறி மாணவர்களுக்கான பரிசில்களையும், சான்றிதழ்களையும் வழங்கி கௌரவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய், மாந்தைக் கிழக்கு, ஒட்டுசுட்டான், கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் இயங்கி வரும் 70 அறநெறிப் பாடசாலைகளைச் சேர்ந்த 4 ஆயிரத்து 250 மாணவர்கள் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தேசிய ரீதியாக நடத்தப்பட்ட சித்திரம் வரைதல், நாடகம், நடனம், பேச்சு, பண்ணிசை, வில்லுப் பாட்டு, எழுத்தாற்றல் ஆகிய ஆக்கத்திறன் போட்டிகளில் பங்குபற்றி மாவட்ட ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் வெற்றியீட்டிய அறநெறி மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (2-15)

நீங்கள் புதிதாக கற்கும் ஒவ்வொரு பழமொழியும் உங்களுக்கு ஒரு புதிய ஆன்மா போன்றது.
- செர்பியப் பழமொழி

வலம்புரி
T.P: 021 567 1530
website: www.valampurii.lk

# ஆறின கஞ்சி பழங்கஞ்சி

தமிழ் மொழியில் உள்ள பழமொழிகளின் தத்துவங்களைச் சரியாகப் புரிந்து கொண்டால் அதுவே முகாமைத்துவ சிந்தனையாக மாற்றம் பெறும்.

அந்தவகையில் தமிழ் மொழியில் இருக்கின்ற ஒரு பழமொழிதான் *ஆறின கஞ்சி பழங்கஞ்சி* என்பதாகும்.

இதற்கு இரண்டு பொருள் உண்டு. அதில் ஒன்று கஞ்சி சூடாக இருக்கும்போது அதனைக் குடிக்க வேண்டும். கஞ்சி ஆறிவிட்டால் அது பழங்கஞ்சியாகிவிடும் என்பது.

மற்றையது எதையும் உடனுக்குடன் செய்ய வேண்டும். நாளை செய்யலாம்; பின்னர் பார்க்கலாம் என்றால் அது நடக்காது போகும் என்பது.

ஆக, ஆறின கஞ்சி பழங்கஞ்சி என்ற பழமொழி எங்கள் இனப்பிரச்சினை விடயத்திலும் மிகப்பொருத்தமாகிவிடுகிறது.

ஆம், 2009ஆம் ஆண்டு வன்னி யுத்தம் முடிந்த கையோடு இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டிருந்தால் இனப்பிரச்சினை என்ற விடயம் முடிவுக்கு வந்திருக்கும்.

2009இல் போர் முடிந்த கையோடு உலக நாடுகள் இலங்கை மீது அதீத கவனம் கொண்டிருந்தன. தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற விடயத்தை வலியுறுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டையும் உலக நாடுகள் எடுத்திருந்தன.

அதேசமயம் வன்னியில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் உயிரிழந்த நிலையில் இலங்கை அரசும் சர்வதேசத்துக்கு அஞ்சி இருந்தது.

இந்த நிலையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது சாத்தியமாகியிருக்கும்.

ஆனால் எங்கள் அரசியல் தலைமை இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயம் குறித்து வாய் திறக்கவே இல்லை.

மகிந்த ராஜபக்ஷ தரப்புக்கு பயந்து நடுங்கி எதையும் கதைக்காமல் விடுவதே ஒரேவழி என்ற முடிவில் அமைதியாக இருந்தனர். இதன் பின்னர் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

இலங்கை அரசுக்குக் காலஅவகாசம் வழங்குவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜெனிவாவில் பரிந்துரை செய்தது.

கூடவே கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தனதாக்கிக் கொண்டார். அரசு முன்வைக்கும் வரவு செலவுத் திட்டங்களையெல்லாம் ஆதரித்து வாக்களித்து இலங்கையின் வரலாற்றில் ஒரு புதிய பதிவை எதிர்க்கட்சி செய்தது. இவ்வாறாக காலம் கடக்க,

அரசியலமைப்புச் சீர்திருத்த முன்மொழிவு கொண்டு வரப்பட்டது. பௌத்தத்துக்கு முன்னுரிமை என்பதுதான் சீர்திருத்தத்துக்கு திருச்சிற்றம்பலமாயிற்று.

அரசியலமைப்புச் சீர்திருத்தம் வந்தால் எங்கள் பிரச்சினை தீரும். சமஷ்டி என்பது எழுதப்படாமல் உள்ளேயே இருக்கிறது என்றெல்லாம் நம்மவர்கள் கூறி நம்மை ஏமாற்றினர்.

அரசியல் தீர்வு என்பதை மேலும் இழுத்தடிப்புச் செய்வதற்காக பிரதமர் ரணில் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை என்ற நாடகத்தை கூட்டு எதிரணி தயாரித்து அரங்கேற்றியது.

அந்த நாடகம் சில காலத்தை பாழாக்க, இப்போது இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயம் பேசாமடந்தைபோல ஆயிற்று.

என் செய்வது! காய்ச்சின கஞ்சி ஆறிவிட்டது இனி அவ்வளவுதான்.

# 70ஆவது உலக சுகாதார தினம்
## ஜனாதிபதி தலைமையில் அனுஷ்டிப்பு

(கொழும்பு)

உலக சுகாதார தாபனத்தின் 70ஆவது உலக சுகாதார தின அனுஷ்டிப்பு நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவின் தலைமையில் இடம்பெற்றது.

நேற்று சனிக்கிழமை முற்பகல் கொழும்பு தாமரைத் தடாக கலையரங்கில் இடம்பெற்ற இந்நிகழ்வின் போது, உலக சுகாதார தாபனத்தின் 70ஆவது உலக சுகாதார தினம் இலங்கையில் அனுஷ்டிக்கப்பட்டதன் அடையாளமாக முதல் நாள் நினைவு முத்திரை வெளியிட்டு வைக்கப்பட்டது.

அத்துடன், தபால் மா அதிபர் ரோஹன அபேவர்த்தனவினால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. மேலும், ஹெல்த் அட்டை வெளியிட்டு வைக்கும் நிகழ்வு ஜனாதிபதியால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதுதவிர தேசிய சுகாதார தொலைக்காட்சி அலைவரிசையான லைப் ரிவி அலைவரிசையையும் ஜனாதிபதி ஆரம்பித்து வைத்தார்.

1948ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட உலக சுகாதார தாபனத்தின் முக்கிய நோக்கம் உலக மக்களின் சுகாதார நிலையை மேம்படுத்துவதாகும்.

பல தசாப்தங்களாக உலக சுகாதார தாபனம் ஏனைய பங்காளர்கள் மற்றும் நிதி வழங்கும் நிறுவனங்களுடன் இணைந்து இலங்கை மக்களின் சுகாதார நிலைமையை மேம்படுத்துவதற்காக தாய் சேய் சுகாதாரம், போஷாக்கு மற்றும் சுகாதார சேவையை மேம்படுத்தல் ஆகிய பல்வேறு துறைகளின் கீழ் ஏராளமான உதவிகளை வழங்கியுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, பிரதி அமைச்சர் பைசல் காசிம், உலக சுகாதார தாபனத்தின் பணிப்பாளர் நாயகம், உலக சுகாதார தாபனத்தின் தெற்கு மற்றும் கிழக்காசிய நாடுகளின் பணிப்பாளர் பூனம் செட்ரபால் சிங், உலக சுகாதார தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட பிரதிநிதிகள் மற்றும் 12 நாடுகளின் சுகாதார அமைச்சர்கள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம)

# ஒட்டுசுட்டானில் மாணவி மீது ஆசிரியை கடுமையான தாக்குதல்
## மாங்குள பொலிஸில் முறைப்பாடு

(கண்டாவளை)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் ஆசிரியை ஒருவர் பாடசாலை மாணவி மீது தாக்கியமை தொடர்பில் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் குறித்த பாடசாலை மாணவி பாடசாலைக்கு சமுகம் அளிகாது நேற்றைய தினம் பாடசாலைக்கு சென்றபோது ஆசிரியர் இவ்வாறு கடுமையாக தாக்கியதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறுமியின் உடலில் கடுமையான தழும்புகள் காணப்பட்டமையை அடுத்து சிறுமி மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு நேற்று இரவு மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இதனை தொடர்ந்து சம்பவம் தொடர்பில் மருத்துவ அறிக்கைகள் பெறப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-315)

# மீன்வளர்ப்பு சங்கத்தினரால் கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டம்

இலங்கை மீன்வளர்ப்பு சங்கத்தினரால் பாரிய ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நோய் தொற்று நிறைந்த இறால் வகையொன்றை இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்றமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே குறித்த ஆர்ப்பாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

குறித்த ஆர்ப்பாட்டம் கொழும்பு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு முன்பாக நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கை மீன்வளர்ப்பு சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும், தனியார் நிறுவனம் ஒன்றினால் இந்த இறால் வகை இறக்குமதி செய்யப்படவுள்ளதாகவும், மீன்வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் இதற்கான அனுமதி வழங்கப்படுவதாகவும் இலங்கை மீன்வளர்ப்பு சங்கம் குற்றஞ் சாட்டியுள்ளது. (ம)

# 211 உள்ளூராட்சி சபைகளில் மகிந்தவின் தாமரை மொட்டு ஆட்சி

(கொழும்பு)

மகிந்த ஆதரவு சிறிலங்கா பொதுஜன முன்னணி இதுவரை 211 உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகத்தைக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த பெப்ரவரி மாதம் நடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி சபைகளின் அமர்வுகள் இடம்பெற்று வருகின்றன.

தேர்தலின்போது, 167 உள்ளூராட்சி சபைகளில் எந்தக் கட்சியும் ஆட்சியமைப்பதற்கான பெரும்பான்மை பலத்தைப் பெறவில்லை.

இந்தநிலையில், அறுதிப் பெரும்பான்மை கிடைக்காத சபைகளில் 56 சபைகளின் தலைவர் பதவிகளைக் கைப்பற்றி, சிறிலங்கா பொதுஜன முன்னணி அவற்றைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளது.

இதன் மூலம், இதுவரை 211 உள்ளூராட்சி சபைகள் சிறிலங்கா பொதுஜன முன்னணியின் வசம் வந்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி அதிக ஆசனங்களை வென்ற காலி, நீர்கொழும்பு, பதுளை, தெகிவளை - கல்கிசை மாநகர சபைகள் உள்ளிட்ட பல உள்ளூராட்சி சபைகளிலும் சிறிலங்கா பொதுஜன முன்னணியே ஆட்சியமைத்திருக்கிறது.

ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களை பிளவுபடுத்தியும், தமது பக்கம் இழுத்தும் சிறிலங்கா பொதுஜன முன்னணி, உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைத்து வருவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள், கட்சி மாறி வாக்களிப்பதற்கு 10 மில்லியன் ரூபாய் தொடக்கம், 100 மில்லியன் ரூபாய் வரை பேரம் பேசப்படுவதாகவும் தகவல்கள் வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# தாய்லாந்து போர்க்கப்பல் கொழும்பில்

(கொழும்பு)

தாய்லாந்து நாட்டு போர்க்கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த போர்க்கப்பல்கள் நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

நல்லெண்ண பயணமாக இலங்கை வந்துள்ள குறித்த கப்பல்கள் எதிர்வரும் 9ஆம் திகதிவரை இலங்கையில் தரித்து நிற்கும் என இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது. (ம)

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**வீடு பூர்த்தியடையாமல் புதுமனை புகுவிழா நடத்துவது சரியா?**

புதுமனை புகும்போது பெயின்ட் தரைக்கு பொலிஸ்போடும் வேலைகள, டைல்ஸ் பதிப்பது போன்ற நுட்ப வேலைகளை தவிர்த்துவிட்டு செய்யவேண்டும்.

காரணம் மனைவிழாவில் எதிர்பாராமல் சிறுவர்கள் தெரிந்தவர்களின் வீட்டின் கண்ணாடி, டைல்ஸ்ஜ உடைத்துவிடும்போது மனச்சஞ்சலங்கள் ஏற்பட்டு உறவினர்களிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படும். இதைத் தவிர்க்கவே வீடு பூர்த்தியடையாமல் மனைவிழா செய்ய வேண்டும். *(தொடரும்)*

# தர்மகுலசிங்கத்தின் நூல் வெளியீட்டு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

ஐயம்பிள்ளை தர்மகுலசிங்கத்தின் **சமகாலத்தில் சர்வதேசம்** எனும் தலைப்பில் நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ் மாநகரசபை முன்னாள் பிரதம சுகாதார பரிசோதகரும் ஓய்வுநிலை சிறுவர் நிதியதில் பணிப்பாளருமான பொ.ஜெகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

வாழ்த்துரைகளை பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி ஓய்வுநிலை அதிபர் சோ.பத்மநாதன், டான் ரிவி முகாமைத்துவ பணிப்பாளர் எஸ்.எஸ்.குகநாதன், புனரமைப்பு அமைச்சின் ஓய்வுநிலை செயலாளர் அ.ஜெயரத்தினம் ஆகியோரும் வெளியீட்டுரையினை யாழ். பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பொன்.பாலசுந்தரம்பிள்ளையும் வழங்குவர். (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை மன்னார் பிரதேசத்தில கட்டையடம்பன், மளவராயர்கட்டையடம்பன் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# மரண அறிவித்தல்

**பிறப்பு**

**12**
**•**
**05**
**•**
**1940**



**இறப்பு**

**04**
**•**
**04**
**•**
**2018**

## திருமதி மாணிக்கம் சிவநேசமலர்

முல்லைத்தீவு தண்ணீரூற்றைப் பிறப்பிடமாகவும், கேப்பாப்பிலவை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் சிவநேசமலர் அவர்கள் கடந்த (04.04.2018) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம் - மாணிக்கம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கதிர்காமு - சுந்தரம் தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மாணிக்கம் அவர்களின் பாசமிகு துணைவியும், சோமசுந்தரம், கனகசுந்தரம் (லண்டன்), விமலேஸ்வரி, ஜெகதீஸ்வரி, யோகேஸ்வரி, இராமச்சந்திரன், காலஞ்சென்ற அரிச்சந்திரன், பாலேஸ்வரி (பிரான்ஸ்), குபேந்திரராசா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கனகசிங்கம், காலஞ்சென்றவர்களான குமாராஜா, வேலாயுதம், சின்னத்துரை மற்றும் மீனலோசனி, இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கேதுசிகாமணி, நடராசா, பாலகிருஷ்ணன், ஸ்ரீதரன் (பிரான்ஸ்), ஜெயறஞ்சினி, சந்திராதேவி (லண்டன்), கிருசாந்தி, தீபாஜினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற நகுலேஸ்வரி, புஸ்பமலர், காலஞ்சென்றவர்களான பாலராணி, மனோன்மணி மற்றும் இராசரத்தினம், பாலராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், சிவரூபன் துசி, பவிதன் (லண்டன்), திருத்திகா (பிரான்ஸ்), விதுசா, அபர்னா (லண்டன்), சிந்துஜன் (லண்டன்), சர்மிளா குகலோயன் (லண்டன்), திபர்சனா இன்பநேசன், அகலியா, பிரகாஸ், துசாந், நிறோஜன் (லண்டன்), கதுசன் (பிரான்ஸ்), கதுசிகா, இசைவாணன், வினோயன், மதுசன், கினோயன், சாருஜன் (பிரான்ஸ்), சபினாஸ் (பிரான்ஸ்), துஸ்யந்தி (பிரான்ஸ்), வினுயன் (பிரான்ஸ்), தருணிகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மீரா (லண்டன்), டிதுர்சன், ஜிதுர்சா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.04.2018) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள மூத்த மருமகன் கேதுசிகாமணி அவர்களின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புதுக்குடியிருப்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புதுக்குடியிருப்பு.**
**077 454 1841**

**தகவல் : மாணிக்கம் கனகசுந்தரம்**
**குடும்பம் (லண்டன்)**

(கி-2168)

## ரணிலுக்கு ஆதரவு...

நாட்டில் பிரதம மந்திரிக்கும் அரசுக்கும் எதிராகவும் நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட்டு, அது தோற்கடிக்கப்பட்டுள்ளது. இந்த பிரேரணையால் இலங்கை அரசியலில் தாக்கம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

இதில் பிரேரணையை த.தே.கூ எதிர்த்து வாக்களித்து இருந்தது. 2015இல் ஆட்சி மாற்றத்தின் போது நாட்டின் அனைத்து மக்களும் ஆதரவு வழங்கியிருந்தனர். இது முக்கியமானதாகும் என்றும் சேராத இரு கட்சிகள் ஒன்றிணைந்து தேசிய அரசாங்கம் ஒன்றை அமைத்திருந்தார்கள்.

இது அமைக்கப்பட்டதற்கான முக்கிய நோக்கம் புதிய அரசியலமைப்பு ஒன்றை அமைப்பதற்கும். 2016.1.9 அரசியலமைப்பு ஒன்று கொண்டுவரப்பட வேண்டும் என பாராளுமன்றத்தில் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இதற்கு அனைத்து உறுப்பினர்களும் ஆதரவாக வாக்களித்த னர்.

இந்த தேசிய அரசின் காரணமாக இடைக்கால அறிக்கை ஒன்று தற்போது வெளிவந்துள்ளது. இந்த முயற்சி பொது எதிரணி உட்பட அனைத்து தரப்பும் சேர்ந்து எடுத்த முயற்சியாகும். இந்த நிலையில் தான் உள்ளூராட்சி மன்ற தேர்தல் முடிவுகள் வெளிவந்தன. இதைக்காட்டி அரசியலமைப்பு பணிகளை நிறுத்த முடியாது.

ஆகையால் தான் இந்த அரசு நீடிக்க வேண்டும் புதிய அரசியலமைப்பு பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் பிரேரணை எம் போன்ற சிறுபான்மை கட்சிகளின் ஆதரவுடன் தோற்கடிக்கப்பட்டிருந்தது. இதில் கூட்டமைப்பின் 16 வாக்குகள் பிரதானமாக இருந்தது. கூட்டமைப்பு யாருக்கு ஆதரவு வழங்குகின்றது என்று பார்த்த பின்னர் தான் பிரதமருக்கான ஆதரவுகள் அதிகரித்திருந்தன.

113 வாக்குகளுக்கு மேலாக கிடைத்தது. அதற்கு காரணம், கூட்டமைப்பின் முடிவேயாகும். இதனை தெற்கில் இன ரீதியாக சித்தரிக்க முயற்சிகள் நடைபெறுகின்றது. கூட்டமைப்பின் வாக்குகளால் தான் அரசு காப்பாற்றப்பட்டுள்ளது என கூறப்படுகின்றது.

சிறுபான்மை மக்களின் பிரதிநிதிகள் பிரேரணைக்கு எதிராக தான் வாக்களித்தார்கள்.

பிரதமருடன் 10 அம்ச கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டதா? கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தம் செய்யப்பட்டதா என்று பலராலும் கேள்வியெழுப்பப்படுகின்றது. அரசை தொடர்ந்து முன்னெடுக்கும் போது தடங்கலாக உள்ள 10 விடயங்களையும் சுட்டிக்காட்டியிருந்தேன். அதற்கான பதில்களை நிதி ஊடக அமைச்சர் மங்கள சமரவீர பாராளுமன்றில் தந்திருந்தார். ஆனால் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தம் எதனையும் செய்யவில்லை.

இந்த நிலையில் தேசிய நல்லிணக்கம் அரசு தொடருமா? என்பது குறித்து கேள்வி எழுந்துள்ளது? இது தொடருமா என்பது சந்தேகமாக தான் உள்ளது. என்றார் சுமந்திரன். (ம-4)

## மாதகல் பகுதியில்...

கைது செய்யப்பட்டதாக வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

கஞ்சா தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகரின் வழிநடத்தலில் நேற்று மதியம் 1.30 மணியளவில் மாதகல் மேற்குப் பகுதியில் உள்ள வீடு ஒன்றை வல்வெட்டித்துறை பொலிஸார் சோதனை மேற்கொண்டனர்.

இதன்போது வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 2.50 கிலோகிராம் நிறையுடைய கஞ்சா பொதியினை மீட்ட பொலிஸார் அவ்வீட்டில் இருந்த 27 வயதுடைய இளைஞரை சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

கஞ்சாவினையும், கைது செய்த இளைஞனையும் இளவாலை பொலிஸாரிடம் பாரப்படுத்தியுள்ளதாக வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர். (ம-60)

## வடக்கு ஆளுநராக...

ஆளுநர் கே.சி.லோகேஸ்வரன் வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் றெஜினோல்ட் கூரேயே நீடிப்பார் என ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

எட்டு மாகாணங்களின் ஆளுநர்களுக்கு, விருப்ப அடிப்படையில், இடமாற்றங்களை வழங்க அரசு திட்டமிட்டது.

இந்த மாற்றங்களுக்கமைய, மேல் மாகாண ஆளுநர், கே.சி.லோகேஸ்வரன், வட மாகாண ஆளுநராக மாற்றம் பெற விருப்பம் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் 9 மாகாணங்களின் ஆளுநர்களையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் சந்தித்தார். இதன்போது வடக்கு மாகாண ஆளுநராக றெஜினோல்ட் கூரே நீடிப்பார் என உறுதிப்படுத்தப்பட்டது என அறிய முடிகிறது. (ம)

## கல்வியை தொடர...

மாணவனே மேற்படி தனது உயிரை மாய்த்துள்ளார்.

குறித்த மாணவன் கடந்த வருடம் க.பொ.த சாதாரண தர பரீட்சையில் தோற்றி இருந்தார். அண்மையில் வெளியாகிய பரீட்சை பெறுபேற்றில் சிறந்த பெறுபேறுகளையும் பெற்று சித்தியடைந்துள்ளார்.

கடந்த 4 மாதங்களாக நீர்வேலியில் உள்ள தனது பெரியம்மாவின் வீட்டில் தங்கி நின்று யாழ் நகர்ப்பகுதியில் உள்ள தனியார் கல்வி நிலையம் ஒன்றில் உயர்தர கல்வி கற்று வருகிறார்.

யாழ்ப்பாண பாடசாலையில் அவருடைய கல்வியை தொடருமாறு பெற்றோர் தெரிவித்து வந்துள்ளனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணிக்கு தனது தாயுடன் குறித்த மாணவன் தொலைபேசியில் கதைத்துள்ளார். அப்போது யாழ்ப்பாணத்தில் ஒரு பாடசாலையில் உயர்தரத்தை தொடரலாம் நாம் குடும்பமாக யாழ்ப்பாணத்தில் வசிப்போம் என தாயார் கூறியுள்ளார். அதற்கு மாணவன் மறுப்பு தெரிவித்ததுடன் தான் கிளிநொச்சியில் தான் கற்ற பாடசாலையிலேயே கற்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

பின்னர் அன்றைய தினம் இரவு 11.30 மணிக்கு குறித்த மாணவன் வாந்தி எடுத்துள்ளான். அப்போது பெரியம்மா ஓடி போய் அவனிடம் விசாரித்த போது எதையும் கூற மறுத்து விட்டான் உடனடியாக 12 மணிக்கு கோப்பாய் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அங்கிருந்து யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பிய போது செல்லும் வழியில் மயக்கமடைந்துள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்த போது குறித்த மாணவன் உயிரிழந்துள்ளார்.

பிரேத பரிசோதனையில் இவர் நச்சு திரவம் உட்கொண்டதால் இந்த உயிரிழப்பு ஏற்பட்டதாக மருத்துவர்கள் தெரிவித்ததுடன் என்ன திரவம் என்பதை அறிவதற்கு இரத்த மாதிரி கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த மாணவனுடைய அறையில் உலகம் வெறுத்துவிட்டது வாழ பிடிக்கவில்லை என எழுதப்பட்ட கடிதம் ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்த மரண விசாரணையை யாழ். போதனா வைத்திய சாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். (ம-9)

## பிரதமரைக் காப்பாற்ற...

கப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகள் மட்டுமன்றி, பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இப்பிரேரணைக்கு எதிராக வாக்களித்தது. கூட்டரசிலுள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் இந்த விடயத்தில் ஆதரவாகவும், எதிராகவும் என இரு அணிகளாகப் பிரிந்து நின்றனர். நம்பிக்கையில்லாப் பிரேரணை சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டபோது மகிந்த அணியின் கையே ஓங்கியிருந்தது. அதற்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில் மைத்திரி அணியிலுள்ள உறுப்பினர்களும் ஆதரவு வழங்கியிருந்தனர்.

இதற்கிடையில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் சிலரும் ரணிலுக்கு எதிராகத் திரும்பியதால் ரணிலுக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டது. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே மேற்குலக நாடொன்றும், பலம் பொருந்திய அயல்நாடொன்றும் கொழும்பில் அரசியல் இராஜதந்திர நடவடிக்கையில் இறங்கின. தமது தூதரகம், இராஜதந்திரிகள் ஊடாக இதற்கான வியூகம் வகுக்கப்பட்டிருந்தது. பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட மேலும் சில சிறுபான்மைக் கட்சிகளிடம் இவ்விரு நாடுகளின் உயர்மட்ட அதிகாரிகள் பேச்சுகளை நடத்தியுள்ளனர். நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றப்பட்டு ஆட்சிமாற்றம் ஏற்படும் பட்சத்தில் அதனால் அனைத்துலக மட்டத்தில் ஏற்படும் பாதிப்புகளை அவர்கள் எடுத்துரைத்துள்ளனர். அத்துடன், பிரதமரிடமும் தொடர்பு கொண்டு நம்பிக்கையைக் கைவிடாது காய்நகர்த்துமாறு அவர்கள் கூறியுள்ளனர். இதை உறுதிப்படுத்தும் வகையில் முக்கிய சில நாடுகளின் தூதுவர்கள் பிரதமரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்துத் தெரிவித்துள்ளனர். தற்போதும் பிரதமருக்கு வாழ்த்துகள் குவிகின்றன. மகிந்த ஆட்சியை மேற்குலக நாடுகள் விரும்பவில்லை என்பதையே மேற்படி நகர்வுகள் கோடிகாட்டி நிற்கின்றன. அதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றதையடுத்து பெப்ரவரி நடுப்பகுதியில் இலங்கையில் அரசியல் ஸ்திரமற்றநிலை ஏற்பட்டது. அவ்வேளையி லும் இவ்விரு நாடுகளின் அதிகாரிகள் தலையிட்டனர் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## கோடிக்கணக்கான...

துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக நேர்காணல் ஒன்றினை வழங்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பிரதமருக்கு எதிராக வாக்களிக்கவிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 4 முதல் 5 கோடிகள் வரை பணம் கொடுக்கப்பட்டு விலைக்கு வாங்கப்பட்டதாகவும் தயாசிறி கூறியுள்ளார்.

இந்த விடயத்தினை பணம் பெற்றுக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தன்னிடம் கூறியதாகவும், குறித்த உறுப்பினருக்கு இருந்த கடன் தொல்லை காரணமாகவே அந்தப் பணத்தினை பெற்றுக்கொள்ள நேர்ந்ததாக அவர் தன்னிடம் கூறியுள்ளதாகவும் தயாசிறி சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த கொடுக்கல் வாங்கல் விடயத்தில் சிலவேளை மத்திய வங்கி ஊழலில் தொடர்புபட்டவர்கள் சம்பந்தப்பட்டிருக்கலாம் என வும், அவற்றினை கூடிய விரைவில் ஆதார த்து டன் வெளிப்படுத்துவதாகவும் தயாசிறி மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## கசிப்பு உற்பத்தி நிலையம்...

டபிள்யூ.ஆர்.விமல குணரட்ணா தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

தருமபுரம் பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து தருமபுரம் பொலிஸ் அணியினரே கசிப்பு உற்பத்தி நிலையத்தை கைப்பற்றி தடயப் பொருட்களை கைப்பற்றியுள்ளதுடன், சந்தேகத்தின் அடிப்படையில் சம்பவ இடத்தில் வைத்து சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்த பின்னர் கசிப்பு உற்பத்தி நிலையத்தை நிர்மூலமாக்கி உள்ளனர்.

இச் சம்பவத்தில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்கள் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் கைதான சந்தேக நபரிடம் விசாரணைகள் நடை பெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன் சந்தேக நபரை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப் படவுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. ஆர். விமல குணரட்ணா தெரிவித்துள்ளார். (ம-15)

## யாழில்...

ப்பட்டுள்ளார். இவரிடம் மத்திய மற்றும் மாநில உளவுத் துறை பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

துருக்கி நாட்டை சேர்ந்த மஹீர் தேவ்ரிம் (வயது 44) என்பவர் பல்வேறு பிரச்சினை காரணமாக கடந்த 1993-ம் வருடம் துருக்கி நாட்டில் இருந்து வெளியேறி அங்கிருந்து புறப்பட்டு கஜகஸ்தான், தாய்லாந்து மற்றும் மலேசியா போன்ற நாடுகளில் வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த 2017ம் வருடம் மார்ச் மாதம் இலங்கை வந்த இவர் இலங்கையின், தலைமன்னார் மற்றும் யாழ்ப்பாணம் பகுதியில் வசித்து வந்துள்ளார். பாகிஸ்தான் அரசின் கொள்கைக்கும் பாகிஸ்தானுக்கும் எதிராக இருக்கும் இவர் இந்தியாவிற்கு செல்ல பல முறை முயற்சி செய்துள்ளார்

இந்த நிலையில் குறித்த நபர் யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்று மதியம் 12மணிக்கு படகு வழி பயணத்துக்கு 25000 ரூபாய் செலுத்தி தோணி மூலம் இராமேஸ்வரத்திற்கு சென்றுள்ளார். தகவலையறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் அவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும் இவரை மத்திய மற்றும் மாநில உளவுத்துறை பொலிஸார் கைது செய்து இவர் வந்ததிற்கான முக்கிய காரணம் என்ன? யார் மூலம் வந்துள்ளார்? என்ற கோணத்தில அவரிடம் தொடர் விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர். (ம-9)

## சட்டவிரோத சிங்கள...

கோரிக்கை ஒன்றை முன்வைத்திருந்தார்.

இந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் மகாவலி திட்டம் தொடர்பில் நேற்றுமுன்தினம் நடைபெறவிருந்த கூட்டம் எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தனின் தலையீட்டை அடுத்து இடை நிறுத்தப்பட்டுள்ளது. மகாவலி நீர் எங்கள் விவசாயத்துக்காக வரவேண்டும் ஆனால் அதனுடன் சிங்கள குடியேற்றங்கள் வரக்கூடாது. அதனை தொடர்ந்து எதிர்ப்போம் என்றார்.

இதேவேளை வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் மேற்படி சிங்கள குடியேற்றங்களை எதிர்த்து வடக்கு மாகாண முதலமைச்சர் உட்பட உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை குறித்த சிங்கள குடியேற்றம் நிறுத்தப்படும் என அரசு பல தடவைகள் உறுதியளித்திருந்த போதிலும், தற்போது வரை மிக வேகமான முறையில் சிங்களமயமாக்கலை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

## கங்கையில் நீராடச்...

நடவடிக்கையில் பொலிஸ் மற்றும் பிரதேச மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் ஏனைய நால்வரின் சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பன்வில பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம)

## கட்சியின் செயற்குழுவினால்...

எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் கட்சியின் மறுசீரமைப்புத் தொடர்பில் தீர்க்கமான தீர்வைக் காண 12 பேர் கொண்ட தலைமைத்துவக் குழு நியமிக்கப்பட்டுள்ளது என ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு உறுப்பினர் தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்கவின் மருமகன் ருவான் விஜயவர்த்தன, ஹரின் பெர்னாண்டோ, அகிலவிராஜ் காரியவசம், ரஞ்சித் மத்தும பண்டார, நவீன் திசாநாயக்க, நளின் பண்டார, மங்கள சமரவீர, அஜித் பி பெரேரா, இரான் விஜயவர்த்தன, சஜித் பிரேமதாஸ, ரவி கருணாநாயக்க மற்றும் அலவத்துலவ ஆகியோரே நியமிக்கப்பட்டுள்ளனர். (ம)


SM கேணியடி வெற்றி நாதன்
புதுவருடப் பொது அறிவுப் போட்டி

1. உலகத்தில் எந்தவொரு வல்லரசுக்கும் அடிபணியாமல் வாழ்ந்த தலைவர் யார்?
2. உலகத்தில் எந்தப் பதவியும் ஏற்காமல் கொண்டதே கொள்கை என இறுதி மூச்சு வரை வாழ்ந்த தலைவன் யார்?
3. உலகத்திலே உயர்ந்த மனிதன் யார்?
4. உலகத்திலே கறை படியாத கை யார்?
5. உலகத்திலே எல்லோரும் ஒருவனுக்கு தலைகுனிவோம் அவன் யார்?
6. உலகில் இளைஞர்களை சிந்திக்கத் தூண்டிய குற்றத்திற்காக நச்சுக் கோப்பையை கொடுத்து மரண தண்டனை விதிக்கப்பட்ட சிந்தனையாளன் யார்?

1ஆம் பரிசு ரூ.5000
2ஆம் பரிசு ரூ.3000
3ஆம் பரிசு ரூ.2000
குலுக்கல் முறையில் பரிசு கொடுக்கப்படும்.

உங்கள் தொலைபேசி இலக்கத்துடன் கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

ந.தருமராஜா MGR
தபால் பெட்டி இலக்கம் 115, தபால் கந்தோர், காரைநகர்
பரிசில் வழங்கப்படும் இடம்:-SM வெற்றிநாதன் அரங்கு காரைநகர்
காலம்:-ஞாயிற்றுக்கிழமை (15.04.2018)
(அ-2160)

**ஆடம்பர வசதியுடன் கூடிய**
**வீடு வாடகைக்கு உண்டு**

யாழ்.நகரில் அமைதியான சூழலில் புதிய வீடு நாள், கிழமை, மாத அடிப்படையில் வாடகைக்கு உண்டு. திருமண நிகழ்வுகள், சுபகாரியங்கள் வெளிநாட்டிலிருந்து வருபவர்கள், வெளிமாவட்டத்திலிருந்து வருபவர்கள் தங்குவதற்கு சகல வசதிகளும் உண்டு. A/C, Non A/C தளபாட வசதிகள், இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் சமையல் பாத்திரங்கள் என அனைத்து வசதிகளும் உண்டு.
குறிப்பு:
சுபநிகழ்வுகளுக்குரிய அனைத்து வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.
தொடர்பு:- 077 311 0015 (3563)


## தமிழ...

யால் எல்லை தாண்டி சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்ட குறித்த மீனவர்கள் விசாரணைகளுக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், சட்டமா அதிபரின் பணிப்புரைக்கு அமைய அவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதையடுத்து விடுவிக்கப்பட்ட மீனவர்கள், யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அவர்களைத் தமிழகத்துக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

**CNR world wide Express**
Courier & Cargo
International Courier & Cargo Service.



உள்நாடு, வெளிநாடுகளுக்கான அதிவேக, மிதவேக தபால், பொதிகள் பரிமாற்று சேவை.
அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்.
கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்கு பரிமாற்ற சேவை.
வீடு, அலுவலகங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி.
அனுப்பும் பொதிகளை இணையதளத்தில் கண்காணிக்கும் வசதி.
இல.401, மணிக்கூட்டு கோபுரவீதி.
(பெருமாள் கோவில் அருகாமை)
யாழ்ப்பாணம்.
Tel : 0215674145
Mob : 0772931062
(சி-2142)

**அண்ணா பொதிகள் சேவை**
976,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
லண்டன், ஜேர்மனி, கனடா மற்றும் சில நாடுகளுக்கு விலை குறைக்கப்பட்டுள்ளது
வெளிநாடு,உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை
021 221 5656 070 330 5500
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள். (C-2090)
யாழ்ப்பாணம் | வேலணை | ஊர்காவத்துறை | சாவகச்சேரி
கிளிநொச்சி | வவுனியா | கனகராயன்குளம் | முல்லைத்தீவு

**விரைவு பொதிகள் சேவை**
விசேட விலை குறைப்பு
UK – 550*/=Kg
கனடா-1050*/=Kg
DELIVERY IN 3-5 DAYS
தொடர்புகளுக்கு
0768226240
● மானிப்பாய்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS (C-1982)

**வேலையாட்கள் தேவை**
நெல்லியடியில் உள்ள குளிர்பான நிலையம் ஒன்றில் பணி புரிவதற்கு வேலையாட்கள் (ஆண்கள்) தேவை. வேலை விபரம் சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்புகளுக்கு:
077 377 3197
(சி-2166)

**விற்பனைக்கு**
வட்டக்கச்சியில் வீடு,வயல், பயன் தரும் தென்னைமரங்களுடன் காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு இல:
140, கட்சன்வீதிச்சந்தி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி
(வட்டக்கச்சி மத்திய கல்லூரிக்கு அருகாமையில்)
(3555)

**சுந்தர்சன் நிறுவனத்தின்**
02.04.2018 - 21.04.2018 வரை
சித்திரைப் புத்தாண்டு
விசேட விலைக்கழிவும்
இலவச விநியோகமும்




வீட்டுக்கு தேவையான மின் உபகரணங்கள் அத்தனைக்கும் உத்தரவாதத்துடன் கூடிய விசேட விலைக்கழிவு தரப்படும்
138, யாழ் வீதி, மானிப்பாய்
(சி-2141)

**அகிலா நகை மாடம்**
காக்கா கடைச்சந்தி, யாழ் வீதி, கிளிநொச்சி.

ஆபரண அரசி அகிலாவின் முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு தங்க நகைகளை முற்பதிவு மற்றும் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர் அனைவருக்கும் விசேட விலைக்கழிவும் பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கப்படும்.

அத்துடன் அட்சய திருதியை முன்னிட்டு 9-ம் திகதி தொடக்கம் 18-ம் திகதி வரை தங்க நகைகளை முற்பதிவு மற்றும் கொடுப்பனவுகள் செய்து தங்க நாணயம் ஒன்றை பரிசாக வென்றிடுங்கள்



கிளை: நவீனா நகை மாடம்
இல.191, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0212283559, 0763490023
(சி-2153)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.04.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378


வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 161

வள்ளுவர் ஆண்டு 2049 | 08.04.2018 | தொலைபேசி : 021 222 3378



# பிரதமர் ரணில் மீது நம்பிக்கை

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு



## வேம்படி மகளிர் கல்லூரி வீதியை ஒருவழிப் பாதையாக்குங்கள்!

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

**விதானையார்:** ஒரு மாதிரியாக நம்பிக்கையில்லாப் பிரேரணையும் வந்து போயிற்றுது. இனிப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பதவிக்குப் பங்கம் வராது.

**சாத்திரியார்:** விதானையார் அப்படிச் சொல்ல முடியாது. காலநேரம் பிழைக்கும் போது எல்லாம் மாறத்தான் செய்யும்.

**பண்டிதர்:** என்ன இருந்தாலும் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்து தங்களைப் பிசக்கிக் கொண்டதுதான் கூட்டு எதிரணியினருக்குக் கிடைத்த மிச்சம்.

**கங்காணியார்:** உள்ளூராட்சி சபைத் தேர்தலில கிடைத்த வெற்றியை உச்சமாக அனுபவிக்க முடியாத அளவில நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வியில முடிந்து போயிற்றுது.

**மூப்பர்:** அது சரி நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்த்து வாக்களித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின்ர பதவியைப் பாதுகாத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பிரதமர் ரணில் ஏதேனும் உதவி செய்வாரோ.

**விதானையார்:** நானெண்டால் நம்பன். பிரேரணைக்கு முன்னர் அப்படி இப்படி உறுதிமொழிகளைப் பிரதமர் ரணில் கூட்டமைப்புக்கு வழங்கியிருக்கலாம். இப்ப பிரேரணை தோற்கடிக்கப்பட்டு விட்டது. இனி உறுதிமொழிகளை நிறைவேற்றுவதில காலதாமதங்கள் எடுக்கத்தான் செய்யும்.

**வாத்தியார்:** பிரதமர் ரணிலை ஆதரித்து வாக்களிக்கிறதாக இருந்தால், சர்வதேச போர்க்குற்ற விசாரணையை மேற்கொள்ள வேணும் எண்ட கோரிக்கையை கூட்டமைப்பு முன்வைக்கல்லத்தானே!

**விதானையார்:** வாத்தியார் எங்கட ஆக்களை நம்பினியளோ நடுத்தெருவில தான் நிப்பியள். காணாமல் போனவர்களின்ர விவகாரம், தமிழ் அரசியல் கைதிகளின்ர விடுதலை இதெல்லாம் நடக்கப் போறதில்லை.

பிரதமர் ரணிலை ஆதரிக்கிற போது யாரும் குறை சொல்லக் கூடாதல்லோ. அதுதான் பத்துக் கட்டளைகளை கூட்டமைப்பு பிரதமர் ரணிலிட்ட முன்வைத்தது. பத்துக் கட்டளையில எத்தனை நடந்தேறும் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்பம்.

**கங்காணியார்:** அதுசரி வாத்தியார், மாகாண சபைகளை உடனடியாகக் கலைக்கிற நோக்கமொண்டு அரசாங்கத்திட்ட இருக்கிறதாகக் கேள்வி நடக்கக்கூடிய வாய்ப்பு இருக்குதோ.

**வாத்தியார்:** இன்னும் ஒரு ஐந்து மாதம் தானே இருக்கு. இதுக்குள்ள அவசரப்பட்டு மாகாண சபைகளைக் கலைக்கமாட்டினம் எண்டுதான் நினைக்கிறன்.

**பண்டிதர்:** நடிகர் கருணாஸ் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு வந்து எங்கட முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயாவைச் சந்தித்தவரல்லோ.

**சாத்திரியார்:** தமிழ்நாட்டில அகதி முகாம்களில இருக்கிற ஈழத் தமிழ் மாணவர்களுக்கு ஒரு கல்லூரியை அமைக்க கருணாஸ் ஏற்பாடு செய்துள்ளார்.

அந்தக் கல்லூரிக்கான அடிக்கல் நாட்டு விழாவிற்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயாவை வருகை தருமாறு அழைக்கத்தான் கருணாஸ் யாழ்ப்பாணத்திற்கு வந்தவர்.

**மூப்பர்:** நல்ல விடயம். எங்கட முதலமைச்சர் அந்த நிகழ்வில கலந்து கொள்வது நல்லது. தமிழ்நாடும் ஈழத்தமிழ் மக்களும் எப்பவும் ஒன்று சேர்ந்திருக்க வேணும். அதுதான் தமிழர்களுக்கான பலம்.

**கங்காணி:** மூப்பர் சொல்றது நூறு வீதம் உண்மை. அதோட தமிழ் நாட்டில் இருக்கிற கைத்தொழில் உற்பத்தி முயற்சிகளை எங்கட மண்ணிலும் ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்படவேணும்.

**சாத்திரியார்:** கங்காணியார் நீங்கள் சொல்லுறது எனக்கு விளங்கல்ல.

**கங்காணியார்:** சாத்திரியார் இன்றைக்கு தமிழ்நாடு பாரிய கைத்தொழில், சிறு கைத்தொழில், குடிசைக் கைத்தொழில், விவசாயம், விவசாயத் தொழில்நுட்பம் என ஏகப்பட்ட தொழில் சார் பொருளாதாரத்தில் பாரிய முன்னேற்றம் கண்டுள்ளது.

உதாரணத்திற்கு ஆலயங்களுக்குத் தேவையான பட்டுக்கள், திருநீறு, சந்தனம், குங்குமம் போன்ற பொருட்கள் எல்லாம் தமிழ்நாட்டில உள்ள குடிசைக் கைத்தொழில்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இதுதவிர, விவசாயத்துக்கென நவீனதொழில் நுட்பம் கையாளப்படுகிறது, மாடு வளர்ப்பு, பால் உற்பத்தி என்பன அங்க ஓகோ என்று நடக்குது.

இத்தகைய தொழில் முயற்சிகளை எங்கட மண்ணில கொண்டு வந்தால், எங்கட மக்களும் சொந்த முயற்சி- சுயமுயற்சி எண்டு ஆர்வம் காட்டுவினம்.

**வாத்தியார்:** எங்கட முதலமைச்சர் தமிழ் நாட்டிற்கு விஜயம் செய்தால், இதுபற்றி அங்குள்ளவர்களோட சந்தித்து கதைக்க வேணும்.

இண்டைக்கு எங்கட மண்ணில உடனடித் தேவையாக இருப்பது வேலை வாய்ப்புத்தான். எங்கட மக்கள் கடும் முயற்சி உடையவர்கள். ஆனால் அவர்களுக்கான வழிப்படுத்தலும் தொழில் முயற்சி பற்றிய அறிவூட்டலும் தேவையான உபகரணங்களும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இதால அவர்கள் எதுவும் செய்ய முடியாதவர்களாக இருக்கினம்.

**பண்டிதர்:** ஆலடி மாநாட்டிற்கு ஒரு கடிதம் வந்திருக்குது.

**வாத்தியார்:** பண்டிதர் ஐயா அந்தக் கடிதத்தை வாசிங்க.

**பண்டிதர்:**

• தலைவர், ஆலடி மாநாடு.

ஐயா,

உங்கள் ஆலடி மாநாட்டு விடயங்களை ஒழுங்காகப் பார்க்கின்றேன். நீங்கள் ஆராயும் விடயங்கள் மிகவும் நல்லவை. அந்த வகையில் எங்கள் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கும் ஆலடி மாநாட்டில முன்னுரிமை கொடுப்பீர்கள் என்று நம்புகின்றேன். யாழ்ப்பாணத்தில நாளாந்தம் போக்குவரத்து நெருக்கடிகள் ஏற்பட்ட வண்ணமுள்ளன.

அதிலும் குறிப்பாக யாழ். நகரத்தை அண்மித்திருக்கக்கூடிய பிரபல்யமான பாடசாலைகளுக்கு முன்பாக பாடசாலை ஆரம்பமாகும் நேரத்திலும் முடியும் நேரத்திலும் ஏற்படுகின்ற போக்குவரத்து நெருக்கடி என்பது சொல்லி மாளாது. எனினும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் எவரும் இது தொடர்பில் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை.

இதுவிடயம் பற்றி ஆலடி மாநாட்டில் பிரஸ்தாபியுங்கள். குறிப்பாக யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி வீதியை பாடசாலை தொடங்கும் முடியும் நேரங்களிலாவது ஒரு வழிப்பாதையாக்குவது போக்குவரத்து நெருக்கடியைக் கணிசமாகக் குறைக்கும்.

இதுபோல யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபலமான பாடசாலைகளுக்கு முன்பாக பாடசாலை தொடங்கும் முடியும் நேரங்களில் நிலவும் போக்குவரத்து நெருக்கடிகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரில் சென்று அவதானித்து அதற்கான மாற்றுவழி பற்றிச் சிந்தித்து பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

பண்டிதர் கடிதத்தை வாசித்து முடித்தார். கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது உண்மையானவை என்பதை யாரும் மறுதலிக்க முடியாது. எனவே இது தொடர்பில சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேணும் என்றும் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி வீதியை பாடசாலை ஆரம்பமாகும் போதும் நிறைவடையும் போதும் ஒருவழிப் பாதையாக ஆக்கவேண்டும் என்றும் தீர்மானம் எடுப்பம்.

வாத்தியார் இவ்வாறு கூற, அனைவரும் அத்தீர்மானத்தை ஏகமனதாக ஏற்றுக்கொள்ள, ஆலடிப் பிள்ளையாரும் குறித்த தீர்மானத்தை ஆதரிப்பது போல கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# பிரதமர் வென்றாலும் நம்பிக்கை இல்லை!



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வியடைந்ததால் நல்லாட்சி அரசின் ஆட்சி நீடிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஒருவேளை, ரணில் விக்கிரமசிங்க மீது கொண்டுவரப்பட்ட பிரேரணை வெற்றி பெற்றிருந்தால் ஐக்கிய தேசியக் கட்சி - ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இணைந்து முன்னெடுத்துவரும் இந்த தேசிய அரசு நிலைத்திருக்காது.

அதற்குப் பல காரணங்களைக் கூறலாம். தன்னால் ஜனாதிபதியாக உருவாக்கப்பட்ட (சு.கவின் பொதுச் செயலாளர்) மைத்திரிபால சிறிசேனவின் கீழ், ஐ.தே.க. சார்பான ஒருவரோ, சு.க.சார்பான ஒருவ்ரோ பிரதமராக வர ரணில் விட்டிருக்க மாட்டார் என்பது யதார்த்தம்.

கட்சிகளுக்குள் பிளவை ஏற்படுத்துவதை இராஜதந்திரமாகக் கொண்டு நாற்பது ஆண்டுகளாகப் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ரணில், நல்லாட்சிக்கு எதிராகவுள்ள தரப்புக்களை ஒன்று திரட்டி மீண்டும் ஆட்சிக்கு வந்திருப்பார்.

மைத்திரியை ஜனாதிபதியாக்கிய ரணிலுக்கு மகிந்தவை ஜனாதிபதியாக்கவும் தான் பிரதமராக வரவும் நீண்ட காலம் சென்றிருக்காது.

ரணில் எங்கு சென்றாலும் எந்தத் தரப்புடன் இணைந்தாலும் ஏன், எதற்கு என்று கேட்காமல் ஆதரவளிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராகவுள்ளது.

வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்க எத்தகைய இராஜதந்திரங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கையாண்டதோ அதனைப் போன்று மகிந்தவுடன் இணைந்ததற்கும் விளக்கமளிக்க அக்கட்சியிலுள்ள ஏகப்பட்ட தலைவர்கள் தயாராவுள்ளனர்.

இது ஒரு புறமிருக்க, ரணில் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வியடைய அந்தப் பிரேரணையைக் கொண்டு வந்த தரப்பே காரணம் எனலாம்.

ஆட்சியாளர்கள் மீது மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டுள்ளதை உள்ளூராட்சி தேர்தல் மூலம் மக்கள் வெளிப்படுத்தியிருந்தாலும் பாராளுமன்றத்தில் ஆதரவுத் தளம் அப்படியே தக்க வைக்கப்பட்டிருந்ததை அறியாமல் செயற்பட்டனர்.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் பிரதமர் மீது வெறுப்புக்கொண்டிருந்தாலும் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்த தரப்பான மகிந்த அணிக்குத் துணை நிற்கத் தயாரில்லை.

அதிலும் குறிப்பாக பிரதான எதிர்க் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதமரை எதிர்த்து, மகிந்த அணிக்கு ஆதரவளிக்காது என்பதை முன்பே அறிந்திருந்தும் அதற்கு மாற்று ஏற்பாடுகளைச் செய்யாமல் விட்டது பெரும் தவறாகிவிட்டது.

உலகத்திலேயே பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த பிரதான எதிர்க்கட்சி என்றால் அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகத்தான் இருக்க முடியும்.

16 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் எல்லாப்பக்கமும் கடும் விமர்சனங்களுடன் செயற்படும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு எதிராக வாக்களிப்பதற்கும் தனது பதவியைப் பாதுகாப்பதற்கும் எடுத்துக்கொண்ட முயற்சி, ஆட்சியில் அங்கம் வகிக்கும் ஜனாதிபதியை விட அதிகமானது.

எதிர்க்கட்சித் தலைவராக பாராளுமன்றத்தில் உள்ளவர், ஆளும் கட்சி மீது விமர்சனங்களை, குற்றச்சாட்டுக்களை முன்வைக்காவிட்டாலும் பரவாயில்லை.

ஆனால், இலங்கை மத்திய வங்கிபிணை முறி விநியோகத்தில் இடம்பெற்ற பாரிய மோசடிகள் தொடர்பாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்றாவது கூறியிருக்கலாம்.

அதனைச் செய்யத் தவறிய எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், பிரதமர் ரணிலைப் பாதுகாப்பதற்காகப் படாத பாடு பட்டதை கடந்த 4 ஆம் திகதி நாடாளுமன்றில் காணக்கூடியதாக இருந்தது.

அதேவேளை, நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிக்க வேண்டும் என்பதற்காக தனது கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களைக் கூடப் பகைக்கத் தயாராகிவிட்டார்.

கூட்டமைப்பு, ஏன் இவ்வாறு செயற்படுகிறது என்று மக்களை யோசிக்கவிடக் கூடாது என்ற நோக்கில், எல்லாமே மக்கள் நலன் சார்ந்ததுதான் என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்துவதற்காக திரைப்படப் பாணியில் களத்தில் இறங்கியது. ( இதற்கு இயக்குநர் சம்பந்தன் இல்லை)

நகைச்சுவை நடிகர் வைகைப் புயல் வடிவேலு இரட்டை வேடத்தில் நடித்து வெளியான அரச குடும்பத்தில் மற்றும் நாட்டில் நடைபெறும் சதித்திட்டங்களை அடிப்படையாகக் கொண்ட திரைப்படம் 23 ஆம் புலிகேசி.

இந்தப்படத்தின் இறுதியில் நாட்டு மக்களுக்கு 10 கட்டளைகள் பிறப்பிக்கப்படும். அதேபோன்று ஒரு காட்சியாக,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பாதுகாப்பதற்காக வாக்களிக்க வேண்டும் என்றால் பத்து நிபந்தனைகளுக்கு அல்லது கோரிக்கைகளுக்கு (சிலர் கட்டளையிட்டதாகக் கொக்கரிக்கின்றனர்) உடன்பட வேண்டும் என்று அறிக்கைவிடப்பட்டுள்ளது.

இந்த நிபந்தனைகளுக்கு பிரதமர் ரணில் உடன்பட்டதாகக் கூறப்படும் அதேவேளை போர்க்குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ்க் கூட்டமைப்பு முன்வைக்கவில்லை என்றும் அந்தத் தரப்பின் ஊடாகவே சுட்டிக்காட்டப்பட்டுள்ளதால் எல்லாம் நாடகமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

அதேவேளை இந்த நிபந்தனைகளை வரவு- செலவுத் திட்டத்திற்கு ஆதரவளிக்க முன்னர் முன்வைத்திருந்தால், இப்போது ஒரு வருடத்தைக் கடந்த நிலையில் வடக்கில் முன்னெடுக்கப்பட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டத்திற்கு எப்போதோ தீர்வு கிடைத்திருக்கும்.

அல்லது, எந்தவித வழக்கு விசாரணைகளும் இன்றி தமிழன் என்ற ஒரே காரணத்திற்காக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைகளில் சித்திரவதைகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டிருப்பார்கள். அவர்களின் விடுதலைகளுக்காக கருணை மனுக்களில் கையெழுத்துப் பெற்றுக் கொண்டு அலையவேண்டிய அவசியம் தமிழினத்திற்கு ஏற்பட்டிருக்காது.

இராணுவத்தின் பிடிக்குள் அகப்பட்டிருக்கும் தமது பூர்வீகக் காணிகளை விடுவிக்கக் கோரியும் நலன்புரி முகாம் வாழ்க்கைக்கு முடிவுகட்டக் கோரியும் போராடும் தமிழ் மக்களுக்கு விடிவு காலம் கிடைத்திருக்கும்.

தமிழ் மக்களின் நலன்கள் பற்றிச் சிந்திக்காது சுயநலனை முன்னிலைப்

## புலிகேசி படம் காண்பித்த கூட்டமைப்பு



படுத்தி செயற்பட்டுவிட்டு தற்போது பிரதமர் ரணிலைக் காப்பாற்ற வேண்டும் என்ற கபட நோக்கத்துடன் பத்து வாக்குறுதிகளைப் பெற்றுவிட்டதாக அறிக்கை விடுகின்றனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பூரண ஆதரவுடன்) எதிராக 122 வாக்குகள் பெற்று 46 மேலதிக வாக்குகளால் ஐ.தே.க வெற்றி பெற்றாலும் தமிழ்க் கூட்டமைப்பு பாரிய தோல்வியைச் சந்தித்துள்ளது.

ஐ.நாவிற்கு சென்று சிங்கள அரசிற்காக ஆதரவாகச் செயற்பட்டு இரண்டு வருட கால அவகாசம் பெற்றுக்கொடுத்தது போன்று ரணிலைக் காப்பாற்ற தமிழ் மக்கள் வழங்கிய ஆணையைத் தவறாகப் பயன்படுத்தி யானையைக் கொண்டு வீட்டுக்கு மேலே மண்ணை அள்ளிப் போட்டுள்ளது. இதற்கான பிரதிபலனை வடக்கு மாகாண சபைத் தேர்தலின் போது தமி ழ்த் தேசியக் கூட்டமைப்பு நிச்சயம் எதிர் கொள்ளும் .

ரணிலுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வியடைந்தால் ஆட்சியாளர்கள் மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது என்று அர்த்தம் கற்பிக்க முடியாது. நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிக்க ரணில் பட்ட பாட்டை நாடே அறியும். எனவே 122 வாக்குகள் கிடைத்து விட்டதால் ரணில் மீது நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது என்று ஐ.தே.கவினரோ அவர்களுக்கு ஆதரவளித்த தமிழ்க் கூட்டமைப்பினரோ கருத முடியாது.

அதேவேளை, பட்ஜெட்டுக்கு ஆதரவளிக்க இரண்டு கோடி ரூபாய் வாங்கிய விவகாரத்தால் உள்ளூராட்சி சபைகளில் தனித்து ஆட்சியமைக்க முடியாமல், இனி அரசியல் செய்ய முடியாத இக்கட்டான சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ரணிலை ஆதரிக்க எத்தனை கோடி வாங்கியதோ! அதனை மறைக்கத் தான் அறிக்கை விட்டதோ! என்று தமிழ் மக்கள் மத்தியில் பேசப்படுவதையும் பொருட்படுத்தாமல் இருக்க முடியாது.

எஸ். ஆர்.கரன்




ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம் பகுதியில் உங்கள் ஆக்கங்கள் இடம்பெற வேண்டும் என்றால் உங்கள் சுய ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.

# காகம், நரி



பாப்பா பாப்பா கதை கேளு
காக்கா நரியும் கதை கேளு
தாத்தா பாட்டி சொன்ன கதை
அம்மா அப்பா கேட்ட கதை

ஊருக்கு வெளியே கடையிருக்கு
கடையில வெங்காய வடையிருக்கு
கடையில வடைய திருடிக்கிச்சாம்
காக்கா மரத்திலே குந்திக்கிச்சாம்

காக்கா மூக்கில வடையிருக்க
குள்ள நரியுமே பாத்திடுச்சாம்
லேசா வடையை வாங்கிடவே
நரியொரு தந்திரம் பண்ணிக்கிச்சாம்

காக்கா பாட்டு பாடச்சொல்லி
குள்ள நரியுமே கேட்டுக்கிச்சாம்
வாய திறந்து காக்கா பாட
வடையும் கீழே விழுந்திடுச்சாம்
விழுந்தத நரியும் கௌவிக்கிச்சாம்
வாயில போட்டுத் தின்னுடிச்சாம்

பாப்பா பாப்பா கதை கேளு....

# பொது அறிவு

1)காற்றில் மூங்கில்கள் அசைவால் ஏற்பட்ட இசைக் கருவி எது?

**புல்லாங்குழல்**

2)தந்தி கருவிகள் என அழைக்கக்கப்படுவது எது?

**நரம்புக் கருவிகள்**

3)கொட்டு வாத்தியங்கள் என அழைக்கப் படுவது எது?

**தோல் கருவிகள்**

4)கஞ்சக் கருவிகள் என்று அழைக்கப்படுவது எது?

**கனக் கருவிகள்**

5) பின்வருவனவற்றுள் நரம்புக்கருவிகள் எவை?

**1) தம்புரா**
**2) வீணை**
**3) யாழ்**

6) பின்வருவனவற்றுள் துளைக் கருவிகள் எவை?

**1) புல்லாங்குழல்**
**2) நாதஸ்வரம்**





# ஒத்த சொற்கள்

**ஒரு சொல்லின் பொருளுக்கு ஒத்த பொரு ளைத் தரும் சொல் அச் சொல்லுக்கு ஒத்த கருத்து சொல் ஆகும்.**

1. அகிலம் -பூமி
2. அமர்தல் - இருத்தல்
3. அடவி - காடு
4. அகவை - வயது
5. அடிகோலுதல் - தொடங்குதல்
6. அனல் -நெருப்பு
7. அப்பா-தந்தை
8. அம்மா-தாய்
9. அஃகம் - தானியம்
10. அகங்காரம் - செருக்கு
11. அகதி - கதியற்றவன்
12. அகதி - கதியிலி
13. அணி - ஆபரணம்
14. அண்டம் - உலகம்
15. அகம்பாவம் - செருக்கு
16. அகரமுதலி - அகராதி
17. அதிசயம் - புதுமை
18. அகலம் - விரிவு
19. அகலல் - நீக்கல்
20. அகல் - தகழி
21. அந்தி - மாலைப்பொழுது
22. அபசாரம் - குற்றம்
23. அபயம் - அடைக்கலம்
24. அபரபக்கம் - தேய்பிறை
25. அபராதம் - தண்டனை
26. அபராதி - குற்றவாளி
27. அபாண்டம்- பழி


ஐ.தேன்மொழி





1-Blue 2-Gray 3-Brown 4-light pink

**மேலே உள்ள இலக்கங்களுக்கு ஏற்ற வர்ணத்தை தீட்டி அழகுபடுத்துங்கள் குட்டீஸ்!**










# வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532



## ரணிலின் உறுதி மொழிகள் நடைமுறைப்படுத்தப்படுமா?

## எமது கோரிக்கைகள் எவ்வளவு போரா டினாலும் கிடைக்கமாட்டாதா?

## நல்லாட்சி இயங்கும் என்று மைத்திரி சொல்கிறாரே?

**கேதீஸ் — தெல்லிப்பழை**

**நல்லாட்சி இயங்கும் என்று மைத்திரி சொல்கிறாரே?**

முதல் நாள் இரவு மகிந்தவுடன் அப்பம் சாப்பிட்டு விட்டு அடுத்த நாள் உம்மை எதிர்த்து நிற்கும் சுப்பர் ஹீரோ நான்தான் என துணிந்து சொல்லி அதில் வெற்றியும் கண்டார் மைத்திரி.

வழமையான சிங்கள ஆட்சியாளர் தான் மைத்திரியும். தமிழராகிய எமக்கு எதுவும் கிடைக்காது என்று அப்பவே சிந்தித்திருக் கலாம்.

நல்லாட்சி என்ற அடைமொழியைக் கண்ட தமிழன் மீண்டும் ஏமாந்தது தான் மிச்சம். நல்லாட்சி தொடரும். ஆனால் தமிழரின் உரிமைக்கான போராட்டம் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

**காயு — கரணவாய்**

**பிடித்த உறவை விட்டுக்கொடுப்பது சரியா?**

அது சந்தர்ப்பம் சூழ்நிலையைப் பொறுத்தது. உயிரான உறவு கிடைப்பது சாதாரண விடயம் அல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அதன் புனிதத்தை உணர்ந்தால் மட்டுமே புரியும்.

எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் எத்துணை பிரச்சினைகள் வந்தாலும் தன் துணைக்கு நன்மை நடக்கவேண்டும் என்பதற்காக தன் சந்தோசங்களைப் புதைத்துச் சிரிக்கும் உறவுகள் கிடைப்பதற்கு கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

**தனம் — விசுவமடு**

**ஒரு பெண் அடிக்கடி திரும்பிப் பார்த்தால் என்ன அர்த்தம்?**

அடிக்கடி திரும்பிப் பார்த்தால் காதல் என்று மட்டும் அர்த்தமல்ல. நீ கள்வனாக இருப்பாயோ என்ற பயமும் இருக்கலாம்.

**அகில் — சண்டிலிப்பாய்**

**கனவு வருகிறது என்ன செய்யலாம்?**

நிறைவேறாத விடயங்களை எல்லாம் நிறைவேற்றிச் சாதிக்கும் உலகம்தான் இந்தக் கனவுலகம். ஆதலால் அது நல்லது. ஆனால் கனவைக் கனவு என்ற நிலையில் நின்று உணர்ந்து கொண்டால் சரி.

**அகில் — சண்டிலிப்பாய்**

**தத்துவம் ஒன்று சொல்லுங்கள்?**

பேய்க்கு கால் இல்லை என்றாலும் நம்புகிறோம். பேய் வரும் போது கொலுசுச் சத்தம் கேட்கும் என்றாலும் நம்புகிறோம். என்ன உலகமடா இது.

**சயன் — யாழ்ப்பாணம்**

**யாரையாவது அடிக்க வேண்டும் போல இருக்கிறதே?**

பொறுடா தம்பி! உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிந்து விட்டது இனி ஒன்றும் செய்ய முடியாது. கொஞ்சம் பொறு! அடுத்தது மாகாண சபையில் உன் ஆசை தீர அடிப்பதற்கு ஆள் கிடைக்கும்.

**கயன் — யாழ்ப்பாணம்**

**ஒருதலைக் காதல். சொல்லப் பயமாக இருக்கிறது?**

நீ பயந்து சொல்லாமல் இருக்கும் வரை தான் அதற்குப் பெயர் ஒருதலைக் காதல். சொல்லிப்பார் ஒன்றில் ஊத்திக்கும் இல்லை என்றால் பிக்கப் ஆகிடும்.




**ஜீபா — கரவெட்டி**

**ரணிலின் உறுதிமொழிகள் நடைமுறைப் படுத்தப்படுமா?**

காலம் காலமாக தமிழன் ஆட்சியாளர்களால் ஏமாற்றப்பட்டுக் கொண்டே இருக்கிறான். இப்போது ரணில் கூறியதும் அதற்கு விதி விலக்கல்ல என்கிறது எம் சிற்றறிவு.

ஆனால் எத்தனையோ வாக்குறுதிகளை கேட்டுச் சொல்லி விட்டு ஏமாந்த கூட்டமைப்பு இப்போது இந்த வாக்குறுதியையும் முழுமையாக நம்புகிறது.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் பிசுபிசுத்து விட்டது. ரணிலின் தலை தப்பித்து விட்டது. இனி வடிவேலுவின் பாணியில் தான் கதை போகும்.

**சுதன் — குப்பிளான்**

**இனியாவது கூட்டமைப்பு விசுவாசமாய் இருக்குமா?**

ஈ.பி.டி.பியுடன் இணைந்து ஆட்சியமைத்து விட்டு ஈ.பி.டி.பியுடன் இணையவில்லை, உடன்பாடும் இல்லை என முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கப் பார்க்கும் இவர்களா மக்களுக்காக விசுவாசமாக நடப்பார்கள். சும்மா போம் சுதன் கடுப்பேத்தாமல்.

**நந்தகுமார் — மானிப்பாய்**

**எமது கோரிக்கைகள் எவ்வளவு போராடினாலும் கிடைக்கமாட்டாதா?**

தமிழனின் உரிமைக்காகப் போராடிய ஒரு விடுதலை இயக்கம் 2009இல் அழிக்கப்பட்டதன் பின்பு ஆட்சியாளர்களுக்கு தமிழரின் பிரச்சினைகளைத் தீர்க்கும் அக்கறை கொஞ்சமேனும் இல்லை என்று தான் சொல்ல வேண்டும்.

இனித்தான் தமிழருக்காப் பேச ஆள் இல்லையே. இதைச் சொல்லும் போது ஏன் கூட்டமைப்பு இல்லையா? என நீங்கள் கேட்பது புரிகிறது. தமிழரின் உரிமையைப் பெற்றுத் தருவது மாதிரியா கூட்டமைப்பின் தலைமை நடந்து கொள்கிறது. கொஞ்சம் சிந்தித்துப் பாருங்களேன்.

**கவி — மானிப்பாய்**

**சிரிப்புக் கதை ஒன்று சொல்லுங்கள் வியாசரே?**

பஸ்களில் பயணிக்கும் போது நமக்குக் கால் வைக்கக்கூட இடம் கிடைக்காது. அவ்வளவு நெருக்கமாக நெருங்கி நிற்போம்.

ஆனால் கண்டக்டருக்கு மட்டும் உள்ளே ஏக்கர் கணக்கில் இடம் இருப்பது போலத் தெரியும்.

**பின்னால் போங்கோ பின்னுக்கு இடம் இருக்கு.**

**இரத்தினம் — கண்டாவளை**

**சமீபத்தில் உங்களை சிந்திக்க வைத்த கதை?**

கதை சொல்ல சொல்லி கேட்ட பேர்த்திக்கு கதை சொல்ல ஆரம்பித்தார் தாத்தா.
"... குளத்தில் நீரருந்தச் சென்ற யானையின் தந்தத்தை கௌவிப் பிடித்தது கொடிய முதலை ஒன்று. உடனே யானை ஆதி மூலமே என கத்தியது.

பகவான் முன் தோன்றி தன் கையில் இருந்த சக்கரத்தால் முதலையை வதம் செய்து யானையைக் காப்பாற்றினார்" என தாத்தா சொல்லி முடிக்க பேர்த்தி கேட்டாள். "அது சரி தாத்தா அந்த முதலை என்ன தப்புப் பண்ணியது என..."

**உங்கள் கேள்விகளை 021 567 1532 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**




## அகலிகை

முனிவனின் முகம்
கோபாக்கினியால் அனல் விட்டெரிந்தது
சாபக்கிடங்கில் தள்ளிவிட
கமண்டலம்
கைக்கொண்டான் முனிவன்...

அபலை
அகலிகை
மன்னவன் முன் மண்டியிட்டாள்

மனையாளை காக்கத் தவறிய
முற்றும் துறந்த முனிவன்
கபடதாரி கவர்வான் என்பதை
எவ்விதம் தெரியாது போனான்

கணப்பொழுதில்
கல்லானாள் அகலிகை

அவள்
கல்லேயானாள்

இப்போது
ஏற்றுங்கள் கூண்டில்

முனிவனையா?
கற்பைக் கவர்ந்த கள்வனையா?
கல்லுக்கும் உயிர் கொடுத்து
முன் காக்க மறந்த
தெய்வத்தையா?

ஆடவர் நடத்தும் நாடகம்
அதில்

அபலை
அகலிகை
கல்லேயானாள்

*மா.சிவா, கரவெட்டி மேற்கு*

## போவது சுடுகாடு

நல்லவற்றை எந்நாளும் "நாடு"
தீயவற்றை எப்போதும் "சாடு"
தாண்டாதே நீதி எனும் " கோடு"
தாண்டினால் உனக்கு வரும் "கேடு"

புல்லைத்தின்னும் பால் தரும் "மாடு"
புதிது புதிதாய்க் கவிதை "பாடு"
காதில் பெண்கள் அணிவது "தோடு"
கையில் உள்ளதைக் கீழே "போடு"

இலங்கை அழகியதோர் "நாடு"
இப்போது தமிழர்க்கது " கேடு"
நோய் தீர்க்கும் உள்ளிப் "பூடு"
நுண்ணறிவில்லாதவன் "மோடு"

வங்கியில் அடகு வைத்தால் "ஈடு"
வயலில் வைப்போம் நெல்லுச் "சூடு"
பெட்டைக் கோழியென்றால் " பேடு"
போட்டியில் வெல்ல வேண்டின் " ஓடு"

பள்ளத்துக்கு அடுத்துவரும் "மேடு"
பறவை கட்டி வாழும் " கூடு"
கட்டிவாழ்வோம் அழகிய "வீடு"
கடைசியில் போவது " சுடுகாடு"

*ச.கந்தபேரின்பம்*
*கொக்குவில்*

## மனிதனை மனிதனே அழிக்கும் கொடூரம்

பரிணாமம் என்பது
படைப்புக்களின் சூக்குமம்!
அணுவுக்குள் அவன் வைத்த விதி!
அண்டங்கள் பலவாக
உருவான போதும் கூட
பஞ்சபூதங்களால் இயங்கும்
இயற்கை காற்றும் நீரும்
இன்றியமையாத உலகுகள்!
உணவுச் சங்கிலியென்பது
உயிர்களின் தோற்றமும் இயக்கமும்!
ஆண் பெண் என்பது கூடப்
பரிணாமம், மனிதரில் இறைவன்
உயர்வாய் வைத்த இயங்கியல்!
பல்வேறு தொழில்முறைகள்
தேவைகளை இலகுவாக்கும்
இயங்கியலே!
மாற்றம் என்பது படைப்பில்
இல்லாமல் இல்லை, மரபணுவைக் கூட
மாற்றியமைக்கும் மனிதன்!
வேற்றுமை பாராட்டி மனிதனை
மனிதனே அழிக்கும் கொடூரம்
இயங்கியலா? இல்லை
இயக்கங்களை முடிவுக்குக்
கொண்டுவரும் முயற்சியா?

*இராம.ஜெயபாலன்*

## சிந்தனை

என்னா வெயிலு என்று
ஓர் அன்பர் சலித்துக் கொண்டார்
இந்த வெயிலுக்கு
இளநீர் அடித்தால்தான்
இதமா இருக்குமெண்டு
இறங்கினார் விலைகேட்டு
தலை சுற்றிப் போய் நின்றார்

என்னையா
இது என்ன 1980 தோ?
தேங்காய் விற்கும் விலை தெரியுமோ?
இருந்தாலும் இருநூறு
கொஞ்சம் அதிகம் தம்பி

ஐயா!
ஆரோக்கியத்திற்கு
அதிக பணம் கொடுத்தா தப்பே?
இளநீரை கையில் எடுத்தபடி கேட்டார்

சரி சரி
ஆடு நனையுதெண்டு
ஓநாய் அழுதகதையா...
மனதில் நினைத்தபடி வெட்டென்றேன்
வெட்டித் தந்தான்
வெயிலுக்கு இதம்தான்

குடித்து முடிய
கோம்பையைக் கொடுத்துவிட்டு
சைக்கிளில் புறப்பட்டேன்

வீட்டுக்கொரு பத்து
தென்னை நட்டால்
விடிவு வருமே என்ற சிந்தனை
என்னில் ஆட்கொண்டது

*மாவை. நா.கஜேந்திரன்*



# மௌனத்தின் தேடல்- 394



## முதலீடு

சீருடையில் உண்டியல்
ஏந்தினாலும் அது பிச்சைதான்
சோம்பலின்றி உழைத்து
சொந்தப் பணத்தைச் சேமி
பிச்சையெடுத்துச் சுற்றாலும்
இச்சையின்றித் திரும்பிச்செல்
எதிர்கால முதலீடென்றால்
அது கல்வியென்றே!

மாவையூர் கவி

## சிறுதுளி பெருவெள்ளம்

வீணே செய்யும்
செலவை நிறுத்தி
விரயமாகும்
பணத்தைச் சேமித்து
சிறுவர் நீங்கள்
சேமிப்பை உணர்ந்தால்
சிறுதுளி பெரு வெள்ளம்
வாழ்வு சிறந்திட வழியுண்டு
பணம் இன்று
பலர் கையில்
இருந்தபோதும்
பயன் இன்றியே ஆனது
கருணை உள்ளோர்
கையில் இருந்தால்
பிறர் தேவைக்கு உதவும்
நற்செயல் மலரும்

சி.திவ்வியா
யா/ ப.மெ.ம.வி.

## நட்பின் ஆழம்

வெள்ளை உடையுடன்
கள்ளமில்லாச் சிரிப்புடன்
கையிலே நிறைகுடம்
கலகலத்த முகத்தோடு
கரத்தினால் தோழனை அணைத்து
இன்புறும் சிறார்களின்
நட்பின் ஆழத்தை
நம்மவர் புரிந்து கொள்வாரா?

பீ.மேரி சிந்துஜா
மிருசுவில்

## பலன் கிடைக்குமா?

பெற்ற தாயையும் இழந்து
பாலகன் பாலகி இருவரும்
பாசமிகு தந்தையாகுதல்
ஆயுட் தண்டனை சிறையிருந்து
மீட்டெடுத்திடவாய்
வேண்டிடும் நேர்த்தி இது

தங்கத்தமிழன்
காரைநகர்

## பணத்துணையும் வேண்டும்

நல்லதோர் நெறி நின்று
நட்பதைச் சேர்த்தோம்
பள்ளியில் சிறந்தொழுகி
பண்பதைச் சேர்த்தோம்
பல்துறைக் களம் கண்டு
பேரறிவு சேர்த்தோம்
அனைத்தையும் சேர்த்தும்
பணத்தையும் சேர்த்தோம்
பணமே ஆசைக்கு
மூதைனம் என்பதால்

பா.அப்புஜன்
நெடுந்தீவு

## புன்னகை ஒளிவிடும்

அன்புத் தம்பியே தங்கையே!
உண்டியல் ஏந்திப் படிப்பா?
ஒவ்வொரு பெரும் கரங்கள்
இட்டுச் செல்லும்
சிறுதுளிப் பணம்
பெருந்தொகையாக
திரளும் போது
உங்கள் செயற்பாடுகள்
உமது புன்னகையோடு
ஒளிவிட்டுப் பிரகாசிக்கும்
முயற்சி திருவினையாகட்டும்
வாழ்க உம் சேவை

அபி குலமாலிகா
சங்கானை

## சேமிப்பு

உண்டியல் காட்டி
உளம் மகிழும் சிறுவர்
எதிர்காலக் கல்விச்
செலவுக்கான முயற்சியை
வாழ்த்துவோம்
சிறுதுளி பெருவெள்ளம் போல்
கொஞ்சமாய்ச் சேர்த்த காசு
பெருந்தொகையாக மாறி
கல்வி வளர்ச்சிக்குத்
துணையாக நிற்கும்
சோர்வடையாது சேமியுங்கள்


துரை
தென்மட்டுவில்

## கருணையின் கடமை

இயற்கையில் மனிதன்
கருணையின் அம்சம்!
இயல்பாகவே கருணையுடன் கடமை!
புண்ணிய செயலுக்கு கன்னியமாகவே
உண்டியல் ஏந்திய சிறுவர்கள்!
எண்ணிய கருமம் ஏழைகளினதும்
அநாதைகளினதும் துயர் துடைக்கவே!
பணம் படைத்தவர்களே! ஒரு கணம்
சிந்தித்து துன்பத்திலுள்ளோரின் துன்பம்
உம் துன்பமாகவே உணர்ந்து
உண்மையான கருணை
உம் உள்ளத்தில் ஊற்றெடுப்பதாக!

சி.சுகிர்தமலர்
உரும்பிராய்

# மௌனத்தின் தேடல் -395



**அன்பு வாசகர்களே !**

*உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகள் மற்றும் வியாசர் பதிலுக்கான கேள்விகளை*

*ஆசிரியர்*
*'மௌனத்தின் தேடல்'*
*சங்குநாதம்*
*இல3,2ம் ஒழுங்கை,*
*பிறவுண்வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*எனும் முகவரிக்கு 04.04.2018 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.*

*குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.*

*-ஆசிரியர் -*

கலா, பொன்னாலை

சிறுகதை

கமலம் ரீச்சர்... கமலம் ரீச்சர்... வாங்கோ. தங்கமக்கா வாங்கோ. விபூதி சந்தனத்தோட வாறியள். ஓம் ரீச்சர் நான் வெள்ளன குளித்து வேலைகளை முடித்துவிட்டு உங்களிடம் வரத்தான் வெளிக்கிட்டு வந்தேன். வழியில் எங்கள் பிள்ளையார் கோயிலில் சுந்தரத்தாரின் மகளின் பூசை அபிஷேகமாம். முடிந்து ஐயா விபூதி பிரசாதம் கொடுத்தார். நானும் போய்க்கும்பிட்டு விபூதி சந்தனம் வாங்கி வந்தேன். இந்தாருங்கோ ரீச்சர். ஓம் அக்கா நானும் விடியக் குளித்து விட்டன். தாருங்கோ என்று வாங்கி விபூதி சந்தனம் பூசிக்கொண்டு இருங்கோ, அக்கா வாறன் தேத்தண்ணி ஆற்றிக் கொண்டு. இல்லை ரீச்சர் இப்பதான் சாப்பிட்டுத் தேத்தண்ணி யும் குடித்துவிட்டு வந்தனான். உங்களின் வேலைகள் முடிந்து விட்டதோ? உங்களை மினக்கெடுத்தாமல் நான் நினைத்த விசயத்தைச் சொல்லுவம் என்று வந்தனான்.

# இப்படியும் நடக்கிறது

நானக்கா பள்ளிக்கூடம் படிப்பிக்கப் போகிற காலத்திலிருந்து விடிய இரண்டு சாப்பாடும் வைத்துப் பழகி இப்பவும் பத்து மணிக்கெல்லாம் மதியச் சாப்பாடும் சமைத்து முடித்துவிடுவன். பிள்ளைகள் பேரமார் அவரவர் போய் விடுவார்கள். நான் மரஞ்செடிகளுக்கு தண்ணீர் விடுவன்; வீடு வாசல் கூட்டித் துடைப்பன். பிரச்சினை யில்லை அக்கா. ஆறுதலாகத்தான் இருக்கி றேன். என்ன விசயம் சொல்லுங்கோ.

ரீச்சர் நீங்கள் படிப்பிக்கிற காலத்திலி ருந்து சுறுசுறுப்பாக இருப்பீர்கள். அத்தோடு எல்லோரிடமும் அன்பாக, ஆதரவாகப் பழகியதால் எல்லோரும் உங்களின் பேச்சுக்கு மறு பேச்சுப் பேசாமல் ஆலோச னைகள் கேட்டு நடப்பார்கள். ஓய்வு பெற்று எழுபத்திரண்டு வயதாகியும் உங்களின் சுறுசுறுப்பு, அமைதிப் பேச்சுக் குறையவில்லை. அதனால் எங்களின் வயதுக்காரர் ஏதும் பிரச்சினை என்றால் கமலம் ரீச்சருடன் கதைப்பம் என்று சொல்லுவார். அதுதான் நானும் பிரச்சினை இல்லை கேட்ட விசயம் பற்றிக் கதைப்பம் என்று வந்தனான். என்னக்கா என்ன பார்க்க வயது கூடினனீங்கள், படித்தனீங்கள், வேலை பார்க்காவிட்டாலும் உங்களுக்கு அனுபவங்கள் நிறைய. நான் படித்தவற்றை, வாசித்தவற்றை வைத்து எனக்குச் சரியென்று படுவதைச் சொல்வேன். சரியக்கா என்ன நினைத்துக் கொண்டு வந்தனீங்கள் சொல்லுங்கோ.

அது ரீச்சர் போன ஞாயிறு கோவிலுக்குப் போனபோது ஆறுமுகத்தாரின் மனுசி அன்னமக்காவும் வந்து கும்பிட்டா. மனுசி அழுதழுது கண்ணீர் விட்டுக் கும்பிட்டா. பூசை முடிந்து வரும் போது அவவுடன் கதைத்தேன். அவ மகனுக்கு கல்யாண மாகி நாலு வருடங்களாகி விட்டதாம். குழந்தைப் பாக்கியம் இல்லை. அதுதான் இறைவனிடம் வேண்டிப் பிரார்த்தனை செய்து நேர்த்தியும் வைத்துவிட்டு வருகி றேன் என்று சொன்னா. நானும் கடவுள் கொடுப்பார், கவலைப்படாதையுங்கோ என்று சொல்லிவிட்டு வந்தேன்.



ஆறுமுகத்தாரின் மருமகளின் தமக்கை என்னுடைய மகளோடு வேலை செய்கிறா. மகளும் அவவும் கதைத்துக் கொண்டிருக்கும் போது மகள் கேட்டாவாம். தங்கச்சிக்குப் பிள்ளைகள் இருக்கிறார்களா? என்று. அதற்கு அவ சொன்ன கதையைக் கேட்டு மகள் என்னிடம் வந்து சொன்னா. அப்பதான் நான் நினைத்தேன் உலகத்தில இப்படியும் நடக்கிறது என்றும். ஏன், என்னவாம் என்றார் ரீச்சர்.

முகத்தாரின் மகனும் பொம்பிளையும் கலியாணம் முடிந்த அடுத்த கிழமையே வெளிநாட்டுக்குப் போய்விட்டார்கள். அவன் டொக்டர். அவனுக்கு வேலை வேண்டாமென முதலே சொல்லி விட்டானாம். அதனால பெட்டை வேலைபார்க்கவில்லையாம். இவர்கள் போன நாட்டில் வேலையும் கூடவாம். செலவும் கூடவாம். அதனால வசதியான வீடும் வாங்கி காசும் கொஞ்சம் சேர்த்தபிறகு பிள்ளையைப் பெறுவம் என்றும் அவனும் தானும் மேலே படிக்க வேணுமாம் என்றும் கட்டுப்பாடா இருக்குதுகளாம் என்று தமக்கை சொன்னாவாம். இங்கு தாய் மனுசி கோயிலில நேர்த்தி வைக்கிறா. அதுதான் நான் இப்படியும் நடக்கிறதோ என்று நினைத்தேன்.

"பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த
மக்கட் பேறல்ல பிற"

என திருவள்ளுவர் மக்கட்பேறு பற்றி ஒரு அதிகாரத்தில சொல்லியிருக்கிறார்.

வெளிநாடென்றால் பணம் பணம் என்ற பேச்சுத்தான். அங்குள்ளவர்கள் அங்கிருந்து அனுப்ப இங்குள்ள சிலர் வீடு வாசல் கட்டி ஆடம்பரமாக இருக்கிறார்கள். அங்கிருக்கிறதுகள் என்ன பாடுபட்டு வேலை செய்யுதுகள். எப்படி வாழ்கிறார்கள் என்று இங்குள்ளவர்கள் நினைப் பார்களோ. இப்படிக் கதைகளைக் கேட்க எனக்கென்னவோ பாவங்கள் புத்திபோதரவு சொல்லுவார் இல்லையோ என்று நினைத்துப்போட்டு உங்களிடம் வரவேணும். கதைக்கவேணும் என்று வந்தனான். முகத்தாரின்ர மகன் மட்டுமல்ல அழகற்ற மகளும் கலியாணம் செய்து போய் 3 வருடமாகிறது. தாய் மனுசியை மகளுக்குக் குழந்தை இருக்கா என்று கேட்டேன். மனுசி சிரித்துக்கொண்டு அவ பிள்ளை பெற்றால் பார்க்க ஆள்வேணும். பிள்ளையை விட்டிட்டு வேலைக்குப் போகேலாது. நீங்கள் எங்களோடு வந்திருக்கிறீர்களா அம்மா என்று கேட்கிறாளாம். நான் மற்றப் பிள்ளைக்கு கலியாணம் செய்து வைத்தால்தானே போகலாம் என்று சொன்னா. இதையெல்லாம் கேட்க...

பேப்பரில செய்தியை வாசித்தால் இன விகிதாசாரப்படி மற்ற இனத்தவரிலும் பார்க்க தமிழினத்தின் தொகை மிகக் குறைந்து கொண்டு போகிறது என்று இருக்கிறது. எங்கள் நாட்டில் யுத்தம், சுனாமி, விபத்து என்று அழிவுப் பொருளாதாரக் கஷ்டமும் என்று எங்களின் பிள்ளைகளும் ஒரு பிள்ளை, இரண்டு பிள்ளைகளோடு பெறுவதை நிறுத்துகிறார்கள். வெளிநாட்டில உள்ளவர்களாவது இரண்டு, மூன்றைப் பெற்று தமிழினத்தைப் பெருக்குங்கள் என்றால் அங்கு இப்படியும் நடக்கிறது. என்ன ரீச்சர் நீங்களும் நான்கு பிள்ளைகளைப் பெற்று வளர்த்து வேலையும் பார்த்து ஊரிலேயும் சேவையால் நல்ல ரீச்சர் என்றும் இருக்கிறீர்கள். எங்கட இப்ப உள்ள பிள்ளைகளுக்கு இல்வாழ்க்கை, வாழ்க்கையின் பெறுமதி பற்றிக்கூறுவது யார்? தங்கமக்கா நாங்கள் வாழ்ந்த காலம் போல இப்ப இல்லையக்கா. உலகத்திலே எல்லாவற்றிலும் மாற்றம் ஏற்பட்டுக் கொண்டு வருகிறது. அரசியல், கல்வி, பொருளாதாரம், போக்குவரத்து எல்லாவற்றிலும் வளர்ச்சியும் மாற்றமும் விஞ்ஞான யுகம். அதற்கேற்றவாறு மக்களும் தங்களை மாற்றிக் கொள்கிறார்கள். மாறினால்தான் சிறப்பாக வாழமுடியும் என நினைக்கிறார்கள். மாற்றத்தின் எதிரொலிதான் அங்கும் இங்கும் நடப்பவை எல்லாம்.

குழந்தைச் செல்வம் என்பது கடவுளின் கொடை. நாட்டின் செல்வம் என அறிஞர் திரு.வி.க. கூறியிருக்கிறார். "மடி மடி என்று வையகத்தார் ஏசாமல் தாயென்ற பெருமை தனை மனங்குளிரத் தந்தவனே" என்ற சினிமாப்பாடலும் இசைப் பேரறிஞரின் " பத்தினிபோலவே இத்தரை மீதினில் உற்றவர் யார் மனமே... தோல் சூல் பிரசவம் தன்னில் நொந்தாளே துன்பத்தைத்தான் கொண்டு சுகத்தைத் தந்தாளே" என்ற பாடல் வரிகளும் குழந்தைப் பேறின் தாய்மையின் பெருமையைக் காட்டுகின்றன. இவை போன்றவற்றைக் கேட்க ரசித்து விளங்க இப்ப பிள்ளைக ளுக்கு நேரமுமில்லை, அக்கறையும் இல்லை.

விஞ்ஞான வளர்ச்சியால் மருத்துவத்துறையில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டு விட்டன. அதன் காரணமாக இன்றைய இளையோரின் எண்ணத்தில் தாம் நினைத்தபடி விரும்பிய நேரம் பிள்ளையைப் பெற்றுக்கொள்ளலாம். வயது போனாலும் பெறலாம் என்ற தோற்றப்பாடுகள் எழுந்துவிட்டன போலும். அவை எந்தளவுக்குச் சாதகமாக அமையுமோ எமக்குத் தெரியாது. நாங்கள் இயற்கையைப் போற்றி இறை நம்பிக்கையோடு பெரியவர்களின் ஆலோசனைகளுக்கு மதிப்பளித்து நடந்து பழகிவிட்டோம். அதனால் அக்கா உங்களுக்கு இந்தச் செய்தியெல்லாம் அதிசயமா இருக்கு. உலகம் போகிற போக்கில் பிள்ளைகளும் நடக்கத் தலைப்படு கிறார்கள். ஆனாலும் நீங்கள் சொன்னமாதிரி, சில விடயங்களின் தாற்பரியத்தை பிள்ளைகளுக்கு இதமாக எடுத்துக்கூறத்தான் வேண்டும்.

வாழ்வின் சிறப்பில் மக்கட்பேறு பிரதானமானது என்பதை எங்களுக்கு நன்கு வேண்டியவர்கள் என்பதால் நானும் அப்பிள்ளைகளின் பெற்றோருடன் கதைக்கத்தான் வேண்டும். அப்பாடா ரீச்சர் இப்பதான் என் மனம் ஆறுதலாகிறது. இப்படியும் நடக்கிறது என்பதை எல்லோரும் அறிய வேண்டும். நல்லது ரீச்சர் போயிட்டு வாறன்.



புகைப்படம் என்பதே வாழ்வின் அழகிய தருணங்களைப் பதிவு செய்வதுதான். அப்படிப்பட்ட அழகியதருணங்களை ஆபத்து நிறைந்ததாக மாற்றியது செல்ஃபி என்ற விடயம். மொபைலில் புறொன்ட் கமீரா என்பது கவனிக்கப்படாத காலங்களில் செல்ஃபி என்ற வார்த்தையே மக்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. ஆனால், எப்பொழுது ஸ்மார்ட்போன்கள் பிரபலமாகத் தொடங்கியதோ அப்பொழுதிலிருந்து செல்ஃபி மோகம் மக்களிடையே படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியது. குறிப்பாக இளைஞர்கள் அதிகமாக செல்ஃபி என்ற விடயத்திற்கு அடிமையானார்கள். காலையில் எழுவதிலிருந்து இரவு தூங்கச் செல்லும் வரைக்கும் செல்ஃபியாக எடுத்து ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம் என சமூக வலைத்தளங்கள் பலவற்றில் அப்லோடு செய்வதை கடமையாகவே கடைப்பிடித்து வருகிறார்கள் .

### தொடர்ந்து அதிகரித்த விபத்துகள்





செல்ஃபி எடுப்பவர்கள் சாதாரணமாக எடுத்துக்கொண்டிருந்த வரைக்கும் யாருக்கும் எந்த விதத்திலும் பிரச்சினை ஏற்படவில்லை. ஆனால், அதன் மீதான பார்வை பொழுதுபோக்கு மனநிலையிலிருந்து மாறி சாகசமான விடயமாகப் பார்க்கத் தொடங்கிய போதுதான் ஆரம்பித்தது பிரச்சினை. ஆபத்தான இடங்களிலிருந்து செல்ஃபி எடுப்பது என்பதை சமூக வலைத்தளங்களில் சாகசமாகப் பார்க்கப்பட்டது. ஆபத்தான இடங்களிலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்களுக்கு குவியும் லைக்குகளால் ஈர்க்கப்பட்ட பலர் அப்படிப்பட்ட செல்ஃபி எடுக்க விரும்பினார்கள். மிகவும் உயரமான இடங்கள், ஆபத்தான விலங்குகளின் அருகே, ஓடும் ரயிலின் அருகே என மக்கள் செல்ஃபி எடுக்க விரும்பும் ஆபத்தான இடங்களின் பட்டியல் சற்றே நீளம்தான். செல்ஃபி எடுக்கும்போது ஏற்படும் உயிரிழப்புகளைப் பொறுத்தவரையில் உயரமான

# எங்கும் செல்:பி எதிலும் செல்:பி

இடத்திலிருந்து விழுந்தவர்கள்தாம் அதிகம். அதற்குப் பிறகு நீரில் மூழ்குதல், ரயிலில் அடிபடுதல் ஆபத்தான விலங்குகளுக்கு அருகே எனப் பல விதங்களில் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன.

தொடக்கத்தில் இது போன்று செல்ஃபி எடுக்கும் போது நிகழ்ந்த விபத்துகளைப் பற்றி செய்திகள் வெளியாகும்போது அந்த விடயத்தை யாரும் கவனத்தில் கொள்ளவில்லை. ஆனால், தொடர்ச்சியாக உயிரிழப்புகள் ஏற்படத்தொடங்கிய போதுதான் உலகம் விழித்துக்கொண்டது. இதற்குப் பின்னால் இருக்கும் ஆபத்தை உணரத்தொடங்கியது. பல நாடுகளில் செல்ஃபியால் ஏற்படும் உயிரிழப்புகளைத் தடுக்கும் பொருட்டு ஆபத்தான இடங்களில் எச்சரிக்கை பலகைகள் வைக்கப்பட்டன. சில இடங்களில் செல்ஃபி எடுப்பதற்குத் தடை விதிக்கப்பட்டன. சில மாதங்களுக்கு முன்னால் இந்தியாவில் இளைஞர் ஒருவர் தண்டவாளத்தின் அருகிலிருந்து செல்ஃபி எடுக்கும் போது அவர் மீது ரயில் மோதுவதைப் போல எடுக்கப்பட்ட வீடியோ ஒன்று இணையத்தில் வைரலாகப் பரவியது. இங்கே நமது ஊரில் கூட பல சம்பவங்கள் நிகழ்ந்தவாறுதான் இருக்கின் றன. உலக நாடுகளுடன் ஒப்பிடும் போது செல்ஃபியால் ஏற்படும் உயிரிழப்புகள் அதிகமாக நிகழ்வதில் முதலிடம் இந்தியாவுக்குத் தான். பல வருடங்களாகவே இந்த விடயத்தில் இந்தியா முதலிடத்தில் இருக்கிறது.

எதுவாயினும் லைக் என்கின்ற மோகத்தால் ஈர்க்கப்பட்டு ஆபத்தான இடங்களில் செல்ஃபி எடுத்து அதில் மாண்டுபோகும் நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். இல்லையேல் உலக அழிவுக்கு இதுவும் ஒரு காரணமாக அமையும்.



# திமிங்கிலத்தின் மூதாதையர் மான்களா?

## ஆச்சர்யமூட்டும் ஓர் ஆராய்ச்சி




இது நடந்து முப்பது வருடங்கள் இருக்கும். தென் னிந்திய புவியியல் ஆராய்ச்சியாளரான ராங்கா ராவ் காஷ்மீரின் பழைமையான பாறைகளை ஆராய்ந்து கொண்டிருந்தபோது அவருக்கு ஒரு விலங்கின் உடல் படிமம் கிடைத்தது. அந்தப் பாறையில் இருந்து சில பற்களையும் மண்டையோட்டுப் பகுதியையும் சில எலும்புகளையும் மட்டுமே அவரால் பிரித்து எடுக்க முடிந்தது. அதை அவர் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்க, அது முடிவடையும் முன்னரே சில ஆண்டுகளுக்கு முன் இறந்துவிட்டார். அவரது மனைவியின் மூலம் அந்தக் கூறுகளைப் பெற்றுக் கொண்ட பேராசிரியர் தெவிசன் அவரது ஆராய்ச்சியைத் தொடர்ந்தார்.

செயற்பாடுகள் அனைத்திற்குமான அடையாளங்களையும் ஆதாரங்களை யும் விட்டுச்செல்வது இயற்கைக்கு வாடிக்கை. அப்படிக் கிடைத்த படிமங்கள் மூலம் நாம் அறிந்த அதிசயங்கள் எண்ணிலட ங்காது. ஆயினும் மென்மேலும் அவள் தனது சாதனைகளைப் பறைசாற்றிக் கொண்டே இருக்கிறாள். அந்தப் பறைசாற்ற லின் ஒரு பகுதி தான் இந்த மானின் படிமம்.

டார்வினின் ஆராய்ச்சிகளின் படி விலங்குகளின் பரிணாம வளர்ச்சி பற்றிய அறிவை நாம் எய்தி இருந்ததால், நீர்வாழ் பாலூட்டிகள் முதலில் நிலத்தில் தான் வாழ்ந்திருந்தன என்பதை நாம் ஓரளவு புரிந்துகொண்டோம். ஆனால் கடலில் வேட்டையாடியாக இருக்கும் அவை நிலத்தில் வேட்டையாடிகளாகத் தான் வாழ்ந் தன என்று நினைத்துவிட்டோம். அத னால்,

நான்கு கால்க ளோடு மான் போன்ற முக அமைப்பு கொண்டது. சில கோடி ஆண்டுகளுக்கு முன் அது நிலத்தில் அதுவும் தாவரங்களை உண்ணும் ஹெர்பிவோராகத் (Herbivore) தான் வாழ்ந்து கொண்டிருந்தது. வேட்டை க்குப் பயந்து சில சமயங்களில் வேட்டையாடியை ஏமாற்று வதற்காக நீருக்குள் சென்றுவிடும். காலப்போக்கில் அதன் உடலமைப்பு நீர் நிலம் இரண்டிலும் வாழ்வதற்கு ஏற்ற வாறு மாறியது. அதன் தலை எலும்பில் காதுப் பகுதியின் உட்புற எலும்பு, இதற்கு முன் கிடைத்த நீர்வாழ் பாலூட்டி மூதாதைகளின் படிமங்களில் இருந்த அமைப்போடு ஒத்துப் போகவே அவருக்கு ஒரு பொறி தட்டியது. ஏன் இது திமிங்கிலம், டொல்பின் போன்ற விலங்குகளுக்கு முந்தையதாக இருந்திருக்கக்கூடாது என்ற கோணத்தில் தனது ஆராய்ச் சியைத் தொடர்ந்தார். அதன் உடல் எலும்புப் பாகங்களில் சில மிகக் கடினமாகவும் சில மிக மென்மையாகவும் இருப்பதற்கான காரணத்தை அப்போது தான் அவர் புரிந்துகொண்டார். நீர்வாழ் பாலூட்டிகளுக்கு உட்புற எலும்புகள் மிக உறுதியாக இருக்கும். வெளிப்புற எலும்பு கள் மிக மென்மையாக இருக்கும்.

அது தாவர உண்ணியாக வாழ்ந்தது என்பதை ஆராய்ந்து புரிந்துகொண்ட அவர், வேட்டையாடிகளுக்கு பயந்து நீர்நில வாழ் உயிரினமாக மாறிய பின் அதன் எலும்பில் மாற்றம் நிகழ்ந்திருக்க வேண்டும். ஆபத்துக ளில் இருந்து தப்பிக்க




நிலத்தில் தாவர உண்ணிகளாக வாழ்ந்த இன்றைய நீர்வாழ் பாலூட்டிகள், வேட்டையாடிகளுக்கு பயந்தே அன்று நீருக் குள் சென்றன என்ற கூற்றை நம்பு வதற்குச் சிறிது கடினமாகத் தான் இருக்கும். கடினமாக இருந்தாலும் அது தான் உண்மை.

சருகு மான், எலி மான் என்று அழைக்கப்படும் ஒரு மான் இனம் இன்றளவும் ஆபிரிக்காவில் உண்டு. அது தன்னை வேட்டையாட வரும் விலங்கிடம் இருந்து தப்பிக்க நீருக்குள் புகுந்துவிடும். சுமார் 4 நிமிடங்கள் வரை நீருக்குள் அதனால் சமாளிக்க முடியும். மிகவும் ஆபத்தான சூழலில் அதற்கு மேலும் அதனால் சமாளிக்க முடியும். இதன் ஆதி இனத்தில் இருந்து தான் 4.8 கோடி ஆண்டுகளுக்கு முன்னால் கடல்வாழ் பாலூட்டிகள் பிரிந்து சென்றுள்ளன.

ஆம், ராங்கா ராவ் கண்டெடுத்த படிமங்களை ஆராய்ந்த தெவிசன், அதை எதனோடும் ஒப்பிட முடியாமல் குழம்பியிருந்தார். அவர் ஒப்பிட்ட அனைத்துமே இன்றைய நில வாழ் நான்கு கால் விலங்குகளோடு. தற்செயலாக அவரது உதவியாளர் அந்த மண்டையோட்டை உடைத்திருக்க வில்லை என்றால் இன்றுவரை நான்கு கால்களும் நீந்துவதற்கு ஏற்ற விரல்களற்ற பட்டை யான நீந்தும் துடுப்பு உறுப்பாக மாறியிரு க்கலாம் என்று அவர் கற்பனை கூடச் செய்திருக்க மாட்டார்.

இண்டோஹியஸ் ( Indohiyus) அந்த விலங்கின் பெயர். வளைந்த முதுகுடன்

ஆழத்திற்குச் சென்று ஒழிந்து கொண்ட அவை உணவுக்காக அங்கே இருந்த சிற்றுயிர் களையே சாப்பிடத் தொடங்கி மாமிச உண்ணியாகவும் மாற்றமடைந்தன. இந்தக் கடினமான எலும்புகளோடு நிலத்தில் விரைவாகச் செயற்பட முடியாது. நிலத்தில் அதன் வேகம் குறைந்திருக்கும். அதே சமயம் நீரில் அதன் செயற்பாடு அதிகரித்திருக்கும். இதன் பிறகே முழுமையான நீர்வாழ் இனமாக இண்டோஹியஸ் மாறியிருக்கும்.

காலப்போக்கில் திமிங்கிலங்களின் மூதாதையான பாகிசெடிடேவாக (Pakicetidae) வளர்ச்சி அடைந்திருக்க வேண்டும். அதிலிருந்து ஆம்புளோசெடிடேவாக (Ambulocetidae), தனது கால்கள் முழுமையாக மாற்றமடைந்து நீந்துவதற்கு ஏற்ற துடுப்பு உறுப்புகளோடு, முடிகள் இன்றி வழுவழுப்பான தேகத்தோடு திமிங்கில மாக வளர்ச்சி அடைந்திருக்கிறது.

மனித அறிவால் மான்களுக்கும் திமிங்கிலத்துக்கும் இடையில் ஓர் ஒப்பீட்டினை நேரிலும் பொருத்திப் பார்க்க முடியாது. ஏனென்றால் நமது பார்வை வேறு. இயற்கை யின் பார்வை வேறு. அவள் இவ்வுலகின் ஒவ்வொரு உயிருக்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்தி இருக்கிறாள். அந்தத் தொடர்பு பற்றி தெரிந்துகொள்ளத் தேடுவதைவிட புரிந்து கொள்ள முயலவேண்டும். அதுவே அவளை அரிக்காமல் அழிக்காமல் வாழ வழிவகுக்கும்.

நிலம் தந்த ஆபத்தில் இருந்து பிழைக்க நீருக்குள் சென்றன திமிங்கிலங்கள். ஆனால் மனிதனால் மாசடையும், குப்பைத் தொட்டியாகும் ஆழ்கடலில் வாழமுடியாத அவை இதற்கு மேல் எங்கே செல்வது என்று தெரியாமல் இயற்கை அன்னையிடம் முறையிட்டு, தனக்கொரு வழிகேட்டு மனிதர்கள் முன்னால் கூட்டம் கூட்டமாகக் கரைக்கு வந்து தன் உயிரை மாய்த்துக்கொண்டு தற்கொலைப் புரட்சி புரிகின்றன.

# போரை நிறுத்திய ஒற்றைப் புகைப்படம்

ஜூனியர் விகடன்

ஒரு புகைப்படத்தின் வலிமையை உலகுக்கு உணர்த்தியவர், நிக் உட். இவர் எடுத்த ஒற்றைப் புகைப்படம்தான், வியட்நாம் மீதான அமெரிக்கப் போரின் உக்கிரத்தை உலகுக்கு உணர்த்தியது. மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்திய, 9 வயதுச் சிறுமி கிம் ஃபுக்கின் புகைப்படத்தை எடுத்த நிக் உட், கடந்த வாரம் கேரளா வந்திருந்தார். நிக் உட்டின் வருகையை மிகப்பெரிய திருவிழாவாகக் கொண்டாடியது கேரள அரசு. முதலமைச்சர் பினராயி விஜயன், நிக் உட்டை வரவேற்க, நடிகர்கள் மம்முட்டி, மோகன்லால், எழுத்தாளர் அருந்ததிராய் எனப் பலரும் அவரைச் சந்தித்துப் பேசினார்கள். கேரளாவின் பல பகுதிகளுக்கும் சென்று வந்த நிக் உட்டுடன் ஒரு சந்திப்பு

"வணக்கம். உங்களைப் பற்றி விரிவாகச் சொல்லுங்களேன்..."

"அப்பா விவசாயி. அம்மா இல்லத்தரசி. நாங்கள் பத்துப் பேர். ஒன்பது சகோதரர்கள், ஒரு சகோதரி. மூத்த சகோதரர், அசோசியேட்டட் பிரஸ் (AP) நிறுவனத்தில் புகைப்படக் கலைஞராக வேலைபார்த்துவந்தார். வியட்நாம் போரைப் படம்பிடித்துக்கொண்டிருந்தவர், எதிர்பாராதவிதமாக, போர்க்களத்தில் குண்டு துளைத்து இறந்துபோனார். குடும்பம் தத்தளிக்க ஆரம்பித்தது. குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு எனக்கு வந்தது. 'எங்க அண்ணனோட வேலையை எனக்குக் கொடுங்க' என்று ஏ.பி நிறுவனத்திடம் போய்க் கேட்டேன். அப்போது எனக்கு 16 வயது தான். சிறுவனாக இருந்தேன் என்பதால், எனக்கு வேலை தரவில்லை. நான்கு வருடங்கள் கழித்து 'குடும்பம் மிகவும் கஷ்டப்படுகிறது. நீங்கள் வேலை தந்தால்தான் என் குடும்பம் வாழ முடியும்' என்று மீண்டும் போய்க் கெஞ்சி னேன். வேலை கிடைத்தது. ஏ.பி நிறுவனத்தில் சேருவதற்கு முன்பு ஒரு புகைப்படம்கூட நான் எடுத்ததில்லை. நான் ஒரு 'ஆக்ஸிடென்டல்' போட்டோகிராஃபர்!"

"அந்த வரலாற்றுத் தருணம்..?"

"என் நண்பர் ஒருவர் 'நேபாம்' என்கிற இடத்தில் நான்கைந்து நாட்களாகச் சண்டை நடந்துகொண்டிருப்பதாகச் சொன்னார். போர்க்களத்துக்குப் போனேன். எங்கு பார்த்தாலும் மனித உடல்கள் இறந்து கிடந்தன. ஊரெங்கும் அழுகுரல், மரண ஓலம். மக்கள் என் கண் முன்னால் அநாதைகளைப்போல இறந்து கிடந்ததைப் பார்த்ததும்



அழுகை வர ஆரம்பித்துவிட்டது. அழுதுகொண்டே நடந்து சென்றுகொண்டிருந்தேன். நான்கு நாட்களாகச் சண்டை நடந்துகொண்டிருந்ததால், யாரும் உயிருடன் இருக்க மாட்டார்கள் என நினைத்தேன். ஆனால், திடீரென கிம் ஃபுக் மற்றும் இரண்டு, மூன்று சிறுவர்கள் அழுதவாறே ஓடி வந்துகொண்டிருந்தார்கள். நான் அதிர்ந்துவிட்டேன். கிம் ஃபுக்கின் பாட்டியும் கையில் ஒருவயதுக் குழந்தையுடன் ஓடி வந்துகொண்டிருந்தார். 'ஹெல்ப்... ஹெல்ப்!' என்று கத்தியபடியே, அந்த மூதாட்டி என்னை நோக்கி வந்தார். நான் படமெடுத்தவாறே அவரின் கையில் இருந்த குழந்தையைப் பார்த்தேன். குழந்தை இறந்துபோயிருந்தது. போர்க்களத்தின் வலியை அந்தத் தருணத்தில்தான் உணர்ந்தேன்.

கிம் ஃபுக்கின் உடல் முழுக்க ரத்தம். உடனடியாக துணியால் அவளின் உடலைச் சுற்றி மூடினேன். அவளுடன் ஓடிவந்த சிறுவர்களையும் என் காரிலேயே ஏற்றி மருத்துவமனைக்குக் கொண்டு சென்றேன். மருத்துவர்களோ, 'இங்கே உள்ள மருந்துகளால் இந்தச் சிறுமியைக் காப்பாற்ற முடியாது' என்று எந்தக் குற்றவுணர்ச்சியும் இல்லாமல் பதிலளித்தனர். நானோ, 'இந்தச் சிறுமி செத்துக் கொண்டிருக்கிறாள். ஏதாவது செய்யுங்கள்' என்று கத்தினேன். எனது மீடியா அடையாள அட்டையை எடுத்துக் காட்டி, 'இவள் செத்துப்போனால், நாளை நீங்கள் மிகப்பெரிய பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்' என எச்சரித்தேன். மீடியா என்றதும் பயந்துபோய் கிம் ஃபுக்கை மருத்துவமனையில் அனுமதித்தார்கள். ஒரு வழியாக அவள் உயிர் பிழைத்தாள். அதுமட்டும் நடக்காமல் போயிருந்தால் கெவின் கார்ட்டர்போல நானும் தற்கொலை செய்துகொண்டிருந்திருப்பேன்." (சூடான் பஞ்சத்தின் போது சிறுமியைக் கொத்திச் சாப்பிடக் காத்திருக்கும் கழுகின் புகைப்படத்தை எடுத்தவர் கெவின் கார்ட்டர். 'சிறுமியைக் காப்பாற்றாமல் புகைப்படம் எடுத்தது அறம்தானா?' என்று எழுந்த கேள்விகள் இதயத்தைத் துளைக்க, தற்கொலை செய்துகொண்டார்.)

"அதன்பிறகு ஏற்பட்ட எதிர்வினைகள்..?"

"972-ம் ஆண்டு ஜூன் 8ஆம் திகதி அந்தப் புகைப்படத்தை எடுத்தேன். அடுத்த நாள் உலகம் முழுக்க உள்ள பத்திரிகைகளில் 'நேபாம் கேர்ள்' புகைப்படம் முதல் பக்கத்தில் இடம்பெற்றிருந்தது. வியட்நாம் போரை நிறுத்தக் கோரி உலகெங்கும் மக்கள் போராட்டம் வெடித்தது. லண்டன், பாரீஸ், டோக்கியோ நகரங்கள் போராட்டக் களமானது. வோஷிங்டன் மக்கள், வெள்ளை மாளிகையை முற்றுகையிட்ட னர். என்னையும் கிம் ஃபுக்கையும் உலகுக்கு அடையாளம் காட்டியது இந்தப் புகைப்படம்தான். வியட்நாம் போரை முடிவுக்குக் கொண்டுவர உதவியதும் அந்தப் புகைப்படம்தான்"

"கிம் ஃபுக்கை அதன்பிறகு சந்தித்தீர்களா?"

"பல முறை சந்தித்திருக்கிறேன். அவரும் இப்போது பாட்டியாகிவிட்டார். கனடாவில் வசிக்கும் கிம் ஃபுக், ஐ.நா-வின் அமைதித் தூதராகப் பணியாற்றுகிறார். அடுத்த முறை இந்தியா வரும்போது நிச்சயம் அவரையும் அழைத்து வருவேன்."

"இந்தியச் சுற்றுப்பயணம் எப்படியிருக்கிறது?"

"மக்கள் என்னை அடையாளம் கண்டுகொண்டதே ஒரு வெற்றிதானே! நடிகர் மம்முட்டி தான் சேகரித்த அபூர்வமான சில பொருள்களை எனக்குக் காட்டினார். மோகன்லால் என்னுடன் உணவருந்தினார். கோட்டயத்தில் எழுத்தாளர் அருந்ததிராயைச் சந்தித்தேன். என்னைக் கண்டதும் 'வெல்கம் நிக்' என்றவாறே கட்டியணைத்துக் கொண்டார். வியட்நாமியர்களுக்காகப் புத்தகம் ஒன்றை மொழியாக்கம் செய்துவருவதாகவும், அது தொடர்பாக வியட்நாம் வரப் போவதாகவும் என்னிடம் சொன்னார். பிரபலங்கள் எனக்கு நேரம் ஒதுக்கி என்னைச் சந்தித்தது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது."

ஒரு புகைப்படத்தின் வலிமையை உலகுக்கு உணர்த்தியவர், நிக் உட். இவர் எடுத்த ஒற்றைப் புகைப்படம்தான், வியட்நாம் மீதான அமெரிக்கப் போரின் உக்கிரத்தை உலகுக்கு உணர்த்தியது. மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்திய, 9 வயதுச் சிறுமி கிம் ஃபுக்கின் புகைப்படத்தை எடுத்த நிக் உட், கடந்த வாரம் கேரளா வந்திருந்தார். நிக் உட்டின் வருகையை மிகப் பெரிய திருவிழாவாகக் கொண்டாடியது கேரள அரசு. முதலமைச்சர் பினராயி விஜயன், நிக் உட்டை வரவேற்க, நடிகர்கள் மம்முட்டி, மோகன்லால், எழுத்தாளர் அருந்ததிராய் எனப் பலரும் அவரைச் சந்தித்துப் பேசினார்கள். கேரளாவின் பல பகுதிகளுக்கும் சென்று வந்த நிக் உட்டை கோழிக்கோட்டில் நானும் சந்தித்தேன்.

"என் நண்பர் ஒருவர் 'நேபாம்' என்கிற இடத்தில் நான்கைந்து நாட்களாகச் சண்டை நடந்துகொண்டிருப்பதாகச் சொன்னார். போர்க்களத்துக்குப் போனேன். எங்கு பார்த்தாலும் மனித உடல்கள் இறந்து கிடந்தன. ஊரெங்கும் அழுகுரல், மரண ஓலம். மக்கள் என் கண் முன்னால் அநாதைகளைப்போல இறந்து கிடந்ததைப் பார்த்ததும் அழுகை வர ஆரம்பித்துவிட்டது. அழுதுகொண்டே நடந்து சென்றுகொண்டிருந்தேன். நான்கு நாட்களாகச் சண்டை நடந்துகொண்டிருந்ததால், யாரும் உயிருடன் இருக்கமாட்டார்கள் என நினைத்தேன். ஆனால், திடீரென கிம் ஃபுக் மற்றும் இரண்டு, மூன்று சிறுவர்கள் அழுதவாறே ஓடி வந்துகொண்டிருந்தார்கள். நான் அதிர்ந்துவிட்டேன். கிம் ஃபுக்கின் பாட்டியும் கையில் ஒருவயதுக் குழந்தையுடன் ஓடிவந்துகொண்டிருந்தார். 'ஹெல்ப்... ஹெல்ப்!' என்று கத்தியபடியே, அந்த மூதாட்டி என்னை நோக்கி வந்தார். நான் படமெடுத்தவாறே அவரின் கையில் இருந்த குழந்தையைப் பார்த்தேன். குழந்தை இறந்து போயிருந்தது. போர்க்களத்தின் வலியை அந்தத் தருணத்தில்தான் உணர்ந்தேன்.

நிக் உட்






கிம் ஃபுக்கை அ.முத்துலிங்கம் சந்தித்துப் பேசிய கட்டுரை 25.11.2009 ஆனந்த விகடனில் வெளியாகியிருந்தது.

# கண்ணீருடன் வந்தார் கண்ணீருடனே சென்றார்

கணவரின் இறுதிச்சடங்குக்காக 15 நாட்கள் பரோ லில் வந்த சசிகலா, பரோல் முடிவதற்கு முன்பாகவே சிறைக்குத் திரும்பிவிட்டார். தஞ்சாவூர் பரிசுத்தம் நகரிலிரு க்கும் நடராசன் வீட்டில் தங்கினார் சசிகலா. அது துக்க வீடு என்பதையும் மறந்து, நிர்வாகிகளும் தொண் டர்களும் தினமும் குவியத் தொடங்கியதுடன், கட்சியின் அலுவலகமாகவே அது மாறிப் போனது. "இந்த வீட்டில் சசிகலா நிம்மதியாகவே இல்லை. அவர் வீட்டின் போர்டிகோ வரை வந்த தருணங்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். 'பரப்பன அக்ரஹார சிறையும் ஒன்று தான், இந்த வீடும் ஒன்றுதான்' என்கிற அளவுக்கு வீட்டுச் சிறையில் அடைந்து கிடந்தார். அவர் மனம் வெதும்பும் படி உறவுகளின் செயற்பாடுகள் இருந்தன" என்கிறார்கள் உள்விபரம் அறிந்தவர்கள்.

சசிகலா சிறையில் இருக்கும்போதெல்லாம் ஒரே நினைப்புதான் அவரைத் துளைத்தெடுத்தது. 'நம்மால் உருவாக்கப்பட்டவர்கள் இப்படித் துரோகம் செய்திருக்கிறார்களே' என எடப்பாடி பழனிச்சாமி, ஓ.பன்னீர்செல்வம் குறித்தே ஆதங்கப்பட்டிருக்கிறார். ஆனால், தஞ்சாவூர் வந்தது முதல் 'நம் குடும்பம் ஒற்று மையாக இருந்தால், இவர்களை வீழ்த்த முடியும். ஆனால், இவர்கள் இப்படியிருக்கிறார்களே' என நினைத்து நினைத்து மன அழுத்தத்தால் அவர் தவித்திருக்கிறார். இதனால், ஒருநாள் உடல் நலக்குறைவு ஏற்பட்டு, வீட்டுக்கு டாக்டர் வந்து சிகிச்சை தந்தார்.



அக்கா மகன் தினகரன், தம்பி திவாகரன், இளவரசியின் மகன் விவேக் ஆகிய மூவரும் முரண்டுபிடித்துத் திரிந்ததைப் பார்த்து சசிகலா நொந்துபோய்விட்டார். சசிகலாவுக்கு ஆறுதல் சொல்லப் பல தலைவர்கள் வந்தனர். அவர்களைத் தினகரன்தான் அழைத்துச் சென்றார். சசிகலாவுடன் அவர்கள் பேசிக்கொண்டிருந்த போது, தினகரன் கூடவே இருந்து அவர்களை வாசல் வரை வந்து வெளியே அனுப்பினார். சசிகலாவை யார் யார் சந்திப்பது என்பதை முடிவு செய்தவர் தினகரன் தான். தினகரன் பெரும்பாலும் தனக்கு வேண்டிய நிர்வாகிகள் மற்றும் ஆதரவாளர்களை மட்டுமே அனுமதித்தார். தினகரன் இல்லாத நேரத்தில் தினகரனின் மனைவி அனுராதா, மகள் ஜெயஹரிணி உடன் இருந்தனர். "தன்னைப் பற்றி யாரும் சசிகலாவிடம் குறை சொல்லிவிடக்கூடாது என்பதில் தினகரன் தெளிவாக இருந்தார். அதன் படிதான், காய்களை நகர்த்தினார்" என்கிறார்கள் அவருக்கு நெருக்கமானவர்கள்.

இதனால் மனம் வெதும்பிய திவாகரன், பெரும்பாலும் மாலை நேரத்திலேயே சசிகலாவைச் சந்திக்க அந்த வீட்டுக்கு வந்தார். இந்த மனக் குமுறலை நடராசன் படத்திறப்பு விழா வில் அவர் கொட்டித் தீர்த்தார். "35 வருடங்களாக என் அக்கா துன்பத்தை அனுபவித்து வருகிறார். இப்போதும் அவர் வாழ்க்கையில் நிம்மதி இல்லை" எனத் திவாகரன் பேசியது. தினகரனை மனதில் வைத்துத்தான் என்கின்றனர் அவரின் ஆதரவாளர்கள். "ஜெயலலிதா இருந்த போதுகூட, நான் திரை மறைவில் அரசியல் செய்து வந்தேன். ஆனால், இப்போது என்னை எதிலும் தலையிட விடுவதில்லை. நான் இப்படியே இருந்து விட்டுப் போகிறேன். என் மகன் ஜெயானந்துக்கு மட்டும் ஏதாவது ஏற்பாடு செய்" என அக்காவிடம் அழுத்தம் கொடுத்துள்ளார் திவாகரன்.

விவேக் இன்னொரு பக்கம், "நான் எதிலும் தலையிடாமல் இருக்கிறேன். ஜெயா டிவி உள்ளிட்ட நிர்வாகங்களில் எனக்குப் பல இடையூறுகள் தருகிறார்கள். என்னைப் பற்றியோ, என் குடும்பத்தைப் பற்றியோ யாராவது பேசினால் நான் சும்மா இருக்கமாட்டேன்" எனக் கொந்தளித்தாராம்.



"இப்போதைக்கு நமக்கான ஒரே நம்பிக்கை தினகரன்தான்" எனச் சொல்லி குடும்ப உறவுகளைத் தற்காலிகமாகச் சமாதானம் செய்துள்ளார் சசிகலா. "இக்கட்டான சூழ்நிலையில் பொறுப்பை உன்னிடம் கொடுத்தேன். இன்று கட்சியைப் பெரிய அளவில் வளர்ச்சி பெற வைத்துள் ளதுடன் நம் குடும்பத்தின் மீது இருந்த பழியையும் துடைத்திருக்கிறாய்" எனத் தினகரனை மனம்விட்டுப் பாராட்டினாராம் சசிகலா.

நடராசனின் சொத்துகள் குறித்தும் பேச்சு எழுந்துள்ளது. நடராசனின் உறவுகள், "சொத்துகளை நாங்களே பார்த்துக்கொள்கிறோம்" என்று கூறியுள்ளனர். சசிகலா உறவுகளுக்கும் இவற்றை நிர்வகிக்க ஆசை உள்ளது. இதனால், குழப்பத்தில் தவித்த சசிகலா, எந்த முடிவையும் எடுக்க வில்லை. "இந்தப் பிரச்சினைகள்தான், பரோல் முடிவதற்கு முன்பே சசிகலா சிறைக்குத் திரும்பிப் போகக் காரணம்" என்றனர் அவரின் நெருங்கிய உறவுகள் சிலர்.

மார்ச் 31 ஆம் திகதி காலையில் அவர் பெங்களூருக்குப் புறப்பட்டார். நல்ல நேரம் பார்த்து காலை 8.30 மணிக்கு காரில் ஏறினார் சசிகலா. பின்னிருக்கையில் தினகரன் மற்றும் அவர் மைத்துநர் டாக்டர் வெங்கடேஷ் ஏறிக்கொண்டனர். சுற்றிலும் நின்றிருந்த உறவினர்களைப் பார்த்தார் சசிகலா. அவரையும் அறியாமல் கண்களில் நீர் வழிந்தது. அருகே நின்ற திவாகரன், "நீயே இப்படி உடைஞ்சிட்டா என்ன பண்றது? தைரியமா இரு" எனச் சசிகலா காதருகில் போய்ச் சொன்னார். இதையெல்லாம் அமைதியாகப் பின்னாலிருந்து பார்த்துக் கொண்டிருந்தார் தினகரன். கண்ணீரைத் துடைக்காமல் காருக்குள்ளேயே கால் மணி நேரம் இருந்தார். சரியாக 8.46 மணிக்கு வாசலுக்கு வெளியே கார் வந்தது. எப்படிக் கண்ணீருடன் வந்தாரோ, அதே போல் கண்ணீருடனே திரும்பிச் சென்றார் சசிகலா.



## வியாசரின் வியாக்கியானம்

எனக்குத் ஒரு ஏழு எட்டு வயசில எங்கட தேப்பனார் என்னை கீரிமலைக் கடலுக்குக் கூட்டிக் கொண்டு போறவர். கிழமையில ஒருநாள் கீரிமலைக் கடலில குளிக்கிறது எங்கட நிகழ்ச்சி நிரலில தவிர்க்க முடியாத ஒன்று. எனக்கு நல்ல நினைவிருக்கு எனக்கு சரியான சிரங்கு வந்தது. அந்த நேரத்தில மாவட்டபுரத்தில பேமசா இருந்த கறுவல் பெரியாரின்ர மருத்தென்னையும் கீரிமலைக் கடல் குளியலும் தான் என்ர சிரங்க குணமாக்கிற்று.

அதோட கறுவல் பெரியாரின்ற பேதி நல்ல பேமஸ். அப்ப எனக்கு பேதி என்றால் என்னண்டே தெரியாது. ஆச்சி பேதி வாங்கி வந்து இரவு வைச்சவா. கூடவே ஒரு கரும்புத் துண்டு நான் என்னண்டு கேட்க அது உனக்கு கரும்பில பேதி தந்தவர் கறுவல் பெரியாரி என்றார். கடவுளே ஆச்சி இப்ப உடனே கரும்பப் பிளி. பேதியைத் தா எண்டு நான் அடம்பிடிக்க. எடமடையா . பேதி இரவு குடிக்கக் கூடாது. விடியக் காலையில தான் குடிக்க வேணும் எண்டு சொல்லிற்று வைச்சிட்டா.

நாசமறுந்தது எனக்கு இரவிரவா நித்திரையே வரல. ஒரே பேதின்ற நினைப்புத் தான் . எப்படா விடியும் என்று முழிச்சிருந்து காலையில 4 மணிக்க ஆச்சியை எழுப்பி பேதியைத் தா என்று அடம்பிடிக்க ஒரு மாதிரி பேதி குடிச்சாச்சு. பிறகு பேதியப் பற்றி சொல்லவே வேணும். என்ற கடவுளே நான் பட்ட பாடு சொல்லி மாளாது. அன்றையில இருந்து இன்றைக்கு வரைக்கும் கரும்பக் கண்ணிலையும் காட்டக் கூடாது எனக்கு. கரும்பக் கண்டால் கறுவல் பெரியாரின்ர பேதி தான் நினைவுக்கு வரும். சரி அது ஒரு பக்கம் கிடக்கட்டும். இப்ப விசயத்திற்கு வருவம். இந்தக் கீரிமலைக் தீர்த்தக் கரைக்கு அந்தியேட்டி செய்ய அன்றாடம் எத்தனையாயிரம் பேர் வருகினம். கீரிமலைக் கடல் அருகோட இருக்கிற கேணி சித்திரை, வைகாசியில சுத்தமான உப்பில்லாத நல்ல தண்ணியா இருக்கும். அது ஒரு அதிசயம் தான். இறைவன் படைப்புக்கள் எல்லாம் அதிசயம் தானே. இப்ப என்னென்டால் அந்தக் கேணியை சுத்தம் செய்கிற தொழிலாளர்கள் ஒரு நேரம் காலம் இல்லாமல் தாங்கள் நினைச்ச நேரத்தில படிகளைக் கழுவி அசுத்தத் தண்ணிய அந்தக் கேணிக்குள்ளேயே தள்ளி விடுகினம். இதை விட கொடுமைத் தனம் ஒன்று தேவையா?

எத்தனை வெள்ளக்காரர் அந்தக் கேணியில குளிச்சத கண்டிருக்கிறன். இப்படி நேரம் காலம் தெரியாமல் குளோரின் போட்டுக் கழுவி அந்தக் குளிக்கிற தண்ணிக்குள்ள தள்ளி விடுகிறதோட அவையின்ர வேலைமுடிச்சுது. இதை யாரும் கேட்பதில்லை. கவனிக்க வேண்டிய பிரதேச சபையும் கண்டும் காணாதது போல இருக்கு. ஆக்கள் குளிச்சுக் கொண்டு இருக்கக்கே இந்தக் கொடுமைத்தனம் நடக்குது எண்டால்..? உடனடியா இப்படிப்பட்ட செயலை தடுத்து நிறுத்தி மக்களுக்கு நல்ல சேவை செய்ய வேண்டும் என்று இந்த இடத்தில சம்பந்தப்பட்ட ஆட்கள கேட்டுக் கொள்கிறம்.

# எப்படி இருந்த நான் இப்படி ஆயிட்டேன்

2015 உலகக்கிண்ணம் சிட்னியில் இந்தியா - அவுஸ்திரேலியா அரையிறுதி வரைக்கும் இந்தியா ஒரு போட்டி கூடத் தோக்கல. ஆனாலும் ஒரு பயம். அந்த பயம் 2011 உலகக்கோப்பை காலிறுதிப்போட்டி பைனல்லயும் இருந்துச்சு. இந்த செமிசிட்னியில், அந்த காலிறுதி அஹமதாபாத்ல. வெளியூர்ல ஆடுனப்போ இருந்த பயம் இந்தியால ஆடுனப் போவும் இருந்துச்சு. 2011 அரையிறுதியில், இறுதிப்போட்டி அப்பெல்லாம் கூட இல்லாத பயம், அந்த காலிறுதியில் இருந்துச்சு. போட்டி முடியுற வரைக்கும் அந்த பயம் கொஞ்சம் கூட குறையல. போட்டியின் எந்த தருணத்துலயும் கம்ஃபர்டபிளா ஃபீல் பண்ண முடியல. இதுக்கு ஒரே காரணம் - அந்த 2 போட்டியும் இந்தியா எதிர்த்து விளையாடுனது அவுஸ்திரேலியா. அந்த பயம் அப்போ வந்தது இல்ல. 15 வருஷமா என்னை ஆட்டுவிச்ச பயம் அது!

2001 அல்லது 2002...அது எந்த வருஷம்னு நல்லா தெரியல. அப்பா கூட சேர்ந்து நானும் கிரிக்கெட் பார்க்க ஆரம்பிச்சேன். அப்படியே அது வெறி ஆயிடுச்சு. அப்ப்போ பழைய பேர்ட்டியெல்லாம் போடுவாங்க. அப்போலாம் அப்பா, மேற்கிந்தியத்தீவுகள் அணி பத்தி செமையா புகழ்வாரு. விவியன் ரிச்சர்ட்ஸ், மால்கம் மார்ஷல், அம்ப்ரேர்ஸ்னு ஒவ்வொருத்தரப் பத்தியும் அள்ளி வீசுவாரு. கேக்கவே மெர்சலா இருக்கும். ஆனா, நான் பாத்த டைம்ல மேற்கிந்திய தீவுகளுக்கு அவ்ளோ சீன்லாம் இல்ல. அப்பப்போ ஜெயிப்பாங்க. அடிக்கடி தோப்பாங்க.

ஆனா, அந்த மேற்கிந்தியதீவுகள் அணி மாதிரி அப்போ ஒரு டீம் இருந்துச்சு. அவுஸ்திரேலியானு பேரு. மஞ்சள் கலர்ஜெர்சியில அவங்க வந்தா, மத்த டீமையெல்லாம் பந்தாடாம போக மாட்டாங்க. டீம்ல இருககுற பதினொரு பேருமே மாஸ் பிளேயர்ஸா இருப்பாங்க. அவங்கள ஒரு போட்டியில தோக்கடிச்சாலே அது பிரேக்கிங் நியூஸ். அப்போலாம் இருபது-20னா என்னென்னே தெரியாது. ஆனா, அதிரடி ஆட்டம் வேற லெவல்ல இருக்கும். பந்துவீச்சுகள் உச்சகட்ட வெறித்தனம். கில்கிறிஸ்ட், ஹெய்டன், பொண்ட்டிங், மார்டின், பெவன், சைமண்ட்ஸ், லேமன், ப்ரெட் லீ, வார்னே, மெக்ராத், கில்லெஸ்பீ... யப்பா! இப்போக்கூட அந்த அணி பத்தி நினைச்சா புல்லரிக்குது. அப்படி அணி முழுக்க ஸ்டார்ஸா இருந்ததாலேயே அவங்க மேல ஒரு ஆர்வம் தானாவே வந்திடுச்சு. அந்த ஆர்வத்துக்குக் காரணம் கிரிக்கெட் கார்ட்ஸ்.

3-வது, 4-வது படிக்கும்போதெல்லாம், கிளாஸ்ல ரெண்டு மூணு பேராவது கிரிக்கெட் கார்ட், WWE கார்ட்லாம் வச்சிருப்போம். டீச்சர் யாராவது வரலனா அதுதான் எங்களுக்கு ஹாபி. அதுல சச்சின், முரளி, அக்ரம்லாம் நம்ம கையில இருந்தா ஈசியா எதிராளியோட கார்டை பிடுங்கிடலாம். அந்த மாதிரி பிளேயர்ஸ் ஒவ்வொரு டீம்லயும் ஒருத்தர், இல்லாட்டி ரெண்டு பேர் இருப்பாங்க. ஆனா, அவுஸ்திரேலியன் பிளேயர்ஸ் கார்ட் வந்தா, எல்லா கார்டுமே பவர்ஃபுல்லா இருக்கும். கில்கிறிஸ்ட் வந்தா கேட்சஸ், பான்டிங் வந்தா ரன்ஸ், பெவன், மார்டின்லாம் வந்தா துடுப்பாட்டம் ஆவ்ரேஜ், மெக்ராத்க்கு சிறந்த பந்துவீச்சு, வோர்னேவுக்கு பந்துவீச்சின் அவ்ரேஜ்னு எல்லா கார்டுமே வெயிட்.

அதுதான் அவுஸ்திரேலியா பத்தி நாங்க முதன்முதலா விவாதம் செய்யக் காரணமா இருந்துச்சு. “எப்படிடா... அவுஸ்திரேலியன் வீரர்கள் மட்டும் இவ்வளவு பவர்ஃபுல்லா இருக்காங்க..”, “அவங்க மட்டும் எப்படிடா எல்லா மேட்ச்சும் ஜெயிக்கிறாங்க”னு ரொம்ப வியந்திருக்கோம். அப்போ கேம்ஸ் பீரியட்ல பக்கத்து கிளாஸ்கூட கிரிக்கெட் விளையாடுவோம். போட்டி தொடங்கறதுக்கு முன்னாடி ஆளாளுக்கு ஒரு பேரு வச்சிப்போம். நான் கங்குலி, என் ஃப்ரெண்டு சச்சின், ஒருத்தன் டிராவிட், கீப்பிங் செய்றவன் கில்கிறிஸ்ட், பந்துவீச்சு போடுறவன் அக்ரம்னு ஆளாளுக்கு ஒரு பேரு. ஆனா எங்க அணியோட பேரு மட்டும் ஆவுஸ்திரேலியா! ஏன்னா... அவுஸ்திரேலியானாதான் ஜெயிக்க முடியும். அவுஸ்திரேலியாதான் ஜெயிக்கும்.

அந்த வயசுல சச்சினோட ஸ்ட்ரெய்ட்ட்ரைவையோ, டிராவிட் பண்ற லேட் கட் ஷொட்டையோ ரசிக்கிற அளவுக்கு விபரம் இல்ல. எங்களப் பொறுத்தவரைக்கும்ஜெயிக்கிறவங்கதான் மாஸ். அதனால, அவுஸ்திரேலியாதான் Boss. ஊர்ல பெரிய பசங்க, கார்க் பால் டோர்னமன்ட் விளையாடுவாங்க. அதுல நிறைய அணி மஞ்சள் கலர் டி-ஷர்ட்தான் போட்டிருப்பாங்க. ஆமா, என்னை மட்டுமல்ல எங்க மொத்த ஜெனரேஷனையும் வசியம் பண்ணியிருந்துச்சு...அதாங்க 90 “ஸ்கிட்ஸ்...அவுஸ்திரேலியான்ற அணி ஒரு வகையில எல்லோருக்குமே சொப்பனமா இருந்துச்சு.

ஆனா, போகப்போக அவங்க மேல வெறுப்பு ஏற்படாமலும் இல்ல. அது ஸ்டார்ட் ஆனது 2003 இறுதிப் போட்டி. இறுதிப் போட்டியில் இந்தியாவ தோக்கடிச்சிட்டாங்க. இதுக்கு மேல என்ன வேணும் அவங்கள வெறுக்க! அதுவும் “பாண்ட்டிங் ஸ்ப்ரிங் பேட் வச்சு விளையாடுனான்”னு கிளப்பிவிட்டு அந்த மனுஷனையும் வெறுக்க வச்சிட்டாங்க. அந்த வெறுப்பு ஒருபக்கம் வளர்ந்துட்டே இருந்துச்சு. ஆனா, “இவங்க எப்படிய்யா ஜெயிச்சிட்டு இருக்காங்கனு முன்ன இருந்த வியப்பு மட்டும் போகவேயில்ல.

மத்த அணியெல்லாம் டெஸ்ட் விளையாடுனா போர் அடிச்சிடும். இந்தியா ஆடுற மேட்சே சேவாக் அவுட் ஆகற வரைக்கும்தான் பார்ப்போம். ஆனா, இந்தப் பயலுக ஆடுனா டெஸ்ட் மேட்ச்கூட செம லைவ்லியா இருக்கும். எதிரணி பட்ஸ்மேன வம்பிழுக்கிறது, விசித்திரமா களத்தடுப்பு நிக்க வைக்கிறது, ஆஷஸ் தொடங்கிட்டா களேபரம் பண்றதுனு. இன்னிக்கு யோசிச்சுப் பார்த்தா, “டெஸ்ட் ஃபார்மட் வீழாம இருந்ததுக்குக் காரணமே இவங்கதானோனு தோணும். மலிங்க, பிராவோ மாதிரி ஆளுகலாம் ஐ.பி.எல் விளையாடறதுக்காக நஷனல் அணி விட்டு வந்தா, இந்தப் பயலுக ஆஷஸ் விளையாட ஐ.பி.எல்-ல இருந்து வெளிய போவாங்க. எல்லோரும் காச மட்டுமே குறியா நினைக்கறப்போ, அவங்களோட ஆட்டிட்யூட் ரொம்ப ஆச்சர்யமா இருக்கும். இப்படி ஒவ்வொரு முறையும் அவுஸ்திரேலிய என்ன ஆச்சர்யப்பட வச்சிட்டேதான் இருந்துச்சு.

இன்டர்நெட் அப்டின்ற விஷயம் வாழ்கைக்குள்ள வந்தப்றம், அவங்க மேல இருந்த ஆச்சர்யம் இன்னும் கூடுச்சு. பிராட்மேன் சராசரி 99.94-னு தெரிஞ்சு தலையே சுத்திடுச்சு. ஸ்பின்னுக்குஉதவாதுனுஇன்னைக்கு நாம சொல்ற எல்லா பிட்ச்லயும் வார்னே மாயாஜாலம் காட்டிருக்காட்டி. பெஸ்ட் ஸ்லிப் ஃபீல்டர் யாருனு கூகுள்ட்ட கேட்டா மார்க் வாஹ்னு சொல்லுது. சிறந்த விக்கெட் காப்பாளர் யாரு? கில்கிறிஸ்ட். சிறந்த அணித்தலைவர் பொண்ட்டிங். சிறந்த சுழற்பந்து வீச்சாளர் வோர்னே. சிறந்த ஆவ்ரேஜ் பெவன். எல்லாத்துக்கும் மேல Genuine கிரிக்கெட்டர் யாருனு பாத்தா கில்கிறிஸ்ட் பேருதான் பல வெப்சைட்லயும் முதல்ல வருது. அப்போங்கய்யா...

ரி நம்ம ஆளுகளோட பெஸ்ட் பெர்ஃபாமன்ஸ் பத்திலாம் தெரிஞ்சுக்கலாம்னு அதே கூகுள் பயபுள்ள கிட்ட கேட்டேன். சச்சினுக்கு சார்ஜா செஞ்சுரி, கங்குலிக்கு ப்ரிஸ்பேன் சதம், டிராவிட்டுக்கு அடிலெய்ட் டெஸ்ட், வி.வி.எஸ்.லட்சுமணக்கு கொல்கத்தா டெஸ்ட்னு அவுஸ்திரேலியா கூட அவங்க அடிச்சதாவே காட்டுது. சரி, பௌலர்களுக்குப் பாக்கலாம்னா... ஜாஹிர்க்கு மொஹாலி டெஸ்ட், அகார்கர்க்கு அடிலெய்ட் டெஸ்ட், ஹர்பஜனுக்கு ஈடன் கார்டன்னு திரும்பவும் அதே சிலபஸ்தான். எல்லாத்துலயும் எதிரணி அவுஸ்திரேலியா. ஏன்... மத்ததெல்லாம் டீமே இல்லையானு தோணும்.

அதுதான் உண்மையும்கூட. 90களுக்குப் பிறகு ஒரு கிரிக்கெட் பிளேயரோட பேரு ரொம்ப நாள் நிலைக்கனும்னா, ஒண்ணு அவன் அவுஸ்திரேலியா கூட அடிச்சிருக்கணும், இல்ல ஆஸ்திரேலியாவுல அடிச்சிருக்கணும். கங்குலியை ஒரு சிறந்த அணித்தலைவராக, கொண் டாடக் காரணம், “அவுஸ்திரேலியாவுக்கு டஃப் கொடுத்தாரு” அப்டின்றதுதானே...! இதெல்லாம் தெரிஞ்சும் அவுஸ்திரேலியா மேல ஆச்சர்யம் வரலேன்னாதான் ஆச்சர்யம்.

அடிக்கடி இன்னொரு விடயம் தோணும். உலகக்கிண்ணம்மாதிரி ஒரு டோர்னமென்ட்ல, இந்தியா தோத்துடுச்சுனா, நாம உடனே சப்போர்ட் பண்ற அணி தென்னாபிரிக்கா. டி வில்லியர்ஸ் தான் இதுக்குக் காரணம்னு இன்னைக்கு மீம்ஸ் போட்டுட்டு இருக்கோம். ஆனா, யோசிச்சுப் பாத்தா அதுக்குக் காரணமும் அவுஸ்தி ரேலியாதான்.

அவுஸ்திரேலியா இருந்த ஃபார்முக்கு, அவங்கள சாதாரணமா தோக்கறடிக்கிறதே பெரிய விடயமா இருந்துச்சு. ஆனா, தென்னாபிரிக்கா ஆஸி யோட செவுல்லயே அடிச்சு ஜெயிச்சுதே அந்த ஒரு ஆட்டம்... 434 ஓட் டங்களை சேஸ் பண்ணி மரண மாஸ் வெற்றி. அது யாராலும் ஜீரணிக்க முடியாத தோல்வி. அப்படியொரு தோல்விய அவுஸ்திரேலியாவுக்கு கொடுத்துச்சு Proteas அணி.

ஏற்கனவே 1999 உலகக் கிண்ண அரையிறுதியில அவுஸ்திரேலியா கூட ஆடிய போட்டியை ஆகி, தென்னாபிரிக்கா வெளிய போயிருக்கும். அப்போ இருந்தே அவங்க மேல நமக்கு ஒரு சிம்பதி இருந்துச்சு. அதுகூட அந்த 434 சேஸ் சேந்து, அவங்க பொசுக்குனு நம்ம செல்லப்பிள்ளை ஆகிட்டாங்க. 2007 உலகக்கிண்ணம் இந்தியா லீக்லயே வெளியேற... அப்றம், நான், என் ஃப்ரெண்ட்ஸ்லாம் தென்னாபிரிக்காவத்தான் சப்போர்ட் பண்ணோம். காரணம், அவங்களால மட்டும்தான் அவுஸ்திரேலியாவ தோக்கடிக்க முடியும்னு நினைச்சோம். ஆனா, அது நடக்கல. அந்த தென்னாபிரிக்காவ ரெண்டு முறை தோக்கடிச்சு, அந்தக் கோப்பையையும் ஜெயிச்சு ஹட்ரிக் அடிச்சுது அவுஸ்திரேலியா. அவங்கமேல இருந்த வெறுப்பும் பிரமிப்பும் அதிகமாயிட்டே இருந்துச்சு.



ஜென்டில்மேன்ஸ் கேம்னு சொல்லி, ஸ்லெட்ஜிங்குக்காக அவுஸ்திரேலியாவை நிறையப் பேர் வெறுக்கற மாதிரி என்னால வெறுக்கவும் முடியல. ஏன்னா, ஸ்லெட்ஜிங் இல்லாத கிரிக்கெட்டில் சுவராஸ்யம் இல்லைன்னு நம்புறேன். இலங்கைல நடந்த அந்த மொக்க இருபது-20 டோர்னமென்ட “நாகினி டான்ஸ்” இல்லைனா நாமளே கூடப் பாத்திருக்க மாட்டோம். இன்னைக்கு பிட்ச்ல பங்களாதேஷ் பிளேயர்ஸ் வரைக்கும் ரியாக்ட் பண்றாங்கனா, அதுக்கு ஸ்லெட்ஜிங்தான் காரணம். கிரிக்கெட்ட என்டர்டெய்ன்மென்ட்டா பாத்துட்டா, அதுல ஸ்லெட்ஜிங் இல்லைனா அது கம்ப்ளீட் என்டர்டெய்ன்மென்ட்டா இருக்காது. அதுல ஆஸி பிளேயர்ஸ் கொஞ்சம் எல்லை மீறி போறாங்கதான். ஆனா, ஆஷஸ் டெஸ்டோ, தென்னாபிரிக்கா சீரிஸோ, இந்தியா ஆடாத ஒரு மேட்ச்சை நாம இன் னைக்கு இவ்ளோ சீரியஸா ஃபாலோ பண்ண ஸ்லெட்ஜிங்தான் முக்கியமான காரணம்.

ஸ்லெட்ஜிங் மட்டும் இல்ல... கிரிக்கெட்டுக்கு நடுவல எத்தனையோ புது விடயங்கள நமக்குக் கொண்டுவந்ததும் அவங்கதான். இன்னைக்கு தென்னாபிரிக்கா “பிங்க் ஜெர்சி” போட்டு விளையாடறதப் பத்திப் பேசுறோம். ஆனா, முதன் முதலா கான்சர் விழிப்புணர்வுனு சொல்லி பிங்க் கேப் போட்டு விளையாடுனது தான் அவுஸ்திரேலியாதான். மெக்ராத்தோட கான்சர் அறக்கட்டளைக்காக “மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு” ஏற்படுத்த இதை செஞ்சாங்க.

நிறைய பேர் இதெல்லாம் பண்றாங்க. அது விளம்பரத்துகாக்கூட இருந்திருக்கலாம். ஆனா, அந்தச் சின்ன வயசுல அதெல்லாம் பெரிய விடயமா இருந்துச்சு. அதுவரை பிரமிச்ச, திட்டுன, வெறுத்த அவுஸ்திரேலியா மேல மேலும் பிரமிப்பு கூடுச்சு. இப்படித்தான் 7 வயசுல தொடங்கி, 15 வருடமா அவுஸ்திரேலியா அப்டின்ற பிம்பம் எனக்குள்ள வளர்ந்து கிடந்துச்சு. அது எனக்குப் பிடிக்குமா, பிடிக்காதானு கூட சரியா சொல்ல முடியாது. ஆனா, நான் அவங்களப் பார்த்து ஆச்சர்யப்படுறேன்!

ஸ்மித், வோர்னர் பிரச்சினையெல்லாம் ஓஞ்சு, நாலாவது டெஸ்ட் ஆரம்பம். டொஸ் போட வந்த டீம் பெய்னைப் பார்க்கும்போது, “எப்படி இருந்த நான் இப்படி ஆயிட்டேன்” டயலாக்தான் ஞாபகம் வந்துச்சு. ஸ்டீவ் வாஹ், ரிக்கி பாண்ட்டிங், மைக்கேல் கிளார்க்னு ஆளுமைகளைப் பாத்த இடத்துல, அடையாளம் இல்லாத ஒரு ஆள். இன்னைக்கு உக்காந்து கிரிக்கெட் கார்ட் விளையாடுனா அவருக்குத் தனி கார்ட் இருக்குமானு தெரியல. ஆனா, அவர்தான் அணித்தலைவர். கம்மின்ஸ் தவிர்த்து, மத்த 10 பேரும் ஐ.பி.எல்-ல இல்லாத வங்க. ஏதோ பிராக்டீஸ் மேட்ச் விளையாடுற போர்ட் பிரஸிடென்ட் லெவன் அணி மாதிரி இருந்துச்சு. பாக்கவே ரொம்ப சங்கடமா இருந்துச்சு.

2003 உலகக்கிண்ண இறுதியில் இந்தியாவ தோக்கடிச்ச அந்த அவுஸ்திரேலியன் டீமோட பிளேயிங் லெவன் இன்னமும் ஞாபகம் இருக்கு. அப்படியொரு மாஸ் அணி. ஒவ்வொரு அவுஸ்திரேலியன் அணியுமே அப்படித்தான் இருக்கும். அப்படித்தான் இருநதுச்சு. ஆனா இன்னைக்கு..? ஜோ பர்ன்ஸ், ரென்ஷா, சேயர்ஸ்... கூகுளுக்கே அவங்களப் பத்தி தெரியுமானு தெரியல. அப்படி இருக்கு அணி. இந்த டெஸ்ட்ல 492 ஓட்டங்கள் வித்யாசத்துல தென்னாபிரிக்கா கிட்ட தோத்திருக்கு. ஜெயிக்கிறதெல்லாம்கூட இரண்டாம்பட்சம். ஆனா, 15 வருஷமா நான் பார்த்த பல விடயங்கள் இப்போ இல்ல. அந்த டீமைப் பாத்து நம்மள வியக்க வச்ச கெத்து, ஆட்டிட்யூட், நம்மள ரசிக்க வச்ச அந்த திமிரு எதுவுமே இல்ல. அவங்க முகத்துல தெரிஞ்சது ஆறாம இருந்த அவமானத்தோட வடு மட்டும்தான்.

ஒரே ஒரு சம்பவம், நான் 15 வருஷமா கட்டி வச்சிருந்த பிம்பத்த உடைச்சிருச்சு. நான் மட்டுமல்ல, எத்தனையோ 90ஸ் கிட்ஸோட பழைய நினைவுகள்ல கறுப்பு பெயின்ட் ஊத்திடுச்சு. இந்த மட்ச் பாக்க புடிக்கவே இல்ல. ஏன்னா, அதுல விளையாடுனது நான் பாத்து ரசிச்ச அவுஸ்திரேலியா இல்ல. பெரிய தப்போ, சின்ன தப்போ, ஒரு வகையில அது ஈரோடுல பிறந்த என்னவரைக்கும் பாதிச்சிடுச்சு. எனக்கு அடுத்த தலைமுறைக்கு இப்போ இந்தியா இருக்கு. டோனி, கோலி, ரோஹித்னு அவங் களுக்கு ஹீரோஸ் இருக்காங்க. இந்தியா இப்போ ஆதிக்கம் செலுத்திட்டு இருக்கு. அவங்களுக்கு அவுஸ்திரேலியா பத்திக் கவலை இல்லை. ஆனா, எனக்கு..?

என் அப்பா வெஸ்ட் இண்டீஸ் பத்தி என்கிட்ட சொல்லி சிலாகித்த மாதிரி, நான் என் மகன்கிட்ட எதைப்பத்தி சொல்லுவேன்? சொல்லலாம்... தொடர்ந்து 3 முறை கப் அடிச்ச அவுஸ்திரேலியா பத்தி, வில்லாதி வில்லனா இருந்த அந்த பிளேயர்ஸ் பத்தி, அவங்க திறமையைப் பத்தி சொல்லலாம். அப்படிச் சொல்லும்போது, “எது... அந்த ஏமாத்துக்கார டீம்தான!”னு அவன் திருப்பி கேட்டா... அதுக்கு என்ன பதில் சொல்ல? அந்த ஒத்தக் கேள்வி, என்னோட வியப்பை, பிரமிப்பை, கிரிக்கெட் காதலை, பல வருட நினைவுகளை, நான் கட்டி வச்ச பிம்பத்தை உடைக்கும்! (ம)

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : ரிக்‌ஷாக்காரன்
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
இயற்றியவர் : வாலி
பாடகர் : டி.எம்.சௌந்தரராஜன்




அங்கே சிரிப்பவர்கள் சிரிக்கட்டும்
அது ஆணவச் சிரிப்பு
இங்கே நீ சிரிக்கும் புன் சிரிப்போ
ஆனந்தச் சிரிப்பு
நல்ல தீர்ப்பை உலகம் சொல்லும் நாள் வரும்போது,
அங்கே சிரிப்பவர் யார் அழுபவர் யார்
தெரியும் அப்போது

வயிறு வலிக்கச் சிரிப்பவர்கள் மனித ஜாதி
பிறர் வயிறெரிய சிரிப்பவர்கள் மிருக ஜாதி
மனிதன் என்ற போர்வையில்,
மிருகம் வாழும் நாட்டிலே
நீதி என்றும் நேர்மை என்றும் எழுதி வைப்பார் ஏட்டிலே ....
(அங்கே சிரிப்பவர்கள் )

நாணல் போல வளைவதுதான் சட்டமாகுமா?
அதை வளைப்பதற்கு வழக்கறிஞர் பட்டம் வேணுமா?
தர்மத் தாயின் பிள்ளைகள்
தாயின் கண்ணை மறைப்பதா?
உண்மைதன்னை ஊமையாக்கித்
தலைகுனிய வைப்பதா?
(அங்கே சிரிப்பவர்கள் )

தோட்டம் காக்கப் போட்ட வேலி பயிரைத் தின்பதோ
அதைக் கேள்வி கேட்க ஆளில்லாமல் பார்த்து நிற்பதோ ..
நான் ஒரு கை பார்க்கிறேன்
நேரம் வரும் கேட்கிறேன்
பூனை அல்ல புலி தான் என்று
போகப் போகக் காட்டுகிறேன்
போகப் போகக் காட்டுகிறேன்
(அங்கே சிரிப்பவர்கள் )



### திருமண பந்தம்

*பிள்ளை வளர்ந்து திருமணம் ஆகும் சமயத்தில் முன்னதாகவே ஆலயத்திற்கு தகவல் தெரிவித்து பிள்ளையை முறையாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். அப்போது பிள்ளையின் நினைவாக ஆலயத்திற்கு அவர்கள் பெயரில் ஏதாவது பொருளை உபயமாக வழங்குவது நன்மைதரும். திருமணத்தைத் தவிர வேறு எந்தக் காரணத்திற்காகவோ காரண காரியங்கள் இல்லாமலோ குழந்தையைப் பெற்றுச் செல்லக்கூடாது. தத்துக் கொடுத்தவரின் திருமண காலங்களில் சுவாமிக்கு பட்டு வஸ்திரம், மாலை சாத்தி வழிபட்டால் அவர்களுக்குள் ஒற்றுமை பலப்படும் என்பது நம்பிக்கை. இதை மெய்ப்பிக்கும் வகையில் இன்றுவரைகூட முகூர்த்த நாட்களில் 15 முதல் 20 திருமணங்கள், திருமண நிச்சயதார்த்தங்கள் இந்து ஆலயத்தில் நடைபெறுவதைக் காணலாம். இந்தத் தத்துக்கொடுக்கும் பிரார்த்தனையால் ஜாதகத்தில் தோஷம் உள்ள குழந்தைகள் பலன் பெறுவதோடு அவர்கள் கோயில் சார்பில் தத்து எடுக்கும் உறவினர்களும் பலன் பெறுவார்கள்.*

### சூரிய வழிபாடு

*இந்து ஆலயத்தில் வருடந்தோறும் மார்கழி மாதம் 25 ஆம் திகதி முதல் தை மாதம் 10 ஆம் திகதி வரை அதிகாலை 6.30 மணிக்கு பின்னர் ஒளிக்கதிர்களால் சிவ பெருமானை சிவபூஜை செய்யும் அற்புதக் காட்சியை நேரில் தரிசிக்கலாம். இந்த அற்புத நிகழ்வை மூன்று நிமிடம் மட்டுமே காணமுடியும்.*

*வி.பிரணவன்*
*கலட்டி, யாழ்ப்பாணம்.*

# மனித குலத்தின் ஆரோக்கியமே நாட்டின் உண்மையான வளர்ச்சி

நாட்டின் செழிப்புக்கு வித்திட மனித வளங்களை ஆரோக்கியப்படுத்த வேண்டும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமாகும். மனிதரின் அடிப்படைத் தேவைகளைத் தொடர்ந்து சுகாதாரமும் முக்கியத்துவமாகின்றது. தேசத்தின் செழிப்புக்கு பூரண மிகு ஆரோக்கியமிக்க மனித வளங்கள் இன்றியமையாதது போல பொருளாதார அபிவிருத்திக்கு சுகாதாரத்துறை அவசியமாகின்றது.

நோய்த் தடுப்பிலும் நோய் வருமுன் காப்பதிலும் விழிப்புணர்வுகளை மேற்கொள்வதோடு பிணியாளர்களுக்கு தகுந்த சிகிச்சை வழங்கி அவர்களைப் பராமரிப்பதையும் கருப்பொருளாகக் கொண்டு பிரதியாண்டும் ஏப்ரல் ஏழாம் திகதி உலக சுகாதார தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

உலக மாந்தரின் சுகாதார நலன்களை மேம்படுத்தும் தூர நோக்குடன் ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு முகவராண்மையாக 1948 ஏப்ரல் 7ஆம் திகதி உலக சுகாதார ஸ்தாபனம் அமைக்கப்பட்டது. ஜெனிவாவில் தலைமையகத்தைக் கொண்ட இந்த அமைப்பு உலக மக்களின் சுகாதார மேம்பாட்டிற்கான சர்வதேச ஒத்துழைப்பை வழங்கும் நிறுவனமாக பொதுமக்களின் ஆரோக்கியம் சார்பாகக் கரிசனை கொண்டு செயலாற்றுகிறது.

இன்று உலகளாவிய ரீதியில் மக்களின் ஆரோக்கியத்திற்கு அச்சுறுத்தலாக சனத் தொகை விருத்தி, வதிவிட வசதியின்மை, உணவின்மை, பட்டினி, தொழில் வாய்ப்பின்மை, சுற்றாடல் மாசு, இயற்கை அனர்த்தம், போரும் பிணக்குகளும், அகதி முகாம் வாழ்க்கை, நவீன விஞ்ஞான தொழில்நுட்ப மாற்றங்கள், இயந்திரப் பொறிமயம் போன்றவை உள்ளன.


வளர்முக நாடுகளில் நிலவும் கோரப்பட்டினி, ஆரோக்கியமின்மை, தகுந்த சுகாதார நலச் சேவையின்மை போன்றன மக்களின் சுகாதாரத்திற்கும் ஆரோக்கியத்திற்கும் சவாலாக அமைந்துள்ளன.

உலக மக்களின் சுகநலம், போசாக்கு, தேகாரோக்கியம் என்பவற்றைக் கருத்திற் கொண்டு விதப்புரை செய்யப்பட்ட மருந்து வகைகள், சுகாதார உபகரணங்கள், வைத்தியசாலைகள், வைத்தியர்கள் மற்றும் தாதியர்களுக்கான நவீன பயிற்சிகள், சுகாதாரக்கல்வி, தொற்று நோய்த் தடுப்புக்கள் போன்ற பலவிதமான சேவைகளை உலக சுகாதார நிறுவனம் வழங்கி வருகின்றது. சுகாதார அமைச்சு அமைச்சு இலங்கை மக்களின் சுகநலத்திற்காகப் பலவித செயற்றிட்டங்களை வகுத்து நாட்டின் அபிவிருத்திக்கு ஏற்ற பிரஜைகளை உருவாக்குவதிலும் நோயற்ற சமூக மொன்றைப் படைப்பதிலும் அரும் பணிகளாற்றி வருகின்றது.

சமூக உட்கட்டமைப்புத்துறைகளில் எமது நாட்டின் சாதனைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இலங்கையில் சுகாதார நலக் குறிக்காட்டிகளான மகப்பேற்றுக் கால மரணம், சிசு மரண வீதம், வாழ்நாள் எதிர்பார்ப்பு வீதம் என்பன ஆண்டாண்டு தோறும் மேம்பாடடைந்து உலக நாடுகளுடன் ஒப்பிடத்தக்க மட்டத்தை அடைந்துள்ளன. தேசத்தின் சுகாதார மேம்பாடு குறித்து அரசு தொடர்ந்தும் தனது பங்களிப்பினை வழங்கி வருகின்றது. நாட்டில் அறுநூறுக்கு மேற்பட்ட வைத்தியசாலைகளும் எழுபத்தேழாயிரம் படுக்கைகளும் காணப்பட்டன. இது ஒவ்வொரு 1000 பேருக்கும் 3.7 படுக்கைகள் எனும் கணக்கில் காணப்பட்டது. ஒவ்வொரு மருத்துவருக்கும் 1155 பேர் என்ற ளவில் 18000 தகைமை பெற்ற மருத்துவர்களும் 650 ஆட்களுக்கு ஒரு தாதி என்றளவில் 32,000 தகைமை பெற்ற தாதிகளும் உள்ளனர். 2024 படுக்கைகள் கொண்ட நாட்டின் மிகப் பெரிய இராணுவ வைத்தியசாலை, அறுவைச் சிகிச்சை அறைகள், எம் ஆர். ஸ்கானிங், சத்திரசிகிச்சை ஆய்வு கூடங்கள், கதிரியக்கப் பிரிவு, மகப் பேற்றறை போன்ற நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் பல்வேறு வைத்தியசாலைகள் அமைந்திருக்கின்றன.

தெல்லிப்பழை வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு, நோயாளர்களை இனம் காணும் கூடங்கள், கதிரியக்கப் பிரிவு, மகப்பேற்று போன்ற நவீன வசதிகளுடன் அமைந்திருக்கின்றது. ராகமை போதனா வைத்திய சாலையில் விபத்துச் சேவைகள் மற்றும் பாரிய காயங்கள் சிகிச்சைத் தொகுதி , கராப்பிட்டிய வைத் தியசாலையின் நிலக்கீழான நேரியல் துகள்முடுக்கி இயந்திரம், கேகாலை மாவட்ட பொது வைத் தியசாலையில் நான்கு மாடி சத்திர சிகிச்சைக் கூடத் தொகுதி போன்றன அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சுகநல அபிவிருத்தித் திட்டங்களாகும்.

மேலும் சுமார் 5000 படுக்கைகளுடன் 95 ஆயுர் வேத வைத்தியசாலைகள் உள்ள அதேவேளை 21,505 ஆயுர் வேத வைத்தியர்களும்



காணப்படுகின்றனர்.

சிலவகைத் தொற்று நோய்கள் சுகாதாரத் துறைக்கு அச்சுறுத்தலாகின. மலேரியா, மூளைக் காய்ச்சல், சின்னமுத்து, இளம் பிள்ளை வாதம், தொழு நோய்கள் போன்ற தொற்று நோய்கள் நாட்டில் கட்டுப்படுத்தப்பட்டன. எனினும் விசர்நாய்க்கடி, டெங்கு காய்ச்சல், காசநோய் எச். ஐ. வி. போன்ற நோய்களிலிருந்து விடுபட சிறப்புக் கவனம் எடுக்க வேண்டியுள்ளது.

நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், இதயநோய், மூளை நரம்பியல் நோய், சிறுநீரக நோய், மன நோய் போன்றவை சுகாதாரத் துறைக்கு அச்சுறுத்தலாகின. அதிகரித்த விழிப்புணர்வும், தடுப்புநலக் கவனயீர்ப்புப் பணிகளும் இந்நோய்களை கட்டுப்படுத்த உதவின. இதேவேளை மதுபானம், புகையிலை ஆகியன சுகாதாரத் துறைக்கு அச்சுறுத்தலாக உள்ளன.

நாட்டு மக்களை ஆரோக்கியமிக்கவர்களாக மாற்றுவதில் அரசின் கொள்கைகள் பாராட்டுக்குரியவை. எமது உணவு முறைகள், பழக்க வழக்கங்கள் போன்றவற்றைச் சீராகக் கடைப்பிடித்து சுகதேசிகளாக இந்நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு உகந்த பிரஜைகளாக மாற இன்றைய சுகாதார தினத்தில் உறுதி பூணுவோமாக! நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதை மேலான கருத்திற் கொள்வோமாக!

கே.ஏ.அலீம்

# ஹீரோவுக்கும் வில்லனுக்கும் இரண்டு வேடங்கள்



சின்ன வயதில், பொலிஸாக இருந்தால் நாம் மனதில் நினைக்கிற நல்ல விடயங்களை, ஈஸியா நிறைவேற்றிவிடலாம் என்று நினைப்பேன்.

அதனால் காக்கி யூனிஃபார்ம்மீது தீராக் காதல். காலேஜ் முடித்ததும் எஸ்.ஐ செலக்‌ஷனுக்குப் போனேன். 'எஸ்.ஐ ஆனால் மேலதிகாரியை மீறி உன்னால ஒண்ணும் செய்ய முடியாது.

அதனால் ஐ.பி.எஸ் எக்ஸாம் எழுது' என்றார் உறவினர். அப்படி எழுதிய ஐ.பி.எஸ் முதன்நிலைத் தேர்வில் தோல்வி அடைந்தேன். ஆனாலும் பொலிஸ் மீதிருந்த மரியாதை குறையவே இல்லை.

ஒருநாள் இரவு சாலி கிராமத்தில் இரண்டு ரவுடிகளிடையே நடந்த சண்டையில் ஏரியாவே ரணகளமாக இருந்தது.

அப்போது அந்த ஏரியா இன்ஸ்பெக்டர் ஜீப்பில் வந்திறங்கியதுதான் தாமதம், ரவுடிகள் தலைதெறிக்கத் தப்பி ஓடினர்.

அந்த இன்ஸ்பெக்டர் ஒற்றை மனிதராக லட்டியைச் சுழற்றிய காட்சி, என் கண்ணுக்குள்ளேயே நிற்கிறது. ஆனால், என் அருகில் இருந்த ஒருவர், 'லட்டியும் சுத்துவார். சாராயம் காய்ச்சுறவங்கள்ட்ட இருந்து காசையும் கறப்பார்' என்று சொன்னார். அந்தச் சம்பவம் தான் 'சாமி' படக் கதையின் விதை!" - ஃப்ளாஷ்பேக் சொல்லும் ஹரி, 'சாமி-2' படத்தைச் செதுக்கிக்கொண்டிருக்கிறார்.

" 'சாமி' பட முடிவில் 'சாமி வேட்டை தொடரும்' என்று இரண்டாம் பாகத்துக்கான லீடு கொடுத்திருப்போம். ஆனால், அடுத்தடுத்து 'சிங்கம்' பட பாகங்களை இயக்குவதில் பரபரப்பாக இருந்ததால் 'சாமி'யின் அடுத்த பாகம் பற்றி யோசிக்க முடியாமல் இருந்தது.

விக்ரம் சாரும் வேறு மாதிரி கதையம்சம் கொண்ட சினிமாக்களில் நடிச்சுக்கிட்டிருந்தார். நீண்ட இடைவெளிக்குப் பிறகு சந்திச்சப்போ, 'சாமி-2' படத்தின் ஒன்லைன் சொன்னேன்.

கேட்டதும் விக்ரம் சாருக்கு ரொம்பவே சந்தோஷம். ஏனெனில், இதில் கதையும் கமர்ஷியலும் சரிவிகிதத்தில் இருக்கும். 'சாமி' படத்தின் கேரள விநியோகஸ்தராக இருந்த ஷிபு தமீன்தான் இப்போது 'சாமி-2' படத்தின் தயாரிப்பாளர்."

**'சாமி-2'-ல் 'ஆறுச்சாமி' கரக்டரில் என்ன ஸ்பெஷல்?"**

"அடாவடிகள் நிறைந்த நகரத்தை அதிரடி நடவடிக்கையால் சுத்தமான நகரமாக மாற்றியிருப்பார். வெளிநாடு சென்றுவிட்டு, ஐந்து ஆண்டுகள் கழித்துத் திரும்பிவந்து பார்த்தால், அந்த நகரம் முன்பு போலவே ரௌடியிஸமும் லஞ்சமும் நிறைந்து கிடந்ததால், கோபம் கொப்பளிக்கும் காவல்துறை அதிகாரியின் ஆவேச ஆக்‌ஷனே 'சாமி-2.' இதில் விக்ரம் சாருக்கு இரண்டு கெட்டப். முதல் பாகத்தில் பொறி பறக்கும் வசனங்கள் இருந்ததைப் போலவே, இந்தப் பாகத்திலும், 'நான் சாமி இல்லடா பூதம்', 'நான் ஆறுச்சாமி இல்லடா... ஆறு பேய், ஆறு பிசாசு, ஆறு பூதம்', '15 வருஷத்துக்கு முன் சாமி வேஷம் போட்டாலே சமாளிக்கிற புத்தி உங்களுக்கு இருந்துச்சு.


இப்ப உங்க கிரிமினல் புத்திக்குப் பதிலடி கொடுக்கணும்னா பூதமா, பேயா, பிசாசா வேஷம் போட்டாதான் உங்களைக் கருவறுக்க முடியும்'னு பட்டையக் கிளப்பும் பட்டாசு வசனங்கள் இருக்கு."

**"கீர்த்தி சுரேசுக்கு என்ன மாதிரியான கரக்டர்?"**

"வீட்டில் பொய் சொல்லிவிட்டு, கிரெடிட் கார்டைத் தேய்த்துவிட்டு யாருடைய துணையும் இல்லாமல் அமெரிக்காவுக்கு விமானத்தில் பறக்கிற தைரியமான பெண்.


வழக்கமாக ஹீரோவின் நண்பர்களாகத்தான் காமெடி நடிகர்கள் வருவார்கள். இதில் வித்தியாசமாக கீர்த்தி சுரேஷின் நண்பராக சூரி வருகிறார்.

விக்ரமைக் காதலிக்கவைக்க சூரி அள்ளிவிடும் ஐடியாக்கள் செம கலாட்டாவாக இருக்கும்.



**"'சாமி-2'-ல் இருந்து த்ரிஷாவை நீக்கியது ஏன்?"**

"உங்களிடம் யாரோ தவறான தகவல் சொல்லியிருக்கிறார்கள். இதில் த்ரிஷா நடிக்கிறார். விரைவில் படப்பிடிப்பில் கலந்துகொள்வார். அவர் நடிப்பதற்காக அட்வான்ஸ் கொடுத்து கால்ஷீட் திகதிகளும் வாங்கி வைக்கப்பட்டிருக்கின்றன. இனிமேல்தான் அவர் நடிக்கும் காட்சிகளைப் படமாக்க வேண்டும்."



**" மீண்டும் பாபிசிம்ஹா வில்லனாகிவிட்டார்போல..?"**

" 'நேரம்', 'ஜிகர்தண்டா' படங்களைப் பார்த்த நாளிலிருந்தே, 'இவரை என் படத்தில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்' என்று நினைத்தேன். அப்படி ஒருநாள் பாபியைச் சந்தித்து 'சாமி-2' கதையைச் சொன்னேன். திடீரென எழுந்தவர், 'இந்தப் படத்தை நான் பண்றேன், நீங்க பின்றீங்க சார்' என்றார் உற்சாகமாக. அந்த நிமிடத்திலிருந்தே கெட்டப்புக்காகத் தாடிவளர்க்க ஆரம்பித்தார்.

இப்போது வேறொரு கெட்டப்புக்காகத் தயாராகி வருகிறார். விக்ரம் சாருக்கு எப்படி ரெண்டு கெட்டப்போ, அதே போல பாபி சிம்ஹாவுக்கும் ரெண்டு கெட்டப்புகள்."

**"சூர்யாவுடன் 'சிங்கம்-4' எப்போது?"**

"அடுத்து சூர்யா சாரைத்தான் இயக்குகிறேன். ஆனால், அது நிச்சயமாக 'சிங்கம்-4' இல்லை. வேறு ஒரு தளத்தில், களத்தில் இருவரும் சேர்ந்து பயணிக்கப் போகிறோம். ஆனால், 'சிங்கம்' வரிசைப் படங்களைத் தொடர்ந்து பண்ணும் எண்ணமும் உண்டு."

**"உங்களால் அறிமுகம் செய்யப்பட்ட நயன்தாரா, இப்போது லேடி சூப்பர் ஸ்டார். அவரை மறுபடியும் உங்கள் படத்தில் நடிக்க வைப்பீர்களா?"**

" 'ஐயா'வில் ஏகப்பட்ட சீனியர் ஆர்ட்டிஸ்டுகள் நடித்ததால், புதுமுக நடிகையை ஒப்பந்தம் செய்வதில் எனக்கு விருப்பமில்லை. ஆனால், நயன்தாரா போட்டோவைப் பார்த்தவுடனேயே கேரளாவுக்குப் புறப்பட்டுவிட்டேன். அப்போது அவர் மோகன்லாலுடன் ஒரு படத்தில் நடித்துக் கொண்டிருந்தார்.

ஷூட்டிங் பிரேக்கில் அவரிடம் பேசினேன். முதலில், அவர் தமிழில் பேசியதுமே எனக்கு சந்தோஷம். அந்த நிமிடத்திலேயே அவர் 'ஐயா' படத்துக்குள் வந்துவிட்டார். தமிழ் சினிமாவில் நயன்தாராவின் வளர்ச்சி அபாரமானது.

'நானும் ரவுடி' படத்தில் நயன்தாரா நடிப்பைப் பார்த்து அசந்துபோய் விட்டேன். 'மாயா', 'அறம்' என்று நடிப்பின் உச்சத்துக்குப் போய்விட்டார்.

இப்போதுகூட, என் படத்தில் ஒப்பந்தமானால் அவரை 'ஐயா' படத்தைப்போல பாவாடை, தாவணியில்தான் நடிக்க வைப்பேன்."

**"நீங்கள் ரஜினி, விஜயை இயக்கும் புராஜெக்ட்ஸ் தள்ளிப்போய்க்கொண்டே இருக்கிறதே?"**

" 'ஐயா' படத்தின் கதையை முதலில் ரஜினி சாருக்குத்தான் சொன்னேன். அவருக்கும் கதை பிடித்திருந்தது. ஆனால் அப்போது அவர் வேறொரு படத்தில் ஒப்பந்தமாகியிருந்தார்.

அடுத்து அவரை மனதில் வைத்து உருவாக்கியதுதான் 'வேல்' படம். சூர்யா நடித்து வெளியான அந்தப் படத்தைப் பார்த்த ரஜினிசார், 'இந்தக் கதையை என்னிடம் ஏன் சொல்லவில்லை?' என்று செல்லமாகக் கோபித்துக்கொண்டார்.

ரஜினி சார் எப்போது கூப்பிட்டாலும் அவருக்காக நான் காத்திருப்பேன். இதேபோல விஜய்சாருடனும் தொடர்பில் இருக்கிறேன். நானும், அவரும் சேர்ந்து பணியாற்றும் திட்டம் பல வருடங்களாகவே இருக்கிறது.

'சிங்கம்-3' க்கு முன்பே கதையை ரெடி பண்ணச் சொன்னார். அப்போது 'சிங்கம்-2'-ல் பிஸியாக இருந்ததால் நாங்கள் இணைவது தள்ளிப்போனது. 'சாமி-2' முடித்த பிறகு விஜய் சாருக்குக் கதை சொல்லலாம் என்று எண்ணியிருந்தேன்.

அதற்கடுத்து சூர்யா படத்தை இயக்குவதற்கு இப்போதே ஒப்பந்தமாகி விட்டது. நானும் விஜய் சாரும் இணையும் செய்தி விரைவில் வெளிவரும்.

**"விக்ரமையும் அவரின் மகன் துருவையும் ஒரே படத்தில் இயக்கும் எண்ணம் இருக்கிறதா?"**

" 'சாமி-2' காதல் காட்சியில் அரைக்கைச் சட்டை அணிந்துகொண்டு விக்ரம் நடித்துக்கொண்டிருந்தார். அப்போது நான் அவரை 'சீனியர் துருவ்' என்று அழைக்க, யூனிட்டே சிரித்துவிட்டது. விக்ரம் சார் என்னை செல்லமா அடிக்கப் பாய்ந்தார்.

விக்ரம் சாரையும், துருவையும் இணைத்து இயக்குகிற அளவுக்கு நான் அவ்வளவு பெரிய கிரியேட்டர் கிடையாது என்பது என் எண்ணம்."

# அரசியல்வாதிகளுக்கு மறந்து போன சங்கதி!

அண்மையில் நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் என்பது உள்ளூராட்சி சபைகளின் நோக்கங்களை மறந்த தேர்தலா என்பது கேள்விக்குறியாகியுள்ளது. உள்ளூராட்சி சபைகளில் இருக்கும் குறைகளைப் பற்றி கவனத்தில் கொள்ளாமல் வெறுமனே தேசிய அரசியலுக்காக குரல் கொடுத்த அரசியல் மேடைகளையே எம்மால் காணக்கூடியதாக இருந்தது. உள்ளூராட்சித் தேர்தலும்,தேர்தலின் முடிவுகளும் இலங்கை யின் அரசியலில் மிகப் பெரியளவில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. இலங்கையில் நிலையற்ற அரசியல் சூழலும் இதனால் உருவாகியது என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

இலங்கை வறுமை ஆராய்ச்சி நிலையம் 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் மற்றும் இரண்டாம் வாரங்களில் வெளிவந்த தேர்தல் தொடர்பான செய்திகளின் அடிப்படையில் பகுப்பாய்வு ஒன்றை நடத்தியது. இந்தப் பகுப்பாய்வுக்கான நோக்கம் என்னவெனில் உள்ளூராட்சித் தேர்தலில் உறுப்பினர்களும் ஊடகங்களும் இலங்கையின் வறுமை தொடர்பாகவும் அபிவிருத்தி தொடர்பாகவும் எந்தளவு கவனம் செலுத்துகின்றன என்பதை ஆராய்வதே ஆகும்.

மக்களின் அபிவிருத்தியை முன்னுரிமைப்படுத்தும் இலங்கை வறுமை ஆராய்ச்சி நிலையம் நடத்திய இந்த பகுப்பாய்வின் மூலம் தெரியவந்தது என்னவெனில், உள்ளூராட்சித் தேர்தல் அறிக்கைகளில் பெரும்பாலானவை உள்ளூராட்சி அதிகார சபைகளின் குறைகள், அபிவிருத்திகளில் முன்னுரிமை செலுத்தவில்லை என்பதாகும்.

அத்துடன் பத்திரிகைகள் முன்னுரிமை வழங்கியது உள்ளூராட்சி தேர்தலுக்கு அன்றி தேசிய அரசியலுக்கே ஆகும். முக்கியமாக சிங்களப் பத்திரிகைகள் மத்திய வங்கியில் நடந்த






ஊழலைப் பற்றியும், நாடளாவிய அளவில் நடக்கும் அல்லது நடந்த ஊழல்கள் தொடர்பாகவும் பிரஸ்தாபித்தன. இலங்கையின் கிராமிய அபிவிருத்தி மற்றும் அதில் காணப்படும் குறைகள் பற்றி மிகக் குறைந்தளவிலேயே அனைவரின் கவனமும் இருந்தது. இன்னொரு கட்சியை அல்லது கட்சி உறுப்பினரைத் தாக்கிப் பேசிய வார்த்தைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தது.

வாக்களிப்பதில் வாக்காளர்களின் உரிமை தொடர்பிலும்,வாக்களிப்பு என்பது ஜனநாயக முறைக்கு எவ்வளவு முக்கியமென்பது பற்றியும் எழுதப்பட்ட விசேட கட்டுரைகளை பத்திரிகைகளில் காணக் கூடியதாக இருந்தது. அத்துடன் தேர்தல் முறையை பற்றிய பொதுவான செய்திகளும் வெளியாகி இருந்தன. ஆனால் புதிய தேர்தல் முறையைப் பற்றியும்,புதிய தேர்தல் முறையின் கீழ் உறுப்பினர்கள் தெரிவாகும் முறையைப் பற்றியும், பெண் உறுப்பினர்களை தெரிவு செய்வதைப் பற்றியும் குறைந்தளவில் கவனம் செலுத்தியிருந்தனர்.

உள்ளூராட்சி சபைகளைத் தாண்டி, தேசிய அரசியலில் மாற்றத்தை எதிர்பார்த்ததைக் காணக் கூயதாக இருந்தது. இனப் பிரச்சினை தொடர்பிலும், மாற்றங்களுக்கான அவசியம் தொடர்பிலும் முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தது. அத்துடன் தேசியஅளவில் நடந்த ஊழல், மோசடிகள் தொடர்பாக அதிகளவிலான பார்வை இருந்தது. பொதுச் சேவைகள் தொடர் பாகவும் உள்ளூராட்சியின் எதிர்காலத் திட்டங்கள் மற்றும் மாற்றங்கள் தொடர்பாக வும் குறைந்தளவிலான பார்வை இருந் ததைக் காணக்கூடியதாக இருந்தது.

பத்திரிகைகளில் தேர்தல் பிரசார முறை தொடர்பாக கவனம் செலுத்தியிருந்தனர். முக்கியமாக தேர்தல் சட்டங்களை மீறியமை,வேட்பாளர்கள் மீது தாக்குதல் மேற் கொண்டமை தொடர்பாகவும் அதிக கவன த்தை பத்திரிகைகள் செலுத்தியிருந்தன. ஒவ்வொரு கட்சிகளிலும் உள்ள குறைகளை சுட்டிக்காட்டுவது குறிக்கோளாக இருந்தது. பிரதேச வேட்பாளர்களை விட தேசிய மட்டத்திலுள்ள தலைமைகள் மீது அதிக கவனம் செலுத்தப்பட்டது.

தேர்தல் தொடர்பான அறிவை அல்லது விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவது, தேர்தல் சட்டங்களைப் பேணுவது மற்றும் வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்துவது பத்திரிகைகளில் நோக்கமாக இருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. இம்முறை புதியமுறையின் கீழ் நடந்த தேர்தல் ஆகும். இருப்பினும் அம் முறையைப் பற்றிய முழுமையான தகவல்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

இந்தத் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் மக்களுக்காக பணிபுரிய வேண்டியவர்களாவர். ஆனால் சமீபத்தில் நடந்த தேர்தலில் உறுப்பினர்கள் வறுமை தொடர்பாகவோ அல்லது சமத்துவமின்மை தொடர்பாகவோ இல்லையெனில் செய்ய வேண்டிய அபிவிருத்திகள் தொடர்பாகவோ பெரியளவில் கவனம் செலுத்தவில்லை என்றே கூற முடியும்.

2017 ஆம் ஆண்டை வறுமை ஒழிப்பு ஆண்டாக இலங்கை அரசாங்கம் அறிவித்திருந்தது. ஆனால் இது தொடர்பாக பிரதான கட்சிகள் இரண்டும் மிகவும் குறைந்தளவே கவனம் செலுத்தியிருந்தன. வறுமையை ஒழிப்பதற்காக எதிர்காலத் திட்டங்கள் பற்றிய அறிவுரைகள் வழங்கப்படவில்லை.

இலங்கை போன்ற நாடுகளில் அபிவிருத்தியைப் பேண வேண்டுமாயின் அடிமட்ட வறுமையை ஒழிப்பது முக்கியம். உள்ளூராட்சி சபைகளினால் திட்டங்கள் மேற்கொள்வதும் மிகமுக்கியம்.

அனுஷா சிவலிங்கம்

# காவிரி நீர் பிரச்சினை நீடிக்க யார் காரணம்?

காவிரி நதிநீர்ப் பகிர்வு தொடர்பாக உச்ச நீதிமன்றம் இறுதித் தீர்ப்பு வழங்கி ஆறு வாரங்களுக்குப் பின்னர், மீண்டும் அதே பிரச்சினை உச்ச நீதிமன்றத்திடம் சென்றிருக்கிறது. இது துரதிர்ஷ்டவசமானது. இதற்கு முக்கியக் காரணம் மத்திய அரசின் மெத்தனப் போக்குதான். உச்ச நீதிமன்றம் பெப்ரவரி 16-ல் தீர்ப்பு வழங்கியும் அதை அமல்படுத்தாமல் நீதிமன்றத்தை மத்திய அரசு அவமதித்துவிட்டது என்று தமிழக அரசு வழக்கு தொடுத்திருக்கிறது. இந்நிலையில், மேலும் மூன்று மாதங்கள் அவகாசமும் கேட்டிருக்கிறது மத்திய அரசு. கர்நாடகத்தில் மே 12-ல் சட்ட மன்றத் தேர்தல் நடைபெறும் நிலையில், இப்பிரச்சினையைக் கையிலெடுக்க மத்திய அரசு விரும்பவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

அதுமட்டுமல்லாமல், கூடுதல் அவகாசம் வாங்கிவிடலாம் என்ற நம்பிக்கையில், இத்தீர்ப்பு தொடர்பாக சட்டப்பூர்வமாகச் செய்ய வேண்டிய எதையுமே மத்திய அரசு செய்யவில்லை. தீர்ப்பு வெளியாகி இத்தனை நாட்களுக்குப் பிறகு, உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியுள்ள 'ஸ்கீம்' என்பது 2007-ல் நடுவர் மன்றம் தனது இறுதித் தீர்ப்பில் குறிப்பிட்ட மேலாண்மை வாரியம், ஒழுங்காற்று அமைப்பு பற்றியதா அல்லது வேறு ஏதாவதா என்று விளக்கம் வேறு கேட்கிறது மத்திய அரசு.

காவிரி நடுவர் மன்றம் இறுதித் தீர்ப்பில் கூறியது, உச்ச நீதிமன்றம் சமீபத்திய தீர்ப்பில் தெரிவித்தது ஆகியவை தொடர்பாக கர்நாடகத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் வெவ்வேறான புரிதல்கள் இருக்கின்றன என்பதில் சந்தேகம் ஏதுமில்லை. 'நடுவர் மன்றம் குறிப்பிட்டது காவிரி மேலாண்மை வாரியம், காவிரி நதிநீர் ஒழுங்காற்றுக் குழு பற்றித்தான் என்பதால் அவற்றை ஏற்படுத்துவதைத்தான் உச்ச நீதிமன்றம் தனது 'ஸ்கீம்' என்ற வார்த்தையிலும் தெரிவித்தது' என்பது தமிழகத்தின் கருத்து. 'உச்ச நீதிமன்றம் வாரியம் குறித்து எதையுமே சொல்லவில்லை, மத்திய அரசு புதிதாகப் பிரச்சினையைத் தீர்க்கும் அமைப்பை ஏற்படுத்துவது தொடர்பாகத்தான் 'ஸ்கீம்' என்றது' என்பது கர்நாடகத்தின் வாதம். தமிழகத்தின் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்பான மனுவை விசாரணைக்கு ஏற்ற உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ராவும், தாங்களுடைய தீர்ப்பில் 'ஸ்கீம்' என்று கூறியது மேலாண்மை வாரியத்தைப் பற்றியல்ல என்று விளக்கம் தந்திருக்கிறார். அதேசமயம் காவிரியில் தமிழ்நாட்டுக்கு உரிய பங்கு கிடைக்காமல் போய்விடாது என்று உறுதிமொழியும் அளித்திருக்கிறார்.



இந்த ஆறு வார காலத்தில் நிபுணர்களுடன் ஆலோசனை கலந்துவிட்டு நான்கு மாநிலங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவை ஏற்படுத்தித் தண்ணீர் பகிர்வுக்கு ஒரு ஏற்பாட்டைச் செய்து முடித்திருக்கலாம்.

நேர்மையாகவும் நடுநிலையாகவும் தண்ணீர் எல்லா மாநிலங்களுக்கும் உரிய வகையில் பகிர்ந்தளிக்கப்படுவது முக்கியம். உச்ச நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பு மதிக்கப்படாமல் நிராகரிக்கப்பட மத்திய அரசு துணை போகக் கூடாது. மாறாக அது அமலாவதற்குத் துணை நிற்க வேண்டும்!

நன்றி: த ஹிந்து

# facebook ஃபர்ஸ்ட் ரேங்க்



(சென்றவார தொடர்ச்சி)

தெளிந்து உட்காரும்போது சோதாவும் மாலதியும் என்னையே பார்த்துக்கொண்டிருந்தனர். மாலதி தான் குடிக்கத் தண்ணீர் தந்தாள். "இப்படியா அடிக்கிறது? இங்க பாரு செவந்து போச்சு கன்னம்" என்று பச்சாதாபப்பட்டாள்.

"இவன் பண்ண காரியத்துக்கு..." என்று பற்களை நறநறவென்று கடித்தான் அந்த உத்தமன்.

என் கன்னத்தைத் தடவிக் கொண்டே, "இனிமே இப்படிப் பண் ணக்கூடாது சரியா" என்று மாலதி சொல்லிக்கொண்டிருக்கும் போதே, "வாடா போலாம் உங்க வீட்டுக்கு" என்று என் கையைப் பிடித்துத் தரதர வென அவன் வீட்டிற்கு இழுத்துச் சென்றான். "கெடுத்துக் குட்டிச்சுவர் ஆக்கிட் டியே ராஸ்கல்!"

"அடுத்த தடவை ஒழுங்கா பண்ணிடுறேண்ணா"

"தொர, நீங்க பண்ணதே போதும். போய்டு!" "அந்த ஃபர்ஸ்ட் ரேங்க் ட்ரிக். . ." "பல்லப்பேத்துடு வேன் போய்டு. . ."

அதன் பிறகு சோதாவிடம் அவ்வளவாக பேசவேயில்லை. என் ராட்டினம் சுக்குநூறாக உடை ந்துபோனது. முதல் ரேங்க் கைச் சந்திக்காமலேயே நான் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டேன். அவ னுக்கு பெங்களூரில் வேலை கிடைத்திருப்பதாக ஐயர் சொன் னார். கடைசியாக சோதாவை அவன் கல்யாணத்தில் பார்த்தது. மீசையை எல்லாம் வழித்துக் கொண்டு வடநாட்டுக்காரன் மாதிரி இருந்தான். அதன் பின், இதோ காரைவிட்டு இறங்கி, குழந்தையைத் தூக்கிக்கொண்டு வருகிறானே இப்போதுதான் பார்க்கிறேன்.

நாலடி தூரத்தில் அவன் மனைவி நடந்து வந்தாள். எல்லோரையும் பார்த்து மெதுவாகத் தலையை ஆட்டினாள். கண்ணாடிப்பெட்டிக் குள் கிடத்தியிருந்த பார்வதி அம் மாளைத் தரிசித்துவிட்டு ஓரமாய் ஒதுங்கி நின்றுகொண்டான். குழந்தை காரணம் புரியாமல் அழுது கொண்டிருந்தது. ஐயர் கண்ணா டிக் குடுவையின் பக்கத்தில் குத் துக்காலிட்டு உட்கார்ந்திருந்தார்.

மரணம் ஜனித்த வீடுகளில் நேர மும் மரணித்துவிடுகிறது. அம் மாளின் கடைசி ஊர்வலத்தில்,




வஸ்துக்களின் துணையோடு சிலர் ஆடிக்கொண்டிருந்தனர். சோதா கயிற்றில் கட்டப்பட்டிருந்த மண் பானையைத் தூக்கிக்கொண்டு முன்னால் சென்றுகொண்டிருந் தான். சலனம் இல்லா விழிகளோடு ஐயர் நடந்து வந்தார். எல்லாம் முடிந்து வீட்டிற்குள் நுழையும் போது மணி பத்தாகிவிட்டது.

ஐந்தாம் நாளே காரியம் வைத் திருந்தார் ஐயர். வெகுசிலரே வந்தி ருந்தனர். நானும் அப்பாவும் சென்ற போது புகை சமாச்சாரங்கள் முடி வடைந்திருந்தன. வெளியே போடப் பட்டிருந்த வாடகை சேர்களில் சோதாவும் அவன் மனைவியும் இருந்தார்கள். எங்களைப் பார்த்த வுடன் ஐயர், அப்பாவிடம் வந்து ஏதோ சொன்னார்.

சோதாவிற்கு எதிரே இருந்த சேரில் உட்கார்ந்துகொண்டே, "ஏன்டா சோதா, உங்க அப்பாவை யும் கூட்டிட்டுப் போயிடு பெங்களூ ருக்கு. ஏன் சொல்றேன்னா, இங்க ஒத்தையா கெடக்குறதுக்கு உன் கூட இருந்தா கொஞ்சம் சந்தோஷ மாய் இருப்பாரு பாரு" என்றார் அப்பா.

ஐயரை முறைத்துவிட்டு, பின் அப்பாவிடம் திரும்பி, "அது சரியா வராது. வாடகை வீடு. எங்க மூணு பேருக்கே சிரமமா இருக்கு. அதோட, இவர் அங்க வந்து என்ன பண்ணப்போறார்? பேசாம இங் கயே இருக்கட்டும். அங்க அவ ருக்கும் கஷ்டம், எங்களுக்கும் கஷ்டம்" என்றான் கடுப்பாக. "அதான் மாசாமாசம் பணம் அனுப்பு றேன்னு சொல்றேன்ல, அப்புறம் என்னவாம் இவருக்கு?"

"எவ்வளவு?" "2000." "போதுமா?"

"ஏன்? ஒரு ஆளுக்குத் தாராளம்!"

அந்தச்சத்தம்... ஐயோ! அப்பா பல்லைக்கடிக்கிறார். சோதாவின் பின்னால் கையை மார்பின் குறுக்கே கட்டிக்கொண்டு அப்பா வைப் பார்த்து இடவலமாகத் தலையை ஆட்டினார் ஐயர்.

மண் தரையில் சோதாவின் மகன் விளையாடிக்கொண்டி ருந்ததை அவன் கால் இடறிக் கீழே விழுந்து வீலிடும் வரை யாரும் கவ னிக்கவில்லை.

சோதாவும் அவன் மனைவியும் குழந்தையைத் தூக்க ஓடினார்கள். ஞானம் ஐயர் மெதுவாக அப்பா விடம் வந்து, "வேணாம் விட்ரு ங்கோ மாப்ள" என்றார் மெது வாக. அவரின் குரல் உடைந்திரு ந்தது.

ஞானம் ஐயருக்கும் அழுகை வருமா? துண்டைக் கண்களில் ஒற்றிக் கொண்டு உள்ளே சென்று விட்டார்.

குழந்தையின் உதடெல்லாம் மண். தலையில் ஒட்டியிருந்த தூசிகளைத் தட்டிக்கொண்டே, "சே ஹலோ டு தெம்" என்றான் சோதா, குழந்தையைப் பார்த்து.

"ஹலோ" என்று அழகாய் வாயைச் சுழித்தது குழந்தை.

அதன் கன்னத்தைக் கிள்ளிக் கொண்டே, "உம் பேரு என்ன?" என்றார் அப்பா. "அபினவ்." "ஸ்கூல்ல சேர்த்திட்டியாடா சோதா?"

"என்ன இப்படிக் கேட்டுட் டீங்க... செகண்ட் ஸ்டாண்டர்டு போறான்." "நல்லா படிக்கணும் அபினவ், சரியா?" என்றார் அப்பா.

குழந்தையை சோதாவிட மிருந்து வாங்கிக்கொண்டே



அவன் மனைவி, "படிப்பில அப் படியே அவங்க அப்பா மாதிரி, எப்பவும் ஃபர்ஸ்ட் ரேங்க்தான்" என்றாள். சோதா பெருமையாய்ச் சிரித்தான்.

(முற்றும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1379

Search for people, places and things | Nagendram Home

### நந்தினி

தோல்வி என்பது வாழ்க்கையில் கற்றுத் தரும் பாடங்களில் ஒன்றே தவிர அதில் அவமானம் ஏதும் இல்லை...!



### வைஸ்னவி

அம்மாவின் அன்பு தோசை மாதிரி
அப்பாவின் அன்பு தோசைக்கல் மாதிரி
தோசையின் ருசியை அறிகிற பலருக்கு தோசைக் கல்லின் தியாகத்தை உணர முடிவதில்லை



### லோகிதா

மனைவி கேள்வி கேட்கும் போது கணவன் அமைதியாய் இருப்பது பயத்தால் அல்ல பொய் சொல்ல யோசிக்கிறான்னு அர்த்தம்



### சுதர்சன்

மற்றப் பசங்களோட சேர்ந்து கெட்டுப் போய்டாதேனு சொன்னா அது மம்மி...



மத்த பசங்களையும் உன்கூட சேர்ந்து கெடுத்துடாதேனு சொன்னா அது டாடி

### நந்தன் நந்தா

காலைல 7 மணிக்கு எழும்பி வேலைக்குப் போறவன் மனுசன்



10 மணிக்கு எழும்பி இன்னைக்கு என்ன நாள் என்று யோசிக்கிறவன் பெரிய மனுசன்

### பிரணவன்

டாக்டர் நீங்க சொன்னமாதிரி தினமும் அவ்வா சாப்பிடுகிறன். தொப்பைதான் குறையமாட்டேங்குது



நாசமாப் போச்சு, நான் சொன்னது அவ்வா சாப்பிடுங்கன்னு...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 127

## நார்ச்சத்துள்ள உணவுகள்



- உணவில் உள்ள சமிபாடடையாத காபோவைதரேற்றுக்கள் மற்றும் காபோவைதரேற்று அற்ற பொருள்கள் நார்ச்சத்துக்கள் ஆகும்.
- காரணம் மனித சமிபாட்டுத்தொகுதியில் நார்ச்சத்துக்களை சமிபாடடையச் செய்யக் கூடிய நொதியங்கள் சுரக்கப்படுவதில்லை.
- இவை 3 வகைப்படும்.
- செலுலோச நார்கள்
- செலுலோச அற்ற பல்சக்கரைட்டு
- காபோவைதரேற்று அற்ற நார்கள்
- நாள் ஒன்றுக்கு ஒருவர் எடுக்க வேண்டிய நார்ச்சத்தின் அளவு 20-25 கிராம் ஆகும்.
- நார்ச்சத்து காணப்படும் உணவு வகைகள்.

முழு கோதுமை மா (ஆட்டா மா), தவிடு, பியர்ஸ்பழம், போஞ்சி, பருப்பு வகை, கோவா, இலை வகைகள்.

- நார்ச்சத்தின் பௌதிக இயல்புகள்.

நீரை உறிஞ்சும் தன்மை.
இணையும் இயல்பு

**நார்ச்சத்தால் அடையும் நன்மைகள்**

- உணவுக்கான கனவளவை அதிகரிக்கச் செய்யும்.
- நீரை அகத்துறிஞ்சுவதால், இலகுவாக மலம் கழிக்க உதவும்.
- உணவுக் கால்வாயின் சுற்றுச் சுருக்க அசைவைத் தூண்டும்.
- நீரினை அகத்துறிஞ்சுவதால் . இரைப்பையை விட்டு உணவு வெளியேறும் நேரத்தை அதிகரிக்கும். இதனால் மீள பசி ஏற்படுதலைக் குறைக்கும்.



- கொலஸ்ரோலுடன் இணைவதால் உணவுக்கால்வாயில் கொலஸ்ரோல் அகத்துறிஞ்சப்படுவதைக் குறைக்கும்.
- பித்த உப்புகளும் இணையும் தன்மையுடையதால் பித்த உப்புக்கள் மீள அகத்துறிஞ்சப்படுவதைத் தடுக்கும்.

இதனால் கொலஸ்ரோல் பித்த உப்பு உற் பத்தியில் பயன்படும் அளவை அதிகரிக்கச் செய்யும்.




**நார்ச்சத்து அதிகளவு உட்கொள்வதால் ஏற்படும் பாதகமான விளைவுகள்.**

- சில உலோக அயன்களுடன் இணையும் தன்மை உடையதால் அந்த உலோக அயன்கள் உணவில் இருந்து அகத்துறிஞ்சப்படுவதைத் தவிர்க்கும்.

(உ+ம்) இரும்பு, நாகம் ,கல்சியம் போன்ற உலோக அயன்கள்.

**நார்ச்சத்தினை அதிகளவு உணவில் சேர்த்துக் கொள்வதனால் பெறப்படும் பயன்கள்.**

1. சலரோகத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க உதவும்.
2. அதிகரித்த உடல் பருமனைக் குறைக்க உதவும்.
3. இதயத்துக்குக் குருதி வழங்கும் குழாய்களில் கொலஸ்ரோல் படிவதைத் தவிர்க்கும்.



4. நேர்குடலில் நோய்கள் ஏற்படுவதைத் தவிர்க்கும்.
5. புற்றுநோய்க்கு எதிரான இயல்பு உடையது.

Dr.சி.டிஷாந்

## தாம்பத்திய உறவில் நாட்டம் குறைவடைகிறதா?



**கேள்வி:** எனது வயது 28 திருமணமான தனியார் நிறுவனப் பெண் ஊழியர். எனது கணவர் 35 வயது பஸ் ஓட்டுநர். எங்களுக்குத் திருமணமாகி 1.5 வருடமாகியும் குழந்தைப் பாக்கியமில்லை. எனது கணவருக்குத் தாம்பத்திய உறவில் ஈடுபடும் நாட்டம் மிகக் குறைவாகவேயுள்ளது. இது சம்பந்தமான உங்கள் ஆலோசனையையும் தீர்வையையும் எதிர்பார்க்கிறேன்.

**பதில் :** உடலுறவில் அல்லது தாம்பத்திய உறவில் நாட்டம் குறைதல் நாட்டமின்மை ஏறத்தாழ 15-16 வீதமான ஆண்களைப் பாதிக்கும் ஒரு பிரச்சினையாகும். இது பாலியல் ரீதியான திருப்தி. மகிழ்ச்சி மற்றும் பாலியல் தூண்டல் இன்மையால் ஏற்படும் பாலியல் செயற்றிறனின்மையாகும்.

இந்தப் பிரச்சினை ஆணின் தன்னம்பிக்கையையும் கணவன். மனைவி இடையிலான உறவையும் சீரழிக்கின்றது.

பாதிக்கப்பட்டவர்கள் இந்தப் பிரச்சினையை வெளிக்காட்டுவதில் வெட்கத்தையும் தர்மசங்கடமான நிலையையும் எதிர்நோக்குவதால் பெரும்பாலும் நேரடியாக வெளிப்படுத்துவதில்லை.

உடற்றொழிலியல், மருத்துவம், மனோவியல் மற்றும் சமூகக் காரணிகள் பல இந்தப் பிரச்சினையை ஏற்படுத்துவதாக இனங் காணப்பட்டுள்ளன.

ஆண்குறி விறைப்படையாத தன்மை பிரதான காரணிகளில் ஒன்றாகும். ஆணின் வயது அதிகரிக்க இதன் பாதிப்பும் அதிகரிக்கின்றது. சில வகையான மருந்துகள் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாகின்றன.

ஆண்களுக்கு உடலுறவின் போது ஏற்படும் செயற்பாடு பற்றிய பதகளிப்பும் விரைவான உச்சக்கட்டமும் உடலுறவின் மீதான நாட்டத்தைக் குறைக்கின்றன.

மன அழுத்தமும் குறைவான சுயமதிப்பீடும் இந்தப் பிரச்சினையை மேலும் மோசமாக்குகின்றன. புற்றுநோய், இருதய நோய், உயர் குருதியமுத்தம், நீரிழிவு போன்ற நோய்கள், தைரொயிட் சுரப்பிப் பிரச்சினை, பிட்டியூட்டரி (Pituitary gland) கட்டிகள் போன்றவையும் உடலுறவின் மீதான நாட்டம் குறையக் காரணிகளாகின்றன.

நீண்டகால மதுப்பாவனையும் அதிகளவாக மது உள்ளெடுத்தலும் உடலுறவில் ஏற்படும் திருப்தியையும் செயற்பாட்டையும் மோசமாகப் பாதிக்கின்றன.

மருந்துகளில் மனஅழுத்தத்துக்குப் பயன்படுத்தப்படும் மருந்துகள், உயர் குருதியமுத்த மருந்துகள், போதை மருந்துகள் போன்றவை உடலுறவில் நாட்டமின்மையை ஏற்படுத்துகின்றன.

கணவன் - மனைவிக்கிடையிலான உறவுநிலை சுமுகமாயிருத்தல் (மகிழ்ச்சி ) உடலுறவின் மேலான நாட்டத்தை அதிகரிக்கும். கோபம், ஏமாற்றம், கவலை நாட்டத்தைக் குறைக்கும்.

கணவன் - மனைவிக்கிடையிலான நீண்டகாலப் பிரிவும் இந்தப் பிரச்சினையை ஏற்படுத்தும். புரிந்துணர்வின்மையும் குழந்தைப் பிறப்பின் பின்னரான உறவுநிலை மாற்றங்களும் கவனத்துக்குரியவை.

உடலுறவின்போது மனைவிக்கு ஏற்படும்நோ, அதிகரித்த வயது வேறுபாடு, சில குடும்பக்கட்டுப்பாட்டு முறைகள் (மாத்திரை) வேலைப்பளு, களைப்பு, கலாசார ரீதியான மூடநம்பிக்கைகள் போன்றவையும் உடலுறவு மீதான நாட்டத்தைக்குறைக்கும் ஏனைய காரணிகளாகும்.

இந்தப் பிரச்சினையை நிவர்த்தி செய்ய உங்கள் கணவருடன் வைத்தியரை அணுகி ஆலோசனை பெறவும்.

உறவுமுறை தொடர்பான பிரச்சினைகளை பாலியல் சிகிச்சை (Sex therapy) மனவள ஆலோசனை மூலம் நிவர்த்தி செய்யலாம்.

வேலைப்பளு, களைப்பு, தொழில், பணம் தொடர்பான கவலைகளை நீக்க நிபுணத்துவ ஆலோசனை மூலம் வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்ள முடியும்.

மன அழுத்தத்துக்கு வைத்திய ஆலோசனையை நாடவும். உடலுறவில் நாட்டமின்மையை ஏற்படுத்தும் மருந்துகளை மருத்துவரின் அறிவுரைப்படி தவிர்த்து அவற்றுக்குப் பதிலாக வேறு மருந்துகளைப் பாவிக்கலாம். மதுப்பாவனையை முற்றாக நிறுத்த வேண்டும்.

உடலுறவில் நாட்டத்தை அதிகரிக்கச் செய்ய மருந்து, ஆண்குறி விறைப்பைப் பேணும் மருந்து போன்றவற்றை வைத்திய ஆலோசனைப்படி பயன்படுத்தலாம்.

தன்னம்பிக்கையை வளர்ப்பதும் சுயமதிப்பீட்டை அதிகரிப்பதும் தாழ்வு மனப்பான்மையையும் பதகளிப்பையும் இல்லாமற் செய்யும்.

இருதயநோய், உயர்குருதியமுத்தம், நீரிழிவு, தைரொயிட் சுரப்பி நோய் போன்றவற்றை உரிய மருந்துகளைப் பயன்படுத்துவன் மூலம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும்.

தம்பதியரிடையே உறவு நிலையையும் புரிந்துணர்வையும் சுமுகமாகப் பேணவும். உடலுறவின் போதான நோ, குடும்பக் கட்டுபபாட்டு முறை தொடர்பாகப் பெண் நோயியல் நிபுணரின் ஆலோசனையைப் பெறவும்.

வைத்திய கலாநிதி
யோ.சிவாகரன்

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**